# வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்



## ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

9 ஆந் தரம்

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

## தரம் 9

## ஆசிரியர்அறிவுரைப்பு வழிகாட்டி

(2010 இல் இருந்து அமுலுக்கு வரும்)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

வாழ்க்கைத்தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்

தரம் 9

ஆசிரியர்அறிவுரைப்பு வழிகாட்டி

முதற்பதிப்பு 2009

© தேசிய கல்வி நிறுவகம்

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# முகவுரை

புத்தாயிரமாண்டில் முதலாவது கலைத்திட்டச் சீர்திருத்தம் இன்றைய பாடசாலைக் கல்வி முறையிலுள்ள சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நடைமுறைப்படுத்தப் படுகிறது. சிந்திக்கும் ஆற்றல்களும் சமூக ஆற்றல்களும், தனியாள் ஆற்றல்களும் நலிவடைவதால் இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டும், அதற்கான காரணங்களை ஆராய்ந்தும், அவ்வாறான நிலைமைகளை வெற்றி கொள்ளத் தேவையான பின்னணிகளை உருவாக்கவும் இக்கலைத்திட்டச் சீர்திருத்தம் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆசிய வலய நாடுகளுடன் ஒப்பிடும்போது இதற்கு முன்னர் எமது நாடு கல்வியில் முன்னணி வகித்தது. ஆனால் இன்று இவ்வலயத்தின் அநேக நாடுகள் இலங்கையை விட கல்வியில் முன்னேற்றமடைந்துள்ளன. தெரிந்த விடயங்களை மெருகூட்டுவதிலும், ஏற்கெனவே முடிவு செய்தவற்றைக் கற்பதிலும், இருக்கும் விடயங்களை மீண்டும் அதே அடிப்படையில் கட்டியெழுப்புவதிலும் கல்வியியலாளர்கள் அண்மைக்காலமாக ஈடுபட்டமை இதில் தாக்கத்தைச் செலுத்திய காரணிகளில் சிலவாகும்.

இவ்விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு தெளிவான கோட்பாட்டின் கீழ் புதிய கலைத் திட்டத்தை உருவாக்குவதில் தேசிய கல்வி நிறுவகம் முயற்சித்துள்ளது. தெரிந்தவற்றை மாற்றியமைத்தும், புதியவற்றைக் கண்டறிந்தும், எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை உருவாக்கியும் நாளைய வெற்றிக்காகத் தயார் நிலையில் இருக்கக்கூடிய மாணவர் குழுவை உருவாக்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நிலைமையை வெற்றி கொள்ள ஆசிரியர் வகிபாகத்தில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதைப் புதிதாகக் கூறவேண்டியதில்லை. இதுகாலவரை எமது வகுப்பறைகளில் நிலவி வந்த அறிவைக் கடத்தல் வகிபாகம், பரிமாற்ற வகிபாகம் என்பவற்றுக்குப் பதிலாக மாணவர் மைய, தேர்ச்சிமைய, செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கிப் புதிய ஆசிரியர் வகிபாகத்தில் பயிற்சி பெறவேண்டிய நிலை இன்றைய ஆசிரியர் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

புதிய நிலைமைகளுக்கு இசைவாக்கம் அடைவதற்கான பல அறிவுறுத்தல்கள் அடங்கிய இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி விளைதிறன்மிக்க ஆசிரியராக, புத்தாயிரம் ஆண்டில் வருவதற்கு உதவும் என நாம் நம்புகிறோம். இந்த அறிவுறுத்தல்களைப் பரிசீலிப்பதன் மூலம் அன்றாடக் கற்பித்தல் செயற்பாடுகளைப் போன்றே மதிப்பீட்டுச் செயற்பாடுகளையும் இலகுவாக்கிக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கெனத் தரப்பட்டுள்ள தேடலுக்கான அறிவுறுத்தல்கள், தரஉள்ளீடுகள் என்பன ஆசிரியர் செயற்பாடுகளை இலகுவாக்கும் என்பது திண்ணம். அத்துடன் நேர ஒதுக்கீட்டின்போதும் வளப்பங்கீட்டின் போதும் உள்ளக மேற்பார்வையின் போதும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்க பல தகவல்களை அதிபர்களிடம் கொண்டு செல்வதற்கு இவ்வழிகாட்டி உதவும்.

பாடசாலை மட்டத்திலான மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு மட்டுமன்றி வெளியக மேற்பார்வையாளர் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடும் பல்வேறு தரத்திலான அதிகாரிகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் இவ்வழிகாட்டியைத் தயாரிப்பதில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த நிறுவன உத்தியோகத்தர்களுக்கும், பல்வேறு வழிகளில் சேவை செய்த வளவாளர்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

**பேராசிரியர் லால் பெரேரா**

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கைகளுக்கு அமையப் பாடசாலைக் கலைத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒரு முறை காலத்திற்கு இயைந்ததாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்த கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இப்பாடத்திட்டமும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயங்களும் அவற்றின் உள்ளடக்கமும் வழங்கப்பட்டு, அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இந் நடைமுறைகள் காரணமாக ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரையொன்று உருவானது.

புதிய கலைத்திட்டச்சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப்பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ளவேண்டிய தேர்ச்சிகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய அணுகுமுறை மூலம் அதிகமான விடயங்களைக் கற்று, அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற, தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றை உருவாக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், புதிய பாடத்திட்டத்தைக் கையாள்கின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்வதுடன், அதில் விஷேட கவனமும் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில், புதியதொரு கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்துதல், நூல்களை வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் முதலான கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காணமுடியும். இதற்கு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடநூலை உசாத்துணையாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்காகவும் முழுமையாகவும் மாணவர்களை அடையச் செய்வதே ஆசிரியர்களின் பணியாகும். இந்தவகையில் ஆசிரியரின் வகிபாகம் புத்தறிவுகள் மூலம் போசிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றற் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாள்வதற்கும் இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளுங்கள். இதனூடாக, புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராகச் செயற்பட்டு பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கின் போது, மாணவர் எப்பொழுதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். அதனால், அவர்களது திறமைகள், ஆற்றல்கள், மனப்பாங்குகள் என்பன வெளிக்கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள்.

மாணவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் மாணவர் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், இடர்ப்பாடுகளை நீங்கள் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிகளுக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்படும் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங் கானது சிறந்த கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக் கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகளைத் தயாரித்து, மாணவரைப் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுத்துவதில் உங்களது கவனத்தைச் செலுத்துங்கள்.

இதனூடாகப், புதிய உலகிற்குப் பொருத்தமான தேர்ச்சிகளுடைய மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கலாம். அதற்குப் பொருத்தமான ஆசிரியர் வகிபாகமும், வகுப்பறையும், புதிய கற்றல் கலாசாரத்திற்கு ஏற்ப உருவாக வேண்டுமென எதிர் பார்க்கின்றேன்.

**விமல் சியம்பலாகொட,**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

# அறிமுகம்

வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் எனும் பாடமானது 9 ஆந் தரத்திற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. புதிய பாடத்திட்டம் இரு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அதன் முதற் பகுதி வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடப்பரப்புக்குரிய கருப்பொருள்களையும் இரண்டாம் பகுதி குடியுரிமைக்கல்விப் பாடப்பரப்புக்குரிய கருப்பொருள்களையும் கொண்டமைந்துள்ளது.

முதற் பகுதி ஆறு பிரதான தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. சுய விளக்கத்துடன் செயற்படுதலானது, மிகவும் பரந்த முறையில் விருத்தி செய்யப்படுவதுடன் போட்டாபோட்டி நிலவும் சமூகத்தில் சிறந்த வாழ்க்கைப் பழக்கவழக்கங்களை விருத்தி செய்தல், விளைதிறன் மிக்க தீர்மானங்களை எடுத்தல், முரண்பாடுகளைச் சமாதான/ நேயமான முறையில் தீர்த்துக்கொள்ளல், வேலையுலகிற்கு தயாராதல் ஆகிய பரப்புக்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாளாந்த வாழ்க்கையில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், சவால்களுக்கு வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக ஆற்றல்களை வளர்த்தலே எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பாடத்திட்டத்தின் இரண்டாம் பகுதி, குடியுரிமைக்கல்வி தொடர்பானதாகும். கூட்டுச்சேர்ந்து செயற்படுவதன் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், சமூக நன்மைக்காகப் பங்களிக்கத்தக்க சமூக, பொருளாதார, தொழினுட்ப மாற்றங்களுக்கு இசைவடைந்து செயற்படுவதற்குத் தேவையான ஆற்றல்களை விருத்தி செய்தல், ஜனநாயக ஆட்சி முறையொன்றினை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்குப் பங்களித்தல், பொது நன்மைக்காகச் செயற்படும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகளில் பங்களித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பாடத்திட்டத்தைக் கற்பதனூடாக மாணவர் ஆளுமையையும் சமூகத் திறன்களையும் விருத்தி அடைவதோடு, மானிடப் பண்புகள் நிறைந்த சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய சிறந்த பிரஜைகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

| பாடம் | தவணை | தேர்ச்சி மட்டம் எண்ணிக்கை | பாடவேளை |
|---|---|---|---|
| பாகம் 1 வாழ்க்கைத் தேர்ச்சிகள் . | 1 ஆந் தவணை<br>11 ஆந் தவணை<br>111 ஆந் தவணை | 9.1.1, 9.1.2, 9.1.3, 9.1.4<br>9.2.1, 9.2.2, 9.3.1, 9.3.2, 9.3.3, 9.4.1, 9.4.2<br>9.5.1, 9.5.2, 9.5.3, 9.6.1, 9.6.2 | 08<br>12<br>10 |
| பாகம் 11 குடியுரிமைக் கல்வி | 1 ஆந் தவணை<br>11 ஆந் தவணை<br>111 ஆந் தவணை | 9.1.1, 9.1.2, 9.1.3, 9.2.1, 9.2.2<br>9.2.2, 9.2.3, 9.3.1, 9.3.2<br>9.3.2, 9.3.3, 9.4.1, 9.4.2, 9.4.3 | 12<br>08<br>10 |

இந்த ஆசிரிய வழிகாட்டல் நூலின் மூன்றாம் பாகம், கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டுக்கான கருவிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு தவணைக்காக அவ்வாறான மதிப்பீட்டுக் கருவிகள் ஒன்று வீதம் இந்த வழிகாட்டல் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப எதிர்பார்க்கப் படும் கற்றல் தேர்ச்சிகளை விருத்தி செய்யவும் அளவிட்டுக் கொள்ளவும் ஏற்ற கற்றல், கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்கிப் பயன்படுத்த உங்களால் இயலும்.

6, 7, 8, 9 தரங்களில் பயின்ற வாழ்க்கைத் தேர்ச்சி மற்றும் குடியுரிமைக் கல்விப் பாடமானது, 10, 11 ஆம் தரங்களில் முதலாவது பாடப் பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்க வேண்டிய விடயமாக குடியுரிமைக் கல்வியும் மக்கள் ஆட்சியும் என்ற பாடப் பெயரில் தொடர்ந்தும் செயற்படுகின்றது.

இந்த ஆசிரிய வழிகாட்டி தொடர்பான அபிவிருத்தி சார் ஆலோசனைகள் இருப்பின் எமக்குச் சமர்ப்பிக்குமாறு தயவுடன் வேண்டிக் கொள்கிறோம். இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நூலைத் தயாரிப்பதில் பல்வேறு விதத்திலும் துணைபுரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாவதாக.

## வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும்

**ஆலோசனை :**

| | | |
|---|---|---|
| பேராசிரியர் லால் பெரேரா | பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |

**மேற்பார்வை :**

| | | |
|---|---|---|
| திரு.விமல் சியம்பலாகொட | உதவிப் பணிப்பாளர் நாயகம் | - தே.க.நி |

**இணைப்பாக்கம் :**

| | | |
|---|---|---|
| திரு.ஏ.எல்.எஸ்.அபேவிக்ரம | செயற்றிட்ட தலைவர் | - தே.க.நி |
| திரு.எம்.கே.கே.பிரியந்த | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |

**எழுத்தாளர் குழு :**

**உள்வாரி**

| | | |
|---|---|---|
| திரு.ஏ.எல்.எஸ்.அபேவிக்ரம | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திரு.எம்.கே.கே.பிரியந்த | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி.எம்.பி.ஆர். தனவர்தன | பிரதம செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி. டி.எச்.சி.என். தர்மபால | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி.டப்ளியு.ஏ.கே சுதர்சனி | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி யு.ஏ.பீ.குணதிலக்க | செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திரு.எஸ்.கருணாகரன் | உதவி செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |
| திருமதி.எச்.ஏ. பிரியதர்ஷனி | உதவி செயற்றிட்ட அதிகாரி | - தே.க.நி |

**வெளிவாரி**

| | |
|---|---|
| கலாநிதி.எச்.டீ.ஏ.பட்டுவிட்டகே | ஓய்வுபெற்ற பணிப்பாளர் - தே.க.நி |
| திரு.சி.எஸ்.ஜயசிங்க | முகாமையாளர் ஆசிரியர் மத்திய நிலையம் - ஹொரணை |
| செல்வி. ஐ.ரணசூரிய | உப பீடாதிபதி, ஊவா தேசிய கல்வியியல் கல்லூரி |
| திருமதி.எம்.எம்.ஜீ.சி.ரத்னாயக்க | ஆசிரியர் சேவைI - பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி |
| செல்வி. ஏ.ஏ.கல்யாணவதி | ஆசிரிய ஆலோசகர் - பிலியந்தல வலயம் |
| திரு.ஜே.எம்.எம்.யைசுந்தர | ஆசிரிய ஆலோசகர் - நிக்கவெரட்டிய வலயம் |
| திரு.ஏ.பீ.மல்லவாராச்சி | ஆசிரிய ஆலோசகர் - நிக்கவெரட்டிய வலயம் |
| திருமதி. பீ.பீ.மாலிக்கா | ஆசிரிய ஆலோசகர் - அம்பாந்தோட்டை வலயம் |
| திருமதி. என்.வன்னியாராச்சி | ஆசிரிய ஆலோசகர் - திக்வெல்ல வலயம் |
| திரு.என்.கே ஆராச்சி | ஆசிரியர் - பொல்கொட வித்தியாலயம், மஹகம |
| திருமதி.எஸ்.பீ.பிரேமவதி | ஆசிரியயை - சென்தோமஸ் வித்தியாலயம், மாத்தறை |
| திரு.என்.தர்மதாச | ஆசிரிய ஆலோசகர் - சிலாபம் வலயம். |
| திரு.எம் எச்.எம். யாகூத் | ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |
| திருமதி.எஸ்.பாலசுந்தரம் | ஓய்வுபெற்ற பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| என்.எம்.எம்.முஹ்யித்தீன் | ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி.எஸ்.ருகையா ஹஸ்மி | ஆசிரியை - பாபுல் ஹசன் மு.ம.வி - வரக்காப்பொளை |

**அட்டைப்படமும் சித்திரமும்**

| | |
|---|---|
| திரு.ரவீந்திர தேநுவர | உதவிச் செயற்றிட்ட அதிகாரி - அழகியற்றுறை - தே.க.நி |

| | | |
|---|---|---|
| **கனிணி பதிப்பாக்கம்** | செல்வி. சுபாஷினி ஶ்ரீதரன் | |
| **ஏனைய உதவிகள்** | செல்வி.எம்.என்.எப் ரிஹானா | - தே.க.நி |
| | செல்வி.ஏ.எல்.எஸ்.பி.அத்தபத்து | - தே.க.நி |
| | திருமதி.எஸ்.சமரக்கொடி | - தே.க.நி |
| | திரு.ஆர்.எம்.ருபசிங்க | - தே.க.நி |

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| விரிவான பாடத்திட்டம் | 1 - 14 |
| பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 14 |
| கற்றல் கற்பித்தல் முறைகள் | |
| - அறிமுகம் | 16 - 20 |
| - மாதிரிச் செயற்பாடுகள் | 22 - 180 |
| கணிப்பீடும் மதிப்பீடும் | 181 - 183 |
| கற்றல் கற்பித்தல் நீடிப்புக் கருவிகள் | 184 - 190 |

# 2.0 பாட நோக்கம் (பகுதி ஒன்று) வாழ்க்கைத் தேர்ச்சிகள்

- தமது இயலுமைகள், திறன்கள், உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து எதிர்கால வாழ்வின் இலக்குகளை வடிவமைத்துக் கொள்ளல்.
- நாளாந்தச் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு நிறைவேற்ற முற்படுதல்.
- மனவெழுச்சிகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள நெருக்கிடையை இழிவாக்குதல்.
- ஆளுமை வளர்ச்சிக்ககான செயற்பாடுகள், பொழுதுபோக்கு மற்றும் அழகியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு ஓய்வைப் பயனுள்ளவாறு கழித்தல்.
- சிறந்த ஆளிடைத் தொடர்புகளைப் பேணியவாறு பரிவுணர்வுடன் செயற்படல்
- பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்தல்.
- நாளாந்த கருமங்களின் போது உடன்பாடான மனப்பாங்குகளுடன் செயற்படுதல்.
- ஆய்ந்தோய்ந்தும் ஆக்க பூர்வமான சிந்தனையுடனும் செயற்படுதல்.
- தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்தவாறு தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தல்
- பயனுறுதி வாய்ந்த தீர்மானங்களை எடுப்பதனூடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.
- இடர்முகாமைத்துவத்துக்காக செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வதுடன் அனர்த்தங்களைத் தவிர்த்தலும் இழிவாக்கலும்
- தனியாட்கள் சார்ந்த மற்றும் சமூகஞ் சார்ந்த முரண்பாடுகளை இயன்ற அளவுக்குக் குறைத்தவாறு செயற்படுதல்.
- எதிர்கால வேலையுலகிற்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல்.

# பாட நோக்கம் (பகுதி இரண்டு) குடியுரிமைக்கல்வி

- பன்மைச் சமூகமொன்றில் ஐக்கியத்துடன் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளல்.
- மானிடப் பண்புகள் மற்றும் சமூக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு உகந்த பிரஜைகளை உருவாக்குதல்.
- ஒழுக்கத்திற்கும், சட்டத்திற்கும் மதிப்பளிக்கும் பிரஜைகளைச் சமூகத்திற்கு வழங்குவதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- தனியாட்கள் சார்ந்த, சமூகம் சார்ந்த செயற்பாடுகளின் போது பரஸ்பரம் ஒத்துழைத்துக் கருமமாற்றுதல்.
- இலங்கை மற்றும் உலக ஆட்சிக் கோலங்கள் தொடர்பாக விளங்கிக் கொள்ளல்.
- ஜனநாயக மூலதத்துவங்களுக்கும் மனித உரிமைகள், சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றை உருவாக்குதல்.
- சதா மாற்றமுறும் உலகின் எதிர்பாராத, தீமையான சந்தர்ப்பங்களை வெற்றி கொள்ளத் தேவையான சக்தியை விருத்தி செய்து கொள்ளல்.
- பரஸ்பரம் கடமைகள், பொறுப்புக்களுக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல்.
- சமூகத்தின் நன்மைக்காக, சமூக தாபனங்கள் அமைப்புக்களைப் பயன்படுத்த வழிப்படுத்துதல்.

# 9 ஆம் தரம் - வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும் (பகுதி 1)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.1 சுய விளக்கத்துடன் செயற்படுவார். | 9.1.1 தமது அறிவாற்றல்களை வெளிப்படுத்துவார். | • தனியாட்களில் பல்வேறு திறன்கள், ஆற்றல்கள்:<br>• தனியாட்களில் பல்வேறு திறன்கள், ஆற்றல்களை இனங் காணல்.<br>• ஒவ்வொரு தனியாரிடத்திலும் பல்வேறு திறன்கள், ஆற்றல்கள் காணப்படும்<br>• தமது ஆற்றல்கள், திறன்களை விருத்தி செய்து கொள்வதற் காகப் பயன்படுத்தத்தக்க மேலதிக கற்றல் முறைகள் உ-ம்:<br>  • வாழ்க்கை அனுபவங்கள்<br>  • பயிற்சி<br>  • நூல்கள்<br>  • இலத்திரனியல் ஊடகங்கள்<br>  • வளவாளர்களைச் சந்தித்தல்<br>  • தமது சிறப்பான திறன்கள், ஆற்றல்களை அடிப்படை யாகக் கொண்டு எதிர்கால வாழ்க்கைக் குறிக்கோள் களை உருவாக்கிக்கொள்ளல்<br>    • சுயவிருத்தி<br>    • ஆளுமை<br>    • வாண்மை/ தொழில் | 03 |
| | 9.1.2 வாழ்க்கையில் எதிர்நோக் கும் பல்வேறு அறைகூவல் களின் போது வெற்றிகர மாகச் செயற்படுவார். | • வாழ்க்கை நடத்தும்போது பல்வேறு அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமை, அது வாழ்க்கையின் இயல்பு<br>• ஒவ்வோர் அறைகூவலையும் வாழ்க்கையின் வெற்றிக்கான உந்துதல்களாக மாற்றியமைத்துக் கொள்ளல். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 9.1.3 சுதேசத்துவத்தைக் காத்து பூகோளக் கிராமத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் ஒருங்கு வாழ்ந்தவாறு செயற்படுவார். | • உலகம் தொடர்பான பரந்த நோக்கு<br>• இலங்கையின் சுதேச கலாசாரம், உற்பத்தி, சுதேசத்துவம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல்.<br>• சுதேச சட்டத்துக்கு அப்பாற் சென்று ஏனைய மேம்பட்ட பண்பாடுகளை இனங்காணலும் அவற்றின் மூலம் யாப்பினையும் அறிந்து கொள்ளல்<br>• ஒழுங்கு வாழ்தலானது உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தை இனங்காணல்.<br>• பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் சார்ந்திருத்தல்<br>- உலகில் எந்தவொரு தனியாளுக்கோ மக்கட் பிரிவினருக்கோ நாட்டுக்கோ தனித்திருக்க முடியாது. | 01 |
| | 9.1.4 தேவைப்படும் போதெல்லாம் உறுதிப்பாடான வகையில் செயற்படுவார். | • உறுதிப்பாடான தன்மை (Assertiveness) இனங்காணல்.<br>• தன்னுடன் உறுதிப்பாடு<br>• ஏனையோருடன் உறுதிப்பாடு<br>• தனது உணர்வுகளை தேவையான சந்தர்ப்பங்களில் தேவையான வகையில், பொருளுள்ள வகையில், ஒழுக்கம் பேணியவாறு முன்வைத்தல்<br>• உடன்பாடான மனப்பாங்குகளுடன் ஆய்ந்தோய்ந்து பார்த்து உறுதியான கொள்கைகளை பேணிச் செயற்படுதல். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.2 போட்டித் தன்மை வாய்ந்த உலகில் நல் வாழ்வை விருத்தி செய்து கொள்வார். | 9.2.1 போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை விசாரணை செய்வார். | • நல்வாழ்வின் முக்கியத்துவம்<br>- தனியானது விருப்புக்களின் பல்வகைமை<br>- சிக்கலான வாழ்க்கைக்கோலம்<br><br>• நல்வாழ்வின் பண்புகள்<br>- மகிழ்ச்சியுடன் இருத்தல்<br>- கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைதல்<br>- எளிமையான வாழ்க்கை வாழ்தல்<br>- நட்புணர்வு<br>- சமநிலையாக வாழ்தல் | 02 |
| | 9.2.2 நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பண்புகளைக் கடைபிடிப்பார். | • நல்வாழ்வின் பண்புகளை கடைபிடிக்காமையால் ஏற்படும் விளைவுகள்<br>• ஏற்படும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நல்வாழ்வின் பண்புகளை அன்றாட வாழ்வுடன் பொருந்தியமைத்துக்கொள்ளுதல். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.3 வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார். | 9.3.1 வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் நுணுகியாய்வார். | • சவால் என்பதை இனங்காணல்<br>- குறித்ததொரு நோக்கை வெற்றிகரமாக அடைந்து கொள்வதில் எதிர்ப்படும் தடைகள் அல்லது வரையறைகளுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றிகொள்வதற்கான திடசங்கற்பமே சவாலாகும். | 02 |
| | 9.3.2 பல்வேறு சவால்களின் போது தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார். | • சவால்கள்<br>- தனக்கு, தனது குடும்பத்தில், பாடசாலையில், சமூகத்தில், ஏனைய சந்தர்ப்பங்களில் | 01 |
| | 9.3.3 வாழ்வின் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை வெற்றிகரமாக எதிர் கொள்வார். | • தடைகளை வெற்றிகொள்வதற்கு ஆக்கபூர்வமான முறைமைகளை கையாண்டுபார்த்தல்.<br>• மாற்று வழிகளில் கவனஞ்செலுத்தல். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.4 இடர்முகாமைத்துவத்தை மேற்கொள்வார். | 9.4.1 விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுவார். | • நாம் எதிர்கொள்ளும் பல்வேறு விபத்துக்களை இனங்காணல்<br>• விபத்துக்களும் அனர்த்தங்களும் நிகழத்தக்க இடங்களை வகைப்படுத்தல்.<br>- வீடு<br>- பாடசாலை<br>- அயற் சூழல்<br>- வேலைத்தளம்<br>• மேற்படி இடங்கள் தவிர விபத்துக்கள் நிகழத்தக்க வேறு சந்தர்ப்பங்கள்<br>• இயற்கையாகவும் மனித செயற்பாடுகளின் விளைவாகவும் விபத்துக்களும் அனர்த்தங்களும் ஏற்படுதல்.<br>• உணவு மற்றும் ஔடதங்கள் தொடர்பான விபத்துக்களும் அனர்த்தங்களும்<br>• பாதகமான பழக்கங்களால் ஏற்படும் அனர்த்தங்கள் | 02 |
| | 9.4.2 விபத்துக்கள், அனர்த்தங்களின் போது புத்திசாலித்தனமாகச் செயற்படுவார். | • விபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளத்தக்க வழிமுறைகள்<br>• சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக அறிவூட்டம் பெறுதல்.<br>- வைத்தியசாலை<br>- பொலிஸ்<br>- தீயணைக்கும் பிரிவு<br>- இடர் முகாமைத்துவ நிலையம்<br>- ஏனைய நிறுவனங்கள்<br>• அவ்வச்சந்தர்ப்பங்களின் போது சமயோசிதமாகவும் நிதானமாகவும் செயற்படல். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.5 முரண்பாடுகளை சமாதானமான வகையில் தீர்த்துக்கொள்வார். | 9.5.1 முரண்பாடுகளின் தன்மையை விளக்குவார். | • முரண்பாட்டை வரைவிலக்கணப்படுத்தல்<br>• முரண்பாடுகளின் தன்மைகளை அறிந்து கொள்ளல்.<br>• முரண்பாட்டைப் பகுத்தாய்தல்<br>- காரணங்கள்<br>- பண்புகள் | 02 |
| | 9.5.2 தடைகளை வெற்றி கொண்டு முரண்பாடுகளைத் தீர்க்க முனைவார். | • முரண்பாட்டுத் தீர்வுக்கான தடைகள்<br>- இறுக்கமான நிலைப்பாடு<br>- ஒரே தீர்வில் தங்கியிருத்தல்<br>- மற்றைய தரப்பினரைத் தோற்கடித்து தான் வெற்றி கொள்ளல்.<br>• முரண்பாட்டுத் தீர்வொன்றின் சிறந்த பண்புகளை இனங்காணல்<br>- தொடர்பாடல்<br>- மாற்றுத்தீர்வுகளைக் கண்டறிதல்<br>- ஒத்துழைப்பு<br>- இரு தரப்பும் இணங்கத்தக்க தீர்வொன்றை நோக்கிச் செல்லல். (வெற்றி - வெற்றி தீர்வு)<br>• முரண்பாடு தீர்த்தல் திறன்கள்<br>- கலந்தாலோசித்தல்<br>- பரிவுணர்வுடன் செவிமடுத்தல்<br>- முரண்பாட்டைப் பகுத்தாய்தல்<br>- மாற்றுத்தீர்வுகளை இனங்காணல்<br>- உறுதிப்பாடான துலங்கல் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 9.5.3 முரண்பாட்டை இணக்கப் பாட்டுக்கு கொண்டு வருவார். | • இணக்கப்பாடு - அறிமுகம்<br>- முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்வதற்கு மூன்றாந் தரப் பொன்றின் உதவியை நாடல்.<br>• இணக்கப்பாட்டின் படிமுறைகள்<br>- பக்கச்சார்பற்ற முறையில் முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ள உதவுபவராக முன்வருதல்<br>- முரண்பாட்டை ஆராய்தல்<br>- தரப்புகளுடன் தனித்தனியாகக் கலந்துரையாடல்.<br>- மாற்றுத் தீர்வுகளை முன்வைப்பதற்கு இரு தரப்பின ரையும் தூண்டுதல்<br>- இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வுகள் தொடர்பாக இருதரப்பினரையும் தூண்டுதல்.<br>- அதனைச் செயற்படுத்தும் விதத்தைப் பிரேரித்தல் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.6 வேலையுலகிற்குத் தயாராகுவார். | 9.6.1 பல்வேறு தொழிற்துறைகளை இனங்கண்டு தமது ஆற்றல்களுக்கு ஏற்ப விருப்பமான தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு முனைவார். | • வாழ்க்கைத் தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல்.<br>- தமது அறிவாற்றல்களையும் திறமைகளையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் அறிந்து கொண்டு அதற்கேற்ப தொழிலொன்றை இலக்காகக் கொள்ளுதல்.<br>- தெரிவு செய்து கொண்ட தொழிலுக்கான பின்னணித் தகவல்களை தேடியாராய்தல்.<br>- அத்தொழிலுக்குரிய அடிப்படைத்திறன்களை விருத்தி செய்து கொள்ள முனைதல்.<br>- அடிப்படைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள முனைதல்<br>- சுயதொழில் வாய்ப்புகளில் கவனஞ் செலுத்துதல்<br>- வினைத்திறனுடனும் விளைதிறனுடைய வகையிலும் சுயதொழில் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்த முனைதல்<br>- தமது தொழில் முனைப்புக்கு அமைவாக எதிர்காலத்தில் தொழிலொன்றினைத் தெரிவு செய்துகொள்ள முனைப்புறுத்தல் | 02 |
| | 9.6.2 தொழில் அபிவிருத்திக்குத் தேவையான மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார். | - செயற்றிறன்<br>- விளைதிறன்<br>- தொழில் மகிமை<br>- பொருட்கள் சேவைகளின் பண்புத் தரம்<br>- தமது சேவைகளை உயரிய தரத்தில் வழங்க முன்வரல். | 02 |

# பகுதி II

## 9.1 நாம் வாழும் சமூகம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.1 கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வார். | 9.1.1 சமூக பாதுகாப்புக்கான தனியாளின் பொறுப்புக் களையும் கடமைகளை யும் நிறைவேற்றுவார். | 9.1.1 சமூகப் பாதுகாப்பு<br>• சமூகத்திற்கும் தனியாளுக்குமிடையிலான தொடர்பு<br>• சமூக பாதுகாப்பு - அறிமுகம்<br>• சமூகப் பாதுகாப்பிற்குப் பங்களித்தல்<br>• குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் | 08 |
| | 9.1.2 சமூக பாதுகாப்பின்மீது பங்களிப்புச் செய்யும் பல்வேறு நிறுவனங்களை அறிந்து பெருமிதங் காண்ட பிரசை என்ற வகையில் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார். | 9.1.2 சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள பொறிமுறைகள், சட்டதிட்டங்கள் மற்றும் அவற்றொடிணைந்த தனி ஆட்களின் பொறுப்புகளும்<br>- பொலிஸ்<br>- பாதுகாப்புப் படையினர் | |
| | 9.1.3 கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சக வாழ்வு வாழும் பிரசையாகச் செயற்படுவார். | 9.1.3 கூட்டுறவு இயக்கம் - அறிமுகம்<br>• கூட்டுறவு இயக்கத்தின் தற்கால கடமைகளும் பொறுப்புகளும்<br>– பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், பிரதேச அமைப்புக்கள் ஊடாக | |

## 9.2 சமகால சமூக மாற்றம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.2 சமூக நன்மை மீது, பங்களிக்கும் தொழினுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார். | 9.2.1 சமகால மாற்றங்களுக் கூடாக தனியாள், சமூக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மாற்றங்களை விசாரணை நுணுகியாய்வார். | 9.2.1 தொழினுட்ப மாற்றங்களும் அவற்றின் மீதான துலங்கல்களின் முக்கியத்துவமும்<br>• தொழினுட்ப மாற்றங்கள் - அறிமுகம்<br>• பல்வேறு ஆராய்ச்சிகள், தேடியாய்வுகள் ஊடாகக்கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புக்கள்<br>• தொழினுட்ப மாற்றத்துடன் கூடவே ஏற்படும் சமூக மாற்றங்கள்<br>• ஆக்கத்திறன் மிக்க பிரஜை என்ற வகையில் தொழினுட்ப மாற்றங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம். | 08 |
| | 9.2.2 பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார். | 9.2.2 பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள்<br>• விவசாயத்துறை<br>• கைத்தொழில் துறை<br>• சேவைகள் துறை | |
| | 9.2.3 புதிய தொழிற்சந்தைக்குப் பொருத்தமான வகையில் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அறிந்து அவற்றை விருத்தி செய்து கொள்வார். | 9.2.3 தொழிற்சந்தையும் அதன் புதியபோக்குகளும்<br>• விவசாயம்<br>• கைத்தொழில்<br>• சேவைகள் | |

## 9.3 ஆட்சியில் மக்களின் பங்குபற்றுகை

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.3 சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார். | 9.3.1 சனநாயக ஆட்சிமுறையொன்றின் அடிப்படைப் பண்புகளை பகுப்பாய்வு செய்வார். | 9.3.1 சனநாயக ஆட்சி முறையொன்றின் அடிப்படைப் பண்புகள்<br>• சனநாயகம் - அறிமுகம்<br>• சனநாயக ஆட்சி முறையொன்றின் அடிப்படைப் பண்புகளும் சனநாய ஆட்சி நடைபெறும் நாடுகளும்<br>• சனநாயக ஆட்சி முறையொன்றின் வெற்றிக்கு அடிப்படையான அம்சங்கள். | 08 |
| | 9.3.2 மக்கள் சமூகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஆற்றக்கூடிய கடமைகளையும் பொறுப்புக்களையும் மதிப்பிடுவார். | 9.3.2 அரசியல் கட்சிகள்<br>• அரசியல் கட்சிகள் - அறிமுகம்<br>• மக்கள் சமூகமொன்றில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் கட்சிகள் செய்யக்கூடிய கடமைகள், பொறுப்புக் கள் | |
| | 9.3.3 சனநாயக சமூமொன்றில் ஒரு நற்பிரசை என்ற வகையில் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார். | 9.3.3 வாக்குரிமையும் தேர்தல்களும்<br>• ஆட்சியில் மக்கள் பங்கேற்கும் சந்தர்ப்பங்கள்<br>• சர்வசன வாக்குரிமையும் அதன் முக்கியத்துவமும்<br>• தேர்தல்களும் தேர்தல்கள் தொடர்பாக மக்களின் உரிமைகளும் கடமைகளும் | |

## 9.4 உள்ளூராட்சி மன்றங்களும் மக்களின் பங்குபற்றலும்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| 9.4 பொது நன்மையின் பொருட்டான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார். | 9.4.1 தமது பிரதேசத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக ஆற்றப்படும் சேவைகள் தொடர்பில் நுணுகியாய்வார். | 9.4.1 உள்ளூராட்சி - அறிமுகம் நிறுவனங்கள், உறுப்பினர்களை தெரிவு செய்யும் விதம் | 06 |
| | 9.4.2 உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பிலான பொது மக்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார். | 9.4.2 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பும் அதிகாரங்களும் கடமைகளும் | |
| | 9.4.3 உள்ளராட்சி மன்றங்களின் சேவைகளை வினைத் திறனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு மக்களது பங்குபற்றலின் உள்ள முக்கியத்துவத்தை மதிப்பிடுவார். | 9.4.3 உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பில் பொதுமக்களின் கடமைகளும் பொறுப்புக்களும் | |

# 3.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

''வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்'' பாடத்தைப் பாடசாலையில் கற்பிக்கும் போது வகுப்பறைக்கு மட்டுப்படுத்தப்படாது தேவையான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிவாரி செயற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தல் முக்கியமாகும். பாட இணைச் செயற்பாடுகளிலும் வகுப்பறைக்கு வெளியேயான செற்பாடுகளிலும் மாணவரை ஈடுபடுத்தலானது பல்வேறு துறைகளைச் சேர்ந்த திறன்களை அவர்களிடத்தே விருத்தி செய்வதற்குப் பெரிதும் துணையாக அமையும். முடிவெடுத்தல், தலைமைத்துவம், பங்களிப்பு, ஒழுங்கமைப்பு, திட்டமிடல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் போது இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாணவரின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். விசேடமாக பாடசாலையில் செயற்படுகின்ற மறை கலைத்திட்டத்தினைச் செயற்படுத்தும்போது அதிபர் உட்பட எல்லா நிர்வாகத் தலைவர்களும் பிள்ளைகளிடத்தே வாழ்க்கைத்தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதில் கவனம் செலுத்துதல் முக்கியமானது.

இவை தவிர பல்வேறு சமூக நலன்புரிச் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்ததக் கூடியவாறு பாடசாலைக் கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் நவீனமயப்படுத்தல் அவசியமாகும். விசேடமாக ஆசிரியர், பெற்றோர் சார்ந்த மற்றும் சமூக வேலைத்திட்டங்களில் மாணவரின் பங்களிப்பையும் வழிகாட்டலையும் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் பாடசாலை கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். மேலும் பாடசாலையில் ''எனது நல்ல வேலைப் பதிவேடு'' எனும் நாட்குறிப்பேடு ஒன்றை ஒவ்வொரு மாணவனும் பேண வழிப்படுத்தப்படல் வேண்டும். இதனை இடைக்கிடையே பரீட்சிப்பதன் மூலம் மாணவரிடத்தே இதனை மீள வலியுறுத்துவது முக்கியமானதாகும்.

குறிப்பாக ''வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக்கல்வியும்'' எண்ணக்கருக்களை, வாழ்க்கை தேர்ச்சி பாட ஆசிரியர் மட்டுமன்றி ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அபிவிருத்தி செய்தலானது பாடசாலைக் கொள்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். அவர்களது ஒத்துழைப்பையும் இதற்காகப் பெறல் பொருத்தமானது. மேலும் இப்பாடத்துடன் தொடர்புடைய சேவைகளைப் பெறக்கூடிய வெளி வளவாளர்களதும் நிறுவனங்களதும் பங்களிப்பை இயன்றளவுக்கும் பெற முனைய வேண்டும். வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியேயும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் விளையாட்டுத் திடல், சிற்றுண்டுச்சாலை, பொது இடங்கள், காலைக்கூட்டம், பாடசாலையின் பல்வேறு பணிகள், நிகழ்வுகளின் போது மாணவரது நடத்தைகளினூடாக வாழ்க்கைத் தேர்ச்சிகள் வெளிக்காட்டுப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பாடத்தைக் கற்பதன் விளைவாக பாடசாலையில் ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் குறைவடைவதோடு, மாணவர் மகிழ்வுடன் கற்கத்தக்க அவர்களது விருப்புக்குரிய ஒரு சூழல் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் முறையியல்

# கற்றல் கற்பித்தல் முறையியல்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மையக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்றல் வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திசார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிந்துள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்பக் கட்டமாக அமைகிறது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாறப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர்- மாணவர் இடைத்தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத் திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) 'ஈடுபடுத்தும் படி' (Engagement Step) எனப்படும். இப்படியின் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல்/ படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல்/ பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள்/ கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
- தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்குப் பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாகக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறான செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிமடுத்தல், ஏனையோருடன் கூட்டாகச் செயற்படல், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும். இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்கள் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப்பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகிறது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்தவற்றையுயும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் இதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது. எவ்வாறாயினும், இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்காகக் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாடுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விவரிக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் வகிபாக பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின்போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப் படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாவதற்கும் இடம் ஏற்படுகிறது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும் போது நிலைமாற்ற வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

## உத்தேச கற்றல் கற்பித்தல் முறையியல் (வாழ்க்கைத் தேர்ச்சிகள்)

வாழ்க்கை தேர்ச்சிகள் கற்பிக்கும் பாடத்திட்டத்தை செயற்படுத்தும்போது ஆசிரியரின் கற்பித்தலை விட மாணவரின் கற்றலுக்கே முக்கியமாக இடமளிக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இப்பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் நபரின் அபிவிருத்தி மூலம் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதாயின் பிள்ளைகளினுள் தேர்ச்சிகளை விருத்தி செய்தல் வேண்டும். அவ்வாறான ஆற்றலை வளர்க்க கற்றல் கற்பித்தல் சூழல் ஒன்றை நிர்மாணித்தல் மிக முக்கியமாகும்.

புதிய பாடப் புலத்தினுள் கற்றல் கற்பித்தல் உத்திகள், மிக நெகிழ்ச்சியுடன் கூடியனவாக இருத்தல் வேண்டும். விரிவுரைகள், கலந்துரையாடலிலும் பார்க்க நடைமுறை சமூகத்திற்கு மிகவும் உசிதமான உயிர்ப்புள்ள வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுத் தரல் பொருத்தமானது.

விசேடமாக ஒத்தாசையுடன் கூடிய குழு முறை மூலம் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பிள்ளைகளினுள் சமூகத் திறன்களை வளர்க்க எதிர்ப்பார்க்கப்படுகின்றது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின்போது வகுப்பறை, பாடசாலை சமூகம், பாடசாலை சூழல், அயற் சூழல், அயல் சமூக நிறுவனங்கள் மூலம் உயிர்ப்புள்ள கற்றல் அனுபவங்களைப் பெறப் பயன்படுத்துவார்.

இவ்வாறான கற்றல் கற்பித்தல் சூழலினுள் அவதானிப்பு நிகழ்வுக் கற்கை, விளையாட்டு, பங்கேற்று நடித்தல், நேர்காணல், ஆய்வு, கண்டறிகை, சுயகற்கை செய்து பார்த்தல், சிந்தனைக் கிளர்வு கலந்துரையாடல், கண்காட்சி, செயற்றிட்டம், களக்கற்கை போன்ற கற்றல் கற்பித்தல் முறைகளை விருப்பிற்கேற்றவாறு பயன்படுத்தலாம்.

மேற்படி கற்றல் கற்பித்தல் முறையியலை நிலைமாற்றும் ஆசிரிய வகிபாகத்தின்போது இலகுவில் பயன்படுத்தலாம், இதன்படி இவ்வெல்லா கற்றல் கற்பித்தல் முறையியலையும் பயன்படுத்தும் படிகளை, கண்டாய்வுகளை விளக்குதல், விரிவாக்கம், மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தியபடி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை கருத்துள்ளதாக்கலாம்.

# உத்தேச கற்றல் கற்பித்தல் முறையியல் (குடியுரிமைக்கல்வி)

நெடுங்காலமாக வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயன்முறையின் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள விரிவுரை முறையை மேலும் முக்கிய ஒரு கற்பித்தல் உத்தியாகப் பயன்படுத்த இங்கு வலியுறுத்தப்படமாட்டாது. இங்கு மாணவர் போட்டிச் சூழலுக்கு இட்டுச் செல்லப்படுவதற்குப் பதிலாக கூட்டுணர்வு, வேலையுலகுக்குத் தேவையான தேர்ச்சிகள் ஆகியவற்றை விருத்தி செய்யத்தக்க மகிழ்ச்சிகரமான ஒரு கற்றல் சூழலை ஏற்படுத்தத்தக்க சுய கற்றலைத் தூண்டும் கற்றல் முறைகளின்பால் எமது கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். குடியுரிமைக்கல்விப் பாடத்தின் இறுதியான நோக்கம் மானுடப் பண்புகளைக் கொண்ட அமைதியாக கூடிவாழத்தக்க எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதாகும். இதற்கு செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. எனவே பாட விடயங்களைக் கற்பிப்பதற்கு மேலாக செயன்முறை அனுபவங்களைக் கற்றல்-கற்பித்தல், மதிப்பீடு ஆகிய சுய ஆக்க வகுப்பறை செயன்முறையை ஒழுங்கு முறையை ஒழுங்குசெய்தல், தொடர்புகளைப் பேணுவதால் மாணவரின் சமூகத்திறன்கள் விருத்தியையும் சனநாயகப் பெறுமானங்களுடன் தொடர்புடைய நடத்தைக் கோலங்கள் விருத்தியடையத்தக்கவாறு கற்றல் நிகழ்வுகளினூடாக அனுபவங்களை விருத்தி செய்வதற்காக வகுப்பறைக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துவதற்கு அச்செயற்பாடுகளை மாணவரது வயது மட்டத்திற்குப் பொருத்தமானவாறு ஒழுங்கமைத்துக் கொள்வதற்குமாக ஆசிரியர்கள் நன்கு திட்டமிட்டுச் செயற்படுத்தல் வேண்டும்.

விடயங்களைக் கற்பிப்பதை விடுத்து சுயமாகக் கற்றல், தகவல் சேகரித்து அவற்றைப் பகுப்பாய்தல், குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், திறமை விருத்திக்கு ஏதுவாகும் வகையில் தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல் ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல், ஒழுக்கமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளல் போன்ற பண்புகளை மாணவரிடத்தில் விருத்தி செய்வதற்கு, செயன்முறைச் செயற்பாடுகள் இன்றியமையாதவை. இதற்காக வகுப்பறையினுள்ளும் அதற்கு வெளியேயும் ஆசிரியரது வழிகாட்டல் அவசியமானது. பின்வரும் கற்றல்-கற்பித்தல் முறைகள் குடியுரிமைக் கல்விப்பாடத்தைக் கற்பிப்பதற்கு விதந்துரைக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களை அமர்வுகளுடாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அவதானித்தல்
ஆராய்வு
நேர்காணல் மூலம் தகவல் சேகரித்தல்
தகவல்களைப் பகுத்தாய்தல்
களவேலை
சிறுவர் பாராளுமன்றம், நலன்புரிச்சங்கம், சிரமதான பாசறை, உழைப்பின் மகத்துவப் பாசறை, மாணவர் படையணி, சாரணர் பாசறை
நோயாளருக்குப் பணிவிடை செய்தல், அனர்த்த முகாமை
பல்வேறு சங்கங்கள், கழகங்கள், சமூக நலனோம்பல், சூழலைக் கற்றல், பண்டைப் பெருமை மிக்க வளங்களைக் காத்தல்
செயற்றிட்டங்கள், தேடியாய்ந்து கற்றல் முறை, கண்காட்சிகள்
பிரச்சினைத் தீர்த்தல் முறை, வினாவிடை முறை, சுவர்ப்புதினத்தாள்
வகுப்பறையில் நடைமுறைப்படுத்தும் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளோடு மேற்படி கற்றல் கற்பித்தல் உத்திகளைத் தருணத்திற்கேற்றவாறு பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

**வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும்**
**ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி**
**முதலாம் பாகம் - வாழ்க்கைத் தேர்ச்சிகள்**

# 9.1 சுயவிளக்கத்துடன் செயற்படுவார்

**அறிமுகம்**

குழந்தை பிறப்பிலே பலதரப்பட்ட அறிவாற்றல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வுலகில் பிறக்கின்றது. படிப்படியாக அவ்வறிவாற்றல்கள் பிள்ளையிடத்தில் திறன்களாக மிளிரத் தொடங்குகின்றன. தனியாளின் ஆளுமை விருத்தியில் அவனின் உடல், அறிவு, சமூக, ஆன்மீக ரீதியான திறன்கள் சிறுவயதிலிருந்தே விளக்கம் பெற்று விருத்தி செய்ய வேண்டியுள்ளது. ‘‘அறிவு’’ மாத்திரம் விருத்தி பெறச் செய்வதை நோக்காகக் கொண்ட முறைக்குப் பதிலாக ஒவ்வொரு துறையிலும் விருத்தியை ஏற்படுத்துவது அத்தியாவசியமாகும்.

நவீன உளவியல் அறிஞர்களின் கருத்துப்படி ஒரு தனியாளிடத்தில் அறிவாற்றல் பல்வேறுபட்டதாக காணப்படுகிறது. உள்ளார்ந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் விசேட திறனைக் காட்டுவர். அல்லது பல துறைகளில் விசேட திறன்களை வெளிப்படுத்துவர். மிகவும் குறைவானோர் எல்லாத் துறைகளிலும் தமது திறன்களைக் காட்டுவார்கள். அத்துடன் அனைத்து திறன்களும் உள்ளார்ந்த ரீதியான அறிவாற்றல் திறன்களை சந்தர்ப்ப சூழல் என்பவறறுடன் பொருத்தப்பாடாக மிளிரச் செய்வதினாலேயே வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே ஆசிரியர்களாகிய நாம் பிள்ளைகளின் அறிவாற்றலை இனங்கண்டு விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

**தேர்ச்சி** :- சுயவிளக்கத்துடன் செயற்படுவார்

**தேர்ச்சி மட்டம்** :- தமது அறிவாற்றல்களை வெளிப்படுத்துவார்.

**பாட உள்ளடக்கம்** :-

- பல்வேறு தனியாள் திறன்களையும் இயலுமைகளையும் அறிந்து கொள்ளல்.
- சகல மனிதர்களிட.மும் அவர்களுக்கேயுரிய திறன்களும் இயலுமைகளுமுள்ளன.
- தனியாளின் திறன்களையும் இயலுமைகளையும் அறிந்திருப்பதன் முக்கியத்துவம்
- தனியாள் இயலுமை தொடர்பில் எம்மிடம் நிலவும் சம்பிரதாய பூர்வமான கருத்துக்களுள்ளன.
- தற்கால சிக்கலான சமூக கலாசாரத்தில் எழுந்துள்ள பல்வேறு துறைகளுக்குரிய பல்வேறு அறிவாற்றல்களை அறிந்து கொள்வதன் முக்கியத்துவம்

☞ மனிதரிடம் உள்ள திறமைகளை விருத்தி செய்வதற்காக பல்வேறு கற்றல் முறைகளை உருவாக்கலாம்.

☞ வாழ்க்கை அனுபவங்களுடன் கூடிய கற்றல் ஒருபோதும் மறக்கப்படுவதில்லை. இதன்மூலம் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றிக்கொள்ள முடியும்.

☞ குழந்தை மற்றும் பிள்ளைப் பருவங்களில் பெற்றோர், சகோதரர்கள், ஆசிரியர்கள், முதியோர்களின் பாதுகாப்பையும் அவர்களின் அறிவு என்பவற்றின் மீது அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ இதனைத் தொடர்ந்து சுயமாக கருமமாற்றுவதற்குரிய அறிவு முதிர்ச்சியடைந்ததன் பின் தான் சுதந்திரமாக செயல்பட்டு கருமங்கள் தொடர்பாக அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

☞ ஏனையோர்களின் வாழ்க்கை அனுபவங்களாயினும் எமக்கு படிப்பினையாகவும் முன்மாதிரியாகவும் இருத்தல்.

☞ வாழ்க்கை அனுபவங்கள் குறைவாக இருந்தால் சமூகத்தில் சேர்ந்து வேலைசெய்யும்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடலாம். அச்சந்தர்ப்பங்களில் சுயாதீனமாக நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகலாம்.

☞ தனது திறமைகளையும், ஆற்றல்களையும் சமூகத்தின், குடும்பத்தினூடாகப் பெறாவிடினும் தான் பிரதிநிதித்துவம் செய்யும் சமூக குழுவூடாகவும் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.
உதாரணம் :- அழகியல், தொழினுட்ப திறன்கள்,

- ☞ இத்துறைகள் அநேகமாக வாழ்க்கை அனுபவங்களிலேயே பெறப்படுகின்றன.

- ☞ திறமைகளை விருத்திசெய்து கொள்வதற்காக சமுதாயத்திலே பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு தனது திறன்களை மேலும் வளப்படுத்திக் கொள்ள முடிகிறது. அதனூடாக எதிர்கால வேலையொன்றிற்குரிய திறன்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- ☞ ஏதோ ஒரு பயிற்சியை பெற்றுக்கொள்ள முயற்சிக்கும்போது பண வருவாய் அல்லது வேறு பிரதிபலன்களைப் பற்றி சிந்திக்க வேண்டாம். அப்பயிற்சியினூடாக தம் திறமைகளை மேம்படுத்திக் கொள்வதைப் பற்றிச் சிந்தியுங்கள். பயிலுநர் என்ற வகையில் நீங்கள் பெறும் பயிற்சியை எதிர்கால முதலீடாகக் கருதுங்கள்.

- உங்கள் திறமைகளை மேலும் விருத்தி செய்துகொள்வதற்கு இலகுவாக பயன்படுத்திக்-கொள்ளக்கூடிய ஊடகம் என்ற வகையில் புத்தகங்கள் முக்கியம் வாய்ந்தவை.

- ☞ தன்னிடமுள்ள திறமைகள்/ துறைசார் புத்தகங்களை வாசித்து அதனூடாக தனது அறிவை விரிவுபடுத்திக் கொள்ள முடியும்.
- ☞ மேலும் பல்வேறு பாடநெறிகள் மற்றும் துறைகள் சார்ந்த புத்தகங்களைப் பரிசீலித்து அதனூடாகவும் தனது திறமைகளை விருத்தி செய்துகொள்ள முடியும்.

- ☞ இலத்திரனியல் ஊடகச் சாதனங்களின் பயன்பாட்டாலும் தம் திறமைகளை விருத்திசெய்து கொள்ளலாம். வீடியோ காட்சிகள், இணையம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி, செய்திப் பத்திரிகை போன்ற ஊடகங்களின் மூலமும் உங்கள் திறமைகளை வளர்க்கலாம்.

- ☞ அதன்மூலம் ஏனையோரின் அனுபவங்களை கண்டு தமது ஆக்கத்திறனுடன் திறமைகளை விருத்திசெய்து கொள்ளமுடியும்.

- ☞ பல்வேறு திறன்சார் துறைகளில் பிரபல்யம் பெற்றவர்களை சந்தித்து, அவர்களின் அனுபவங்களையும் அறிவையும் பெற்று தனது திறமை விருத்திக்கு பங்களிப்பு செய்துகொள்ளமுடியும்.

- தன்னிடமுள்ள விசேட திறமையை அடிப்படையாகக் கொண்டு தனது வாழ்க்கையின் இலக்கினைக் கட்டியெழுப்ப முடியும்.

    - ☞ உண்மையில் தன்னிடம் இல்லாதவை எவை?
    - ☞ தனக்கு இயலாதுவிடினும் விருப்பமற்றவை எவை?
    - ☞ இவற்றை தெரிந்தெடுப்பதனூடாக உண்மையில் எனது திறனாற்றலைக் கொண்டு வாழ்க்கையின் இலக்கினைக் கட்டியெழுப்ப முடியும். அத்துடன் தனியாள் விருத்தி, ஆளுமை விருத்தி சீவனோபாயத் தொழில் என்பவற்றை உருவாக்கிக் கொள்ள முடியும்.

### 9.1.2 பல்வேறு வாழ்க்கைச் சவால்களின்போது வெற்றிகரமாக செயற்படுவார்.

- ☞ வாழ்க்கை என்பது பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றுக்கு தீர்வு கண்டவாறு அல்லது குறைத்துக் கொள்ளலூடாக யதார்த்தத்திற்கு முகங்கொடுத்தலாகும்.
- ☞ இவை தொடர்பாக எமக்கு பல்வேறு தீர்மானங்களை தெரிவுசெய்வதில் கவனஞ்செலுத்த வேண்டியிருக்கும்.

- வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளின்போது துயரம், மகிழ்ச்சி, சோர்வு, நிந்தனை, புகழ்ச்சி, இலாபம், நட்டம் போன்றவற்றுக்கு எல்லோரும் முகங்கொடுக்கின்றோம். அச்சந்தர்ப்பங்களில் உணர்ச்சிவசப்படுவதை விடுத்து நிதானமாக செயற்படுவது முக்கியமாகும்.
- ஒவ்வொரு சவால்களின் போதும் எதிர்மறையாகக் கவனியாது நன்மையின் பக்கம் சிந்தித்து செயற்படுவதனூடாக வாழ்க்கையை வெற்றிகரமானதாக ஆக்கிக் கொள்ளமுடியும்.
- வாழ்க்கையில் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களில் அதன் பிரதிபலனாக புத்தாக்கக் கருத்துக்கள், புத்தாக்கங்கள் உருவாகும்.
- வாழ்க்கையின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியாமல் அதிலிருந்து விலகிச் செல்லல், பயந்து ஒதுங்குதல், நிராகரித்தல் போன்ற செயல்கள் மூலம் வெற்றிகரமான தோல்வியைக் கூடத் தழுவலாம்.
- நமது சிறுபராயத்திலிருந்தே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தவாறு அவற்றிற்கு பல்வேறு துலங்கல்களைக் காட்டுவதனூடாக பல்வேறுபட்ட வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம்.
- சிறுபருவத்தில் பல்வேறு கடினமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றிகரமாக சந்தித்து அதி உன்னதமான வெற்றி நிலையை அடைந்தவர்களுக்கான உதாரணங்களை எம்மைச் சார்ந்த சமூகத்திலே காணமுடியும்.

### 9.1.3 சுதேசத்துவத்தைக் காத்து பூகோளக் கிராமத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் ஒருங்கு வாழ்த்தவாறு செயற்படுவார்.

- தொழினுட்ப விருத்தியுடன் உலகின் தகவல் தொழினுட்பம் இன்றைய பொழுதில் ஏனையவற்றைப் புறம் தள்ளி பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இதனால் முழு உலகமும் பூகோள கிராமமாக மாற்றம் பெற்றுள்ளது. எந்த ஒரு தனி மனிதனுக்கும் தனித்து வாழ முடியாது என்பது போலவே புதிய பூகோள கலாசாரத்தின் வளர்ச்சியையும் தடுக்க முடியாது. அத்துடன் தன் தனித்துவத்தைப் பேணியவாறு தேசியத்தை மதித்து பரஸ்பரம் புரிந்துணர்வுடன் வாழ வேண்டுமென்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். பூகோள கலாசாரத்தின் பின்னே தொடர்ந்து செல்வதற்குப் பதிலாக அனைத்தையும் கருத்தாழ மிக்கதாக விசாரித்தவாறு விளங்கிக் கொண்டு வாழவேண்டுமென மாணவருள் உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

பாடல் வரிகள்

*நான்கு பக்கத்திலிருந்து வரும் காற்றின்*
*நீங்கள் வாழுமிடத்திலே தாழ்திறந்து வழிவிடுங்கள்*
*நாற்புறத்தாலும் நுழையுங்கள்*

எனப்படுவது மகாத்மா காந்தியின் கருத்தினால் பிறந்த கவிதையடிகளாகும். இங்கே முக்கியம் பெறுகிறது. இதன் மூலம் பூகோளக் கிமத்தின் உறுப்பினராகச் செயற்பட வேண்டியவிதம் நன்கு உறுதியாகிறது.

### 9.1.4 தேவையானவிடத்து உறுதிப்பாட்டுடன் செயற்படுவார்.

நிலைபேறு என்பது ஒரு தனியாளிடத்தில் இருக்க வேண்டிய விசேட திறனாகும். ஏனையோரின் ரிமைகளை மீறாத வகையில் தனது உரிமைகளை அனுபவிப்பதற்கு தனக்காக முன்வரவும். தனது நல்ல எண்ணங்களின்படி செயலாற்றுவதற்கு தனியாட்களைத் தூண்டும் நடத்தையாகவும் கூறலாம்.

ஏதும் ஒரு சவாலின் முன்னே ஒருவர் இரண்டு முறைகளில் அதனை தீர்க்க முயற்சிப்பார். அவையாவன பணிந்துபோதல் மற்றும் ஆக்ரோஷம். இவையிரண்டுக்கும் இடமளியாது சவால்களின்போது இது பணிந்து போதலுக்கும் ஆக்ரோஷத்துக்கும் இடையிலான நடுநிலைப்போக்காகும். தமக்காக நேரடியாக முன்னிற்கும், உரையாடும் பண்பு நிலைபேறாகும் எனலாம்.

பணிந்துபோகும் முறையானது தன்னைத் தானே இல்லாமல் செய்துகொள்ள முயற்சிக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தும். பிறர் கருத்தின்படி செயற்படுவதால் தாம் வெறுமனே பின்பற்றுபவராகவே மாறுவார். இது அவரது ஆளுமையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆக்ரோஷம் செயல் மூலம் தன்னை நிம்மதியற்று தடுமாற்றத்திற்குள்ளாகி வேறு நபர்களுக்கிடையிலான தொடர்புகளும் அறுத்து செல்ல காரணமாகலாம். இந்நிலைமையும் ஒரு நபரின் ஆளுமையைப் பாதிக்கும். ஒருவரில் சிறந்த தனித்துவத்தை ஏற்படுத்திக்கொளளும் விதமாக முழு ஆளுமை வளர்ச்சிக்கு நிலைபேறான செயற்பாட்டை தன்னுள் கட்டியெழுப்பிக் கொள்வது மிகவும் அவசியமானதொன்றாகும். தனக்குள் நிலைபேறான தன்மையைக் கட்டியெழுப்புவதிலும் மற்றையவர்களுடனான நிலைபேறான தன்மையைக் கட்டியெழுப்புவதிலும் ஒரு தனிநபர் வெற்றிகாண வேண்டும்.

- நிலைபேற்றுத் தன்மையை விளங்கிக்கொள்ளல்.
- தன்னுள் நிலைபேற்றுத் தன்மையை ஏற்படுத்தல்.
- ஏனையோருடன் நிலைபேற்றுத்தன்மையை ஏற்படுத்திக்கொள்ளல்.
- தனது எண்ணங்களை தேவையான இடத்தில் தேவைக்கு ஏற்பவும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பவும் நல்லொழுக்கத்தையும் பேணும் விதத்திலும் வெளிப்படுத்த வேண்டும்.
- உடன்பாடான மனப்பாங்குகளுடன் விமர்சன ரீதியாக உறுதியான கொள்கைகளின் அடிப்படையில் செயலாற்றல்.

## 9.1.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- சுயவிளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- தமது அறிவாற்றலை வெளிப்படுத்துவார்.

**செயற்பாடு** :- திறமைகளை வெளிப்படுத்துவோம்.

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- கடதாசி
- பெல்ட் பேனா
- தனது புகைப்படம் / உருவப்படம்
- கம்டேப் (ஒட்டும் டேப்)
- இணைப்பு 1.1.1.1. இணைப்பு 1.1.1.2

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 1.1.1.1**

- பல்வேறு திறன்களையுடைய வகுப்பு மாணவர்களிடையே பாடல் / நடனம் / அபிநயம் / கேலி / நடிப்பு போன்ற ஏதோ ஒன்றை முன்வைக்கச் செய்யுங்கள்.
- இணைப்பு 1.1.1.1 இல், குறிப்பிட்ட பல்வேறு அறிவுசார் திறன்கள் என்ன என்பதையும் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் அம்சங்களை வெளிப்படுத்தியவாறு கலந்துரையாடலை முன்வைக்கவும்.

☞ மனிதனின் திறமைகள் பல்வேறுபட்டவை.
☞ மனிதனுக்கு தனது திறமைகள் இயல்பாகவோ அல்லது பயிற்சியினாலோ கிடைக்கப் பெறுகின்றன.
☞ சிறுவயதில் வெளிப்பட்ட அல்லது இனங்கண்ட ஆற்றல்களை தனது பயணத்திற்கு பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
☞ தனது திறமைகளைச் சரியாக விளங்கிக் கொள்வது முக்கியமாக இருப்பதுடன் அவற்றை விருத்திசெய்துகொள்ளவும் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 1.1.1.2**

- இணைப்பு 1.1.1.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரத்தை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- செய்ய வேண்டிய வேலைகளை தெளிவுபடுத்துங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டுங்கள்.
- மாணவர்களின் ஒப்படைகளை சரிபார்க்கவும்.

(10 நிமிடம்)

**படி 1.1.1.3**

- இணைப்பு 1.1.1.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரத்தை அனைத்து மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- இதில் செய்ய வேண்டிய வேலைகளில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்களின் ஆக்கங்கள் மற்றும் கருத்துக்களை ஏனையோரிடமிருந்து தெரிந்துகொள்ள வையுங்கள்.
- மாணவர்களின் திறமைகளை மேலும் விருத்திசெய்ய பின்னூட்டல் வழங்குவதுடன் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தியவாறு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- ஒவ்வொருவரினதும் திறமைகள் பல்வேறுபட்டனவாக இருந்தமையை வகுப்பறை மாணவரை அவதானிக்கலாம்.
- திறமைகள் பிறப்பினால் மாத்திரமன்றி பயிற்சியாலும் பெற்றுக்கொள்ள முடியும்.
- ஒருவரிடத்தில் ஒரு திறமையோ அல்லது பல திறமைகளையோ காணலாம்.
- திறமைகள் சரியான முறையில் தீர்மானம் செய்தல் முக்கியம்.
- திறமைகளை தீர்மானிக்கும்போது தனது கருத்தைப் போலவே ஏனையோரின் கருத்துக்களும் முக்கியம்.
- தனது திறமையைப் பற்றி தன்னம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ஏனையோரின் திறமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தனியாளிடத்தில் உள்ள திறமைகளை பெயரிடுவார்.
- தனது திறமைகள் தொடர்பான தன்னம்பிக்கையுடன் கருத்துகளைத் தெரிவிப்பார்.
- தனது திறமைகளை மீளாய்வு செய்து எழுதிக்காட்டுவார்.
- தனது திறமைகளை சரியாக இனங்கண்டு விருத்தி செய்துகொள்வார்.
- ஏனையோரின் திறமைகளை மதிப்பார்.

**பின்தொடர் வேலை**

மாணவர்களிடத்தில் இனங்கண்ட அவர்களின் திறமைகளைக் காட்டும் வர்ண புகைப்படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி “எங்கள் வகுப்பில் உள்ள திறமைசாலி” என்ற ஆக்கத்தைக் காட்சிப்படுத்துங்கள்.

**இணைப்பு 1.1.1.1**

குட்டி வீரனுக்கு
நாலந்த பாடசாலையில்
அனுமதி



ஜிப்ரி பாவா எனும் கட்டிடக் கலைஞரின் நிர்மாணம்



ஸ்ரீமத் ஆதர் சி.கிளாக் அவர்கள்

## ஹிதாச்சி புகைவண்டியில் நுவரெலியாவுக்குப் பயணம்

அதிகலை 2.00 மணியளவில் துயிலெழுந்த நாம் ஹிதாச்சி புகையிரத வண்டிப் பயணத்திற்குத் தயாரானோம். வீட்டிலிருந்து வேன் ஒன்றில் புகையிரத நிலையத்தை நாம் சென்றடைந்தோம். சிறிது நேரத்தில் ஹிதாச்சி புகைவண்டி புகையிரத நிலைய மேடையினுள் பிரவேசித்தது. புகைவண்டி நிறுத்தப்பட்டவுடன் நாம் யாவரும் அதன் சொகுசு ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம்.

புகைவண்டி ஆடி அசைந்து பயணிக்க ஆரம்பித்தது. நாம் நித்திரையில் ஆழ்ந்தோம். கொழும்பு கோட்டையை அடையும்போது சூரியன் தனது ஒளிக்கதிர்களை பரப்ப ஆரம்பித்துக் கொண்டிருந்தான். வெளியே நோக்கியபோது கடற்கரை பிரதேசத்தை விடுத்து, மத்திய மலைநாட்டுப்பகுதியை நோக்கி வண்டி பயணிப்பதைக் காண முடிந்தது. இடையிடையே சிறு பற்றைக் காடுகள், ஆறுகள், காடுகள், நகரங்கள் போன்றவையும் காணப்பட்டன. சிறிதுசிறிதாக கடல் மட்டத்திலிருந்து மேல் நோக்கி புகைவண்டி சென்றமையால் ஏணியில் ஏறுவது போன்ற உணர்வை எம்முள் ஏற்படுத்தியது. அடுத்து றம்புக்கண புகையிரத நிலையத்தை நாம் அடைந்தோம். இப்பயணத்தின்போது பல சுரங்கப் பாதைகளைக் கடந்தோம்.

எமக்கு புகையிரதத்தின் எஞ்சின் அறையில் பயணம் செய்யும் வாய்ப்பம் கிட்டியது. நாம் அலகல்லை மலைத்தொடரிலுள்ள சின்னமலை சுரங்கத்தினூடாகவும் சென்றோம். இது இலங்கையின் மிக நீண்ட சுரங்கப் பாதையாகும். அது ஒரு கிலோ மீற்றர் நீளமானது. சிறிது நேரம் சென்றபோது சீகிரியாவைப் போன்ற மலைக் குன்றொன்று தோன்றியது. மேலும் முன்னோக்கிச் செல்லும்போது வேறு சுரங்கங்களையும் கண்டோம். மேலும் செல்லும்போது சூர சரதியல் மலை உதுவங்கந்த மலை தோன்றியது. காலை உணவு உண்ணு முன்னர் கடைசியாக நாம் கடந்த புகையிரத நிலையம் கடுகண்ணாவையாகும்.

டப்ளியு.எம்.வி.வை.குமாரசிங்க
தரம் - 06
கா/ பீ.த.எஸ்.குலரத்ன வித்தியாலயம்

**இணைப்பு 1.1.1.2**

## விடயப்பத்திரத்திற்கான ஆசிரியர் ஆலோசனை

- மாணவர்களின் திறமைகளை இனங்காணும்போது உடல், உள, ஆன்மீக, சமூக, தொழினுட்ப, அழகியல், தொழில் ரீதியான துறைகளில் திறமைகளுக்கான உதாரணங்களை தெளிவுபடுத்துங்கள்.

- திறமைகளை இனங்காணும்போது பின்வரும் வினாக்களுக்கு விடையைப் பற்றி யோசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  1. உங்களிடமுள்ள உள்ளார்ந்த திறமை என்ன?
  2. நீங்கள் வெளிப்படுத்தியுள்ள திறமைகள் எவை?
  3. நீங்கள் வெற்றிபெற்ற விடயம் எது?
  4. நீங்கள் செய்திருக்கும் ஆக்கம் என்ன?
  5. பிறர் உங்களில் இருப்பதாக நினைக்கும் திறமை என்ன?
  6. ஏனையோர்கள் உங்களின் எத்திறமையைப் பற்றி புகழ்வார்கள்?

- இரு விழிகளையும் மூடிக்கொள்ளுங்கள்.
  மும்முறை நன்கு சுவாசியுங்கள். (மூச்சிழுத்து விடுங்கள்.)
  உங்களில் காணப்படும் திறமைகளை நினைந்துகொள்ளுங்கள். அவற்றைப் பின்வரும் அட்டவணையில் நிரப்புங்கள்.
- உங்கள் படத்தைச் சுற்றி உங்களில் காணப்படும் திறமைகளை அலங்காரமான விதத்தில் ஆக்கபூர்வமாக முன்வைக்கவும்.
- மீண்டும் வேறொரு பத்திரமொன்றை எடுத்துக்கொள்ளுங்கள்.
- அதில் உங்கள் புகைப்படத்தை அல்லது படமொன்றை ஒட்டுங்கள் / வரையுங்கள்.

| **திறன்கள் துறைவாரியாக** | **திறமை** |
|---|---|
| உடல் | ........................... |
| உள | ........................... |
| ஆன்மீக | ........................... |
| சமூக | ........................... |
| தொழினுட்பம் | ........................... |
| அழகியல் | ........................... |
| தொழில் | ........................... |
| வேறு | ........................... |

- மீண்டும் கண்களை மூடிக்கொள்ளுங்கள்.
- மும்முறை நன்கு சுவாசியுங்கள். (மூச்சிழுத்து விடுங்கள்.)
- விழிகளைத் திறவுங்கள்.
- இனி உங்கள் திறமைகளைக் கொண்டமைந்த அலங்காரமான சித்திரத்தை நோக்கி ஒவ்வொன்றையும் கவனமாகப் பார்த்து மனதினால் மகிழ்ச்சியடையுங்கள். புன்முறுவல் பூத்துக்கொள்ளுங்கள்.

## இணைப்பு 1.1.1.3

## செயற்பாட்டுப்பத்திரம்

- நீங்கள் இனங்கண்ட திறமைகளை நீங்கள் அடைந்தது, உள்ளார்ந்த வகையில் இல்லாவிடின் கற்றதனாலா என சிந்தியுங்கள்.
- இதற்கமைய தெரிவுசெய்த திறமைகள் சிலவற்றை இப்பகுதிகள் இரண்டின் கீழ் வகைப்படுத்துங்கள்.

| உள்ளாரந்த வகை திறமைகள் | கற்றதினால் பெற்ற திறமை |
|---|---|
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |

- இவற்றுள் நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டியதாக நினைக்கும் திறமைகள் சிலவற்றைத் தெரிவுசெய்து அதில் முன்னுரிமைக்கு அமைய 1, 2, 3 என்றவாறாக எழுதிக்கொள்ளுங்கள்.
- அத்திறமைகளை வளர்த்துக்கொள்வதற்குச் செய்யவேண்டியவற்றை எழுதுங்கள்.

| திறமை | வளர்த்துக்கொள்ள வேண்டியவை |
|---|---|
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |
| ............................ | ............................ |

- நீங்கள் எழுதிய திறமைகளையும் வளர்த்துக்கொள்வதற்காகக் கைக்கொள்ள வேுண்டிய வழிவகைகளையும் அண்மையில் உள்ள அன்பர்களுக்கும் ஆசிரியருக்கும் வெளிப்படுத்தி பின்னூட்டலைப் பெற்றுக்கொள்ளவும்.

## 9.1.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- சுயவிளக்கத்துடன் கருமமாற்றுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- வாழ்க்கையில் எதிர்நோக்கும் பல்வேறு அறைகூவல்களின் போது வெற்றிகரமாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- "சவால்களை அறிந்து வாழ்க்கையில் வெற்றி காண்போம்"

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.2.1
- இணைப்பு 9.1.2.2 ஆராய்வுப் பத்திரம்
- இணைப்பு 9.1.2.3 ஆராய்வுப் பத்திரம்
- எழுதும் காகிதாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.2.1**
- இணைப்பு 9.1.2.1 வழங்கி மாணவர்களை விளையாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இவ்விளையாட்டில் வெற்றி கொண்டோர்கள் தொடர்பாகக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- தோல்விக்குரிய காரணம் யாது என வினவுங்கள்.
- போட்டியின்போது தனக்குள் ஏற்பட்ட எண்ணங்களை விளக்குவதோடு தான் முகங்கொடுக்க நேரிட்ட விருப்பமற்ற சவால்கள் தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்க.
- அக்கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- வாழ்க்கையில் ஒவ்வொரு நபரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.
- வாழ்க்கையில் சவால்கள் ஏற்படுவது இயற்கை.
- சவால்கள் என்பது வாழ்க்கையின் இலக்குகளை அடைவதில் ஏற்படும் பிரச்சினைகள், தடைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தலாகும்.
- சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் அதன் தன்மைகள் பல்வேறு பற்றிக்கின்றமை.

  - ☞ அகதிகளாக்கப்படல் (யுத்தம் / சுனாமி / வெள்ளம் / சூறாவளி என்பவற்றால் பாதுகாப்பு கிடைக்காமை. (தாய் / தந்தை / பாதுகாவலர் இன்மை)
  - ☞ சமவயதுக் குழுக்களால் ஏற்படும் அழுத்தங்கள்.
  - ☞ தொடர்பு சாதனங்கள் / இணையம்
  - ☞ உடல் குறைபாடுகள் / பலயீனங்கள்.
  - ☞ யுத்த நடவடிக்கைகள் மற்றும் முரண்பாடுகள்.
  - ☞ பொருளாதாரம் நலிவுறல்.
  - ☞ நடைமுறைச் சமூகம் மாற்றத்திட்குட்பட்டு வருவதால் உருவாகும் நிலைமைகள்.
  - ☞ தனியாள் காரணிகள் மற்றும் வேறு காரணிகள்.

(20 நிமிடங்கள்)

**படி 9.1.2.2**

- மாணவர்களை சிறு குழுக்களாக வேறாக்குங்கள்.
- சிறு குழுக்களிடையே 9.1.2.2 மற்றும் 9.1.2.3 இணைப்புக்களை வழங்குக.
- மாணவர்களை செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- தேவையான இடங்களில் ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 9.1.2.3**

- மாணவர்கள் கண்டுபிடித்தல் மூலம் பெறப்பட்ட முடிவுகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.
- அனைத்து குழுவினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

> - அனைத்து சவால்களும் வாழ்க்கையில் வெற்றிக்கான மைல் கற்களாகும்.
> - சவால்களை வெற்றி கொண்டவர்கள் உலகில் முதன்மை பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.
> - சவால்களை எதிர்கொள்ளும்போது வெற்றிகரமாக முகம் கொடுத்தல் வாழ்க்கைக்கு அவசியமான ஒரு திறனாகும்.
> - ஒவ்வொரு சவால்களுக்கும் முகம் கொடுக்கும் பல்வேறு வழிமுறைகள் காணப்படுகிறது. மற்றும் தன்னால் அவ்வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
> - கடுமையான சவால்கள் கூட கடந்த காலங்களில் வெற்றி கொள்வதன் மூலம் அழகான/ சுவாரஸ்யமான அனுபவங்கள் என அவற்றை கூற முடியும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- சவாலை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சாவலின் மூலம் வாழ்வை வெற்றிகொள்ள முடியுமென்பதை ஏற்பார்.
- பல்வேறு சவால்களையும் அடையாளங்கண்டு அவற்றை வெற்றி கொள்ளும் பல்வேறு வழிமுறைகளை முன்வைப்பார்.
- தமது குழுவினரோடிணைந்து சவால்களுக்கான தீர்வுகளைக் காண்பார்.
- தாம் முகங்கொடுத்த சவால்களுக்கு வெற்றிகரமாகத் தீர்வு கண்ட விதத்தை முன்வைப்பதுடன் அதனைப் பின்வருமாறு

**பின்தொடர் வேலை**

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் வாழ்க்கையில் வெற்றிபெற்ற நபர்கள் தொடர்பிலான தகவல்களைச் சேகரித்து சிறு நூலொன்றை ஆக்கல்.

**இணைப்பு 9.1.2.1**

வினோத விளையாட்டு (பாதணிகளைக் கலைந்து மாணவரை விளையாடத்தயார்ப் படுத்தவும்)

- வகுப்பு மாணவர் தொகைக்கேற்ப பலூன்களை எடுக்கவும்.
- தேவையான உயரத்துடன் நூலைத்தயார்ப்படுத்திக் கொள்ளவும்.
- மாணவரிடம் பலூன்களைக் கொடுத்து ஊதி, நூலைக் கட்டச் செய்யவும்.
- கழறாத படி மாணவரின் கால்களில் பலூன்களைக் கட்டிக் கொள்ளச் செய்யவும்

- ஐந்து நிமிடங்களுக்காவது தமது பலூன்களைப் பாதுகாத்துக் கொண்டு ஏனையோரின் பலூன்களை உடைக்கச் செய்யவும்.
- தொடக்கத்தையும் முடிவையும் அறிவிக்கவும்.

## இணைப்பு 9.1.2.2

பின்வரும் தகவல்களை நன்கு அறிந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

சுதர்சன் பனான கனிஷ்ட தமிழ் வித்தியாலயத்தில் கற்கும் அழான சிறுவனாவான். அவனின் தாய் இறந்துவிட்டாள். தந்தை எழு வருடங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றார். அவரைப் பற்றிய செய்திகள் இதுவரையில் அறிந்துகொள்ள முடியவில்லை. சுதர்சனும் அவன் தம்பியும் தங்கையும் தாத்தா மற்றும் பாட்டியின் பொறுப்பில் இருக்கிறார்கள். பொருளாதார ரீதியாக அவர்கள் மிகவும் பின்தங்கிய வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறிருக்கையில் இம் மூன்று பிள்ளைகளில் ஒருவருக்கு புலமைப்பரிசில் வழங்குவதாக வந்த தொண்டர் அமைப்பொன்றின் பிரதிநிதிக்கும் சுதர்சனுக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாஷணை கீழே தரப்பட்டுள்ளது.

பிரதிநிதி :- உங்கள் தாய் தந்தை இருவரும் உங்களுடன் இல்லை. உங்களைக் கண்காணித்து வளர்ப்பவர்கள் பற்றி சொல்ல முடியுமா?

சுதர்ஷன் :- ஆம். எங்களை தற்போது பாதுகாப்பாக வைத்திருப்பவர்கள் தாத்தாவும் பாட்டியும்.

பிரதிநிதி :- பாட்டிக்கும் தாத்தாவுக்கும் இப்போது நன்றாக வயது போய்விட்டதுதானே. அதேபோல் சுகவீனமுற்றவர்களாகவும் இருக்கிறார்களா தானே.

சுதர்ஷன் :- நாங்கள் அவர்கள் இருவருக்கும் உதவி செய்கிறோம். எனக்குத்தான் கூடுதலான வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தோட்டத்தில் வேலை செய்ய வேண்டிய பொறுப்பும் எனக்குத்தான்.

பிரதிநிதி :- நீங்கள் மூவரும் கற்றுக்கொண்டிருக்கும் வகுப்பைக் கூறுங்கள்.

சுதர்ஷன் :- நான் 9 ஆம் வகுப்பு. தம்பி 4 ஆம் வகுப்பு, தங்கை 2 ஆம் வகுப்பு.

பிரதிநிதி :- ஒரு மாதத்திற்கு நாங்கள் 2000/= புலமைப்பரிசில் ஒன்றைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம். இதை யாருக்குக் கொடுக்க வேண்டும்?

சுதர்ஷன் :- எங்கள் மூவருக்கும் தாருங்கள்.

பிரதிநிதி :- அப்படி முடியாது. இதனை ஒருவரின் பெயரிலேயே தரலாம்.

சுதர்ஷன் :- அப்படியாயின் எனக்குத் தாருங்கள்.

பிரதிநிதி :- உங்களை விட இளைய தங்கையும் தம்பியும் இருக்கும்போது ஏன் உங்களது பெயருக்குக் கேட்கிறீர்கள்?

சுதர்ஷன் :- தங்கைக்கும் தம்பிக்கும் வழங்கி நடைமுறைகள் தெரியாது என நினைக்கிறேன். அத்தோடு நான் இந்தப் புலமைப் பரிசில் தொகையைப் பெற்றால் அவர்கள் இருவரின் தேவைகளையும் என்னால் பார்த்துக்கொள்ள முடியும் தானே. எல்லாவற்றிற்கும் மேலாக நான் நல்லமுறையில் சா/ த பரீட்சையில் சித்தி பெற நன்றாக படிக்க வேண்டும். நன்றாகப் படித்தால் தான் எனது தம்பிக்கும் தங்கைக்கும் நன்றாகப் படிப்பிக்க எனக்கு முடியும்.

பிரதிநிதி :- சரி. நாங்கள் உங்களுக்கு இந்தப் புலமைப்பரிசிலை வழங்குவோம்.

## இணைப்பு 9.1.2.3

பின்வரும் வினாக்களுக்கு உங்கள் வாழ்க்கை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தாருங்கள்.

1. நீங்கள் முகம் கொடுத்த ஒரு சவாலைக் குறிப்பிடுங்கள்.
2. அந்த சவாலின் தன்மையை சுருக்கமாக விளக்கம் தருக.
3. அச்சவால் காரணமாக நீங்கள் அடைந்த தோல்வி மன சஞ்சலம் மற்றும் இழப்புக்கள் இருந்தால் அவற்றைக் குறிப்பிடுங்கள்.
4. அச்சவால்களை வெற்றிகொள்வதற்கு நீங்கள் எவ்விதத்தில் உங்கள் யோசனை முன்வைக்கிறீர்கள்?

## 9.1.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- சுயவிளக்கத்துடன் கருமமாற்றுவார்.
**தேர்ச்சி மட்டம்** :- சுதேசத்துவத்தைக்காத்து பூகோளக் கிராமத்தின் ஓர் அங்கத்தவர் என்ற வகையில் ஒருங்கு வாழ்த்தவாறு செயற்படுவார்.
செயற்பாடு :- "தேசியத்திற்கு மதிப்பளித்து உலக சமூகத்தினுள் பிரவேசிப்போம்"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.3.1 மற்றும் 9.1.3.2
- டிமை பேப்பர்
- பெல்ட் பேனா
- எழுதுதாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.3.1**

- இணைப்பு 9.1.3.1 தொடர்பான பந்தியை வகுப்பறையில் முன்வைக்க
- அங்கு வழங்கப்பட்ட தகவல் தொடர்பாக கருத்துக்களை முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க.
- பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கலந்துரையாடலை மேற்கொள்க.

> ☞ முன்னொரு காலத்தில் இலங்கையின் தொழினுட்பம் உயர்மட்டத்தில் காணப்பட்டமை.
> ☞ தற்காலத்தில் இலங்கையின் பல்வேறு உற்பத்திகள் உலக சந்தைக்கு அனுப்பப்படுகின்றமை.
> ☞ அவ்வுற்பத்திகள் உலக சந்தையில் உயர் அங்கீகாரம் பெற்றுள்ளமை.
> ☞ கடந்த காலத்தைப் போன்று தற்காலத்திலும் தேசிய ரீதியாக மதிப்பளிக்க்கூடிய நல்லொழுக்க விழுமியங்கள் மற்றும் ஆக்கம் எம்முள் காணப்படுவதோடு, தேசத்திற்கு மதிப்பளிப்பதுடன் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.1.3.2**

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாகப் பிரியுங்கள்.
- விடயப் பத்திரங்களை குழுக்களுக்கு வழங்குங்கள்.
- குறித்த விடயத்தைப் பூர்த்தி செய்வதற்குப் போதிய நேரத்தை வழங்குங்கள்.
- தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் ஆலோசனை, வழிகாட்டல் வழங்குங்கள்.
- அறிக்கை தயாரிப்பதற்குப் போதுமான நேரத்தைப் பெற்றுக் கொடுங்கள்.

**படி 9.1.3.3**

- குழு அறிக்கையை வகுப்பறையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த தகவல்கள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்க அனைத்து குழுக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

- நாட்டின் சமய, சம்பிரதாயங்கள், நடைமுறைகளுக்கு மதிப்பளித்தல்.
- தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பல்வேறு உற்பத்திகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டியேற்படும்.
- எமது நாட்டின் பொருளுட்பத்திகளைக் கொண்டே எமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.
- அவ்வாறு செய்வதால் வெளிநாட்டுக்குச் செல்லும் பணத்தை சேமிக்க முடிவதோடு தேசிய உற்பத்திகளை அதிகரிக்கவும் முடியும்.
- வளங்களின் சமனற்ற பரம்பல் மற்றும் தேவையான அனைத்து பொருட்களையும் உற்பத்தி செய்துகொள்ள முடியாமை.
- இதன் காரணமாக உலக நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருக்க வேண்டும்.
- சமூக தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கும் தொடர்புகளை வைத்திருப்பதற்கும் உலக சமுதாயத்தின் அங்கத்தவராக வாழ்வதற்குத் தேவையான திறன்களை எமக்குள் விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

(20 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- உள்ளூர் உற்பத்திகளை விலைகொடுத்து வாங்குவது தேசிய வளர்ச்சிக்கு காரணமாக அமையும் விதத்தை விளக்குவார்.
- உள்ளூர் பழக்கவழக்கங்கள் பாரம்பரியங்களை மதிப்பதுடன் அதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- உலக சமூகத்தின் ஒரு குடிமகனாக வாழ்வதற்குத் தேவையான குணநலன்களை மேம்படுத்திக்கொள்வதில் விருப்பு காட்டுவார்.
- குழுச் செயற்பாட்டினை நிறைவுசெய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார்.
- தனது திறன்களை வெளிக்காட்டி ஏதோ ஒரு ஆக்கமொன்றை படைக்க வேண்டும் என்ற விருப்பை வெளிப்படுத்துவார்.

**இணைப்பு 9.1.3.1**

பின்வரும் வெளிப்பாட்டை வகுப்பறையில் முன்வைப்பதற்கு தயார்படுத்திக் கொள்ளுங்கள்.

இலங்கையின்
தேயிலைக்கு
உயர்ந்த விலை
நிர்ணயிப்பு

இலங்கையின் ஆடை
உற்பத்திகளுக்கு உலக
சந்தையில் அதிக
கேள்வி (கிராக்கி)

- இலங்கையில் புராதன தொழினுட்பம்

    ☞ நீர்ப்பாசனத் தொழினுட்பம்
    தாதுசேன அரசனால் கட்டப்பட்ட யோத கால்வாய் எனும் ஜய கங்கை 86 Km நீளமானது. அத்துடன் கால்வாயின் சாய்வு ஒரு கிலோமீற்றருக்கு 95 மில்லிமீற்றர்களாகும்.

    ☞ மருத்துவத் தொழினுட்பம்
    பொலன்னறுவை காலத்திற்குச் சொந்தமான ஆலாஹன பிரிவெனாவின் அகழ்வின்போது மருத்துவ உப காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை.

    ☞ கலைப் படைப்புக்கள்
    கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பட்ட சீகிரியா சித்திரங்கள் இன்றும் மாறாது இருப்பதற்குரிய காரணம் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழினுட்ப விசேடத்துவமாகும்.

**இணைப்பு 9.1.3.2**

செயற்பாட்டுப்பத்திரம் 01

| |
|---|
| உங்களால் போற்றப்படும் சமய சம்பிரதாயங்கள், நடைமுறைகள் என்பனவற்றை அட்டவணைப்படுத்தி அவை போற்றப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை வகுப்பறையில் தெளிவுபடுத்துக. |

செயற்பாட்டுப்பத்திரம் 02

| |
|---|
| உலக சமுதாயத்திலே குடிமகன் என்ற வகையில் வாழ்வதற்கு உங்களிடத்தில் விருத்திசெய்ய வேண்டிய குணநலன்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தயார்செய்க. |

செயற்பாட்டுப்பத்திரம் 03

- பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.
- உங்கள் குழு அட்டவணைப்படுத்திய விடயங்களை விளக்கமாக வகுப்பில் முன்வைக்க.

| உங்களது அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளப் பயன்படுத்தும் பொருட்கள் | அப்பொருட்களில் விலைகொடுத்து வாங்கும் இலங்கை உற்பத்திப் பொருளுக்கு முன்னால் ✓ அடையாளமிடுக. | இலங்கையின் உற்பத்திப் பொருட்களை விலைகொடுத்து வாங்குவதால் கிடைக்கும் நன்மைகள் |
|---|---|---|
| | | |

விடயப்பத்திரம் 04

தற்கால உலகில் எந்தவொரு நாட்டிற்கும் தனித்து தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வது கடினம். இதற்கான காரணங்களை முன்வைக்க.

## 9.1.4 செயற்பாடு

**தேர்ச்சி** :- சுயவிளக்கத்துடன் கருமமாற்றுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- தேவைப்படும் போதெல்லாம் உறுதிப்பாடான வகையில் செயற்படுவார்.

**செயற்பாடு** :- "பொருத்தமான இடங்களில் நிலைபேறான விதத்தில் கருமமாற்றுவார்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.4.1 இற்கான வரலாற்றுக் கதை
- இணைப்பு 9.1.4.2.1 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- எழுதுதாள்கள்
- பேனா

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.4.1**

- இணைப்பு 9.1.4.1 இற்கான வரலாற்றுக் கதையை முன்வையுங்கள்.
- கதையைக் கேட்டபின் மாணவர்களிடத்தில் ஏற்படும் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- சிந்தனைக் கிளர்விலே மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

☞ தான் செய்யும் வேலை தொடர்பாக தனக்குப் போதிய விளக்கம் இருத்தல் வேண்டும்.
☞ ஏனையோரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளல்.
☞ தனக்குப் பொருத்தம் எனின் ஏனையோரின் கருத்துக்களை விமர்சித்து ஏற்றுக்கொள்ளல்.
☞ நிலைபேறான கருத்துக்களுடன் செயற்படுவதால் தன்னையும் தனது கௌரவத்தையும் பாதுகாத்தல்.

(10 நிமிடங்கள்)

**படி 9.1.4.2**

- இணைப்பு 9.1.4.2.1 செயற்பாட்டுப்பத்திரத்தை மாணவர்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 9.1.4.3**

- மாணவர்களின் கருத்துக்களை வகுப்பில் முன்வைத்தல்.
- மாணவர்களின் மேலான ஆலோசனைகளை வினவுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

(10 நிமிடங்கள்)

- ☞ சவால்களின்போது இருமுறையில் ஒருவர் தனது துலங்கலை வெளிப்படுத்துவார். கீழ்ப்படிதல் மற்றும் ஆக்கிரமிப்பு ரீதியாக.
- ☞ இவ்விரு முறைகளில் ஒன்றிலும் சாராது நிலைபேணத்தக்க வகையில் செயற்படல் வேண்டும்.
- ☞ நிலைபேற்றுத்தன்மையை தன்னிடத்திலும் ஏனையோரிடத்திலும் ஏற்படுத்தல் வேண்டும்.
- ☞ தனது எண்ணங்களை இடத்திற்கேற்ப பொருத்தமான முறையில் வெளிப்படுத்த வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- நிலைபேற்றுத்தன்மையை விளங்கிக் கொள்வார்.
- நிலைபேற்றுத்தன்மையுடன் செயலிலீடுபடத் தயாராவார்.
- தனது கருத்துக்களைப் பொருத்தமான இடத்தில் பொருத்தமான முறையில் வெளிப்படுத்துவார்.
- நேரான மனப்பாங்குடன் வாழ்க்கை வழிமுறைகளைப் பேணும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நிலைப்பேற்றடிப்படையில் சமூகத் தொடர்பை வைத்துக் கொள்வார்.

## இணைப்பு 9.1.4.1

முன்னொரு காலத்தில் ஒரு தந்தை தனது மகனுடன் தமக்குச் சொந்தமான கழுதையை விற்பதற்காக சந்தைக்குப் போய்க்கொண்டிருந்தார்.அதனைக் கண்ணுற்ற சில மனிதர்கள் கழுதையின் மேல் ஏறிச் செல்லாமல் தந்தை மகன் இருவரும் நடந்து செல்கிறார்களே என அங்கலாய்த்தனர். ‘‘கழுதையை வைத்துக் கொண்டு இப்படி நடந்து செல்லும் முட்டாள்களும் இருக்கின்றனர்.

மூடர்களே எனக் கூறினர். இதனைக் கேட்ட தந்தை தனது மகனை கழுதை மேல் வைத்துக்கொண்டு நடந்து சென்றார். அதனைக் கண்ணுற்ற சிலர் இந்த முதியவர் நடந்து செல்ல மகன் கழுதை மேல் அமர்ந்து செல்கிறானே எனத் தூற்றினர். பின்னர் மகன் கீழிறங்கி தந்தை கழுதையின் மேல் அமர்ந்து சென்றார். இவ்வாறு சிறிது நேரம் செல்கையில் ‘‘ஐயோ! அந்த அப்பாவிச் சிறுவன் நடந்து செல்கிறானே’’ ‘‘பெரிய மனிதன் ஒய்யாரமாக கழுதை மேல் அமர்ந்து செல்கிறார்’’ என மேலும் சிலர் தூற்றினர். பின்னர் தந்தை, மகன் இருவருமே கழுதை மேல் அமர்ந்து சென்றனர். அதனைக் கண்ணுற்ற மனிதர்கள், ‘‘அப்பாவியான மிருகத்திற்கு செய்யும் அவஸ்தையைப் பாருங்கள். இப்படியும் மிருகங்களை வதைக்கிறார்களே! உடனே இருவரும் கீழிறங்கி வருந்திச் செல்லும் கழுதையை சுமந்து செல்வது நல்லதல்லவா’’ எனக் கூறினர்.

பின்னர் இருவருமே கழுதையின் நான்கு கால்களையும் சேர்த்துக் கட்டி அதனுள் தடியொன்றை இட்டுத் தூக்கிச் செல்லலாயினர். செல்லும் வழியில் ஓர் ஒற்றை மரப் பாலத்தால் ஆற்றைக் கடக்க நேரிட்டது. அவ்வேளையில் கழுதை தடுமாற்றமடைந்ததால் மூவரும் ஆற்றில் விழுந்தனர்.

## இணைப்பு 9.1.4.2

பின்வரும் சம்பவத்தை வாசிக்கவும்.

அகிலன் வகுப்பில் உள்ள வாயாடிச் சிறுவனாவான். அதேபோல் ஏனைய மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னிற்பான். வேறு வகுப்பு மாணவர்களால் தனது வகுப்பு மாணவர்கள் பயமுறுத்தப்படும் சந்தர்ப்பங்களிலும் முன்னிற்பவன் அகிலனே. எனினும் தன்னை வகுப்பு மாணவர்கள் ஏற்றுக்கொண்டதால் அவனது எல்லாக் கருத்துக்களையும் எல்லாப் பிள்ளைகளும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்ற பிழையான எண்ணம் கொண்டிருந்தான் அகிலன்.

அகிலன் :- வினித் இன்று மாலை பாடசாலை விட்டதன் பின்னர் என்னுடன் குளிப்பதற்கு குளத்திற்குச் செல்ல வர வேண்டும். சரிதானே, முடியாது என்று சொல்லாதே!

வினித் :- சரி. நான் வருகிறேன் அகிலன்.

அகிலன் :- சுதர்சன் உனக்கும் கேட்டது தானே. சாப்பிட்டவுடன் குளத்துக்கு வா.

சுதர்சன் :- நல்ல வேலைதான் உனக்கு வேண்டுமெனின் நீ போகலாம். அப்படிப் போய் மூழ்கிப் போனால்...

அகிலன் :- சரி. அப்படியொன்றால் அதையும் பார்ப்போமே. அப்துல்லா நீ என்ன சொல்கிறாய்?

அப்துல்லா :- எனக்கு நிச்சயமாக சொல்ல முடியாது அகிலன் வரமுடியும் என்று. போன பிறகு வீட்டில் போக வேண்டாம் என்று சொன்னால் நான் பொய்க்காரனாவேன். மற்றது இந்த நாட்களில் குளத்து நீர் அவ்வளவு நல்லதல்ல. நீயென்றாலும் நோய்வாய்படுவாய். கவனமாக இரு.

பின்வரும் வினாக்களுக்கு விடைகண்டு வகுப்பில் முன்வைக்க.

1. வினித் அகிலனுடன் குளத்துக்குச் செல்ல ஏன் விரும்பினான் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
2. சுதர்சன் அகிலனின் வேண்டுகோளை நிராகரித்த விதம் தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
3. அப்துல்லா அகிலனுக்குக் கூறிய பதில் தொடர்பாக உங்களது கருத்தை எழுதுங்கள்.
4. அகிலன் உங்களிடம் இவ்வேண்டுகோளை விடுத்தால் நீங்கள் எவ்வாறான பதிலை அளிப்பீர்கள்?

## 9.2 போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வை விருத்தி செய்து கொள்வார்

**(பாடவேளைகள் 04)**

### அறிமுகம்

நல்வாழ்க்கை தொடர்பில் மனிதன் தனக்கும் தான் சார்ந்துள்ள மனித வர்க்கத்திற்கும் நன்மையைச் செய்ய ஆற்றல் பெற்றுள்ளான். எனினும் மனிதன் ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகள், சிந்தனைகள் காரணமாகவும் உற்பத்தி செய்துள்ள பலவகைப் பொருட்கள் காரணமாகவும் இன்று சமூகம் உலகமயமானதாகவும் நுகர்வு நோக்கைக் கொண்டதாகவும் அமைந்த சூழலினுள் வாழ நேரிட்டுள்ளது. இதன்மூலம் உருவாகும் போட்டிமிக்க உலகமானது மனிதனுக்கு பயனுள்ள போட்டியையும் பயனற்ற போட்டியையும் தேர்ந்தெடுத்து வேறாக்கிக்கொள்ள முடியாதளவுக்கு சிக்கலாகும் சந்தர்ப்பங்களை அதிகமாகக் கொண்டுள்ளது.

பிறப்பிலேயே இதயத் துடிப்புடன் அல்லது மனசாட்சியுடன் செயற்படும் மனிதனுக்கு இந்நிலை ஒரு சவாலாகும்.இருதலைக்கொள்ளியாகும். அதற்கு அவனிடம் உள்ள மனிதநேயம் காரணமாகிறது. சிலசமயம் போட்டியானது மனியநேயத்தை கோழையான பயந்தாங்கொள்ளித்தனமான நிலையாக நோக்கப்படுவதைக் காணமுடியும்.

அவ்வாறான இடங்களில் மனிதர்கள் மனிதநேயத்தை மறந்துவிடுகின்றனர். மிருகத்தன்மையை வெளிக்காட்டுகின்றனர். கருத்தற்ற போட்டிகளில் வெற்றிபெற கண்மூடித்தனமாக முயற்கின்றனர். நல்வாழ்க்கை சிதைவது இதனாலாகும். இது மனிதனைத் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் வேதனைப்படுத்தச் செய்கின்றது. நட்டத்தையும் ஏற்படுத்துகின்றது.

நபர்கள் யாவரும் சமமானவர்களல்ல. அவர்களிடையே வேறுபாடுகள் பல உள. விருப்புக்கள் வேறுபட்டவை. இந்நிலை இயல்பானது. இதனால் அவரவர் வாழ்க்கைக் கோலம் வேறுபடுகின்றது.

குறுகிய நோக்கங்களினடிப்படையில் வேண்டுமென்றே ஏற்படுத்துகின்ற போட்டி காரணமாக இயற்கையான பல்வகைமையை தாங்க முடியாதளவு சிக்கலாவதும், வேகமடைவதையும் பல சந்தர்ப்பங்களில் காணமுடிகிறது. அது மனிதனினுள் சமாதானத்திற்கும் மனிதர்கள் இடையே சமாதானத்திற்கும் தடையாக அமைகிறது.

அதாவது தம்முடனும் ஏனையோருடனும் நல்லிணக்கமாக வாழுதல் எனும் நல்வாழ்க்கை முறைக்குத் தீங்காயமையும். உடனடியாக தலையிட வேண்டிய சமூகப் பணியாகும். ஆசிரிய வகிபாகமும் இதுவேயாகும்.

எனினும் இது ஓரிரவில் நடைபெறக் கூடியதல்ல. ஆகவே உடனடியாக இது ஆரம்பிக்கப்பட வேண்டும். மனிதநேயம் வற்றிப்போகும் இடங்கள் உடன் நிரப்பப்பட வேண்டும்.

நல்வாழ்க்கையானது தனிநபர் வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகையால் சிறுபராயம் முதலே நல்வாழ்க்கைப் பண்புகள் வளர்க்கப்படல் வேண்டும். நபரின் உடல், உள, சமூக, ஆத்மீக அபிவிருத்திக்கு காரணமாயமையும் நல்வாழ்க்கைப் பண்புகள் பிற்காலத்தில் பழக்கமாகவோ உள்ளார்ந்த தூண்டலுடன்கூடிய தேர்ச்சியாகவோ மாறுவது அதனாலாகும். நல்ல மனிதர் ஒருவர், நல்ல குடும்பம், நல்ல சமூகம் பற்றி நம்பிக்கை வைக்க முடிவது அதனாலாகும். இந்நிலையானது நீண்டகால, பரந்த அளவிலான தேசிய அபிவிருத்திக்கு சிறந்த அடித்தளமாகின்றது. தம்மைப்பற்றி தமது குடும்பம் பற்றி, தாம் சார்ந்த நிறுவனம் தொடர்பாக, ஏனைய பிரஜைகள் தொடர்பாகவும் தமது நாடு தொடர்பாக, தமது மனித இனம் தொடர்பாக, பொறுப்புள்ள மனிதர்களை உருவாக்கவும் முடியும். மனித இனத்தின் மீது அக்கறை கொண்ட மனித இனத்தை உருவாக்கவும் பாதுகாக்கவும் இது உதவும்.

வெறுமனே வாசிப்பதன் மூலமோ கேட்பதன் மூலமோ மாத்திரம் நல்வாழ்க்கையைப் பயிலவோ வலியுறுத்தவோ முடியாது. அத்துடன் அவற்றைப் பயிலும் நிபுணத்துவம் அடைய பிரயோகச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல் வேண்டும். ஆசிரியருடன் சேவையாற்றும் காலம் மிகக் குறைவானபடியால் ஆகக் கூடியளவு அதில் ஈடுபட முயலுதல் மிகவும் பயனுள்ளது. கருத்துள்ளது போலச் செய்யும் நடத்தைகளினால் பிள்ளையை மீட்டு பேரறிவையும் பண்பு, அறிவு பலத்தையும் அடிப்படையாகக் கொண்ட நல்வாழ்க்கை பற்றிய உயர் உணர்வுகளை ஏற்படுத்த ஆசிரியர் முயற்சிக்க வேண்டும்.

சரியானவற்றைச் சரியாகச் செய்யக்கூடியவாறான தன்னம்பிக்கையை அவர்களுள் உருவாக்க வேண்டும்.

அது மாத்திரமல்லாது நற்பிரஜைகளை நாட்டிற்களிக்கவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உதவம். இவற்றின் மூலம் பிள்ளைகள் தமது மனச்சாட்சிக்கு ஏற்றவாறு நேரான வழிகளில் தேர்ச்சிகளை விருத்தி செய்துகொண்டு அவற்றின் மூலம் முன்மாதிரியான எண்ணங்களை நோக்கிச் செல்வார்கள். அல்லது மனிதன் என்ற ரீதியில் தான் செல்ல வேண்டிய உயர்ந்த இடத்தை நோக்கி அச்சமின்றி செல்வார்கள். அவர்கள் யாவற்றையும் நேராகவும் பக்கச் சார்பின்றியும் தர்க்க ரீதியாகவும் ஆக்கப்பூர்வமாகவும் நோக்குவார்.

ஓரிரு விடயங்களின் மீது தங்கியிராது, பக்கச்சார்பின்றியும் நடுநிலையாகவும் முழுமையாகவும் ஆராய்வர்.

பூரணமான உறுப்புக்களும் வளமான மனதும் கொண்ட அவர்கள், தமது சமூக பொறுப்புக்கள் தொடர்பாக ஆறிவுடன் சுயசக்தியை வெளிப்படுத்துவார்கள். அவர்கள் வாழ்க்கைத்தரமும் உயர்ந்த நல்வாழ்க்கைப் பண்புகளும் நிரம்பப்பெற்ற பிரஜைகளாக அமைவர்.

**தேர்ச்சி** : போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல் வாழ்வை விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :
9.2.1 போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை விசாரணை செய்வார்.
9.2.2 நல்வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பண்புகளைக் கடைப்பிடிப்பார்.

**பாட உள்ளடக்கம்** :
- நல்வாழ்வின் முக்கியத்துவம்
  - தனியாளது விருப்புக்களின் பல்வகைமை
  - சிக்கலான வாழ்க்கைக்கோலம்
- நல்வாழ்வின் பண்புகள்
  - மகிழ்ச்சியுடன் இருத்தல்
  - கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைதல்
  - எளிமையான வாழ்க்கை வாழ்தல்
  - நட்புணர்வு
  - சமநிலையாக வாழ்தல்

நல்வாழ்வின் பண்புகளை கடைப்பிடிக்காமையால் ஏற்படும் விளைவுகள், சூழ்நிலைகளுக்கு ஏற்ப நல்வாழ்வின் பண்புகளை அன்றாட வாழ்வுடன் பொருத்தியமைத்துக்கொள்ளுதல்.

## 9.2.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வை விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை விசாரணை செய்வார்.

**செயற்பாடு** :- "நற்குணவியல்புகளை விருத்தி செய்து கொள்வோம்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கதை
- இணைப்பு 9.2.1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.1.1**

- இணைப்பு 9.2.1.1 இல் காணப்படும் கதையைச் சுருக்கமாக முன்வைக்கவும்.
- அதில் காணப்படும் படிப்பினை யாது என வினவுக.
- கீழ்வரும் விடயங்கள் வெளிப்படும் விதமாகக் கலந்துரையாடலை மேற்கொள்க.

> ☞ தமது தேவைக்கேற்றவற்றை மாத்திரம் பெற்று திருப்தியடையும் பண்பு முக்கியமானது.
> ☞ தமக்கு கட்டாயமாகத் தேவையற்ற விடயங்கள் தொடர்பாக குழப்பமுறல் தீமையாது.
> ☞ நேர்மை நீண்டகால நற்பலன்களைப் பெற்றுத் தரக்கூடியது.

(10 நிமிடங்கள்)

**படி 9.2.1.2**

- இணைப்பு 9.2.1.2 இல் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு மாணவரை துலங்கச் செய்யவும்.
- வழிகாட்டலை மேற்கொண்டு உதவிகளைச் செய்யவும்.

(15 நிமிடங்கள்)

**படி 9.2.1.3**

- மாணவர் முன்வைப்புக்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- அனைத்து கருத்துக்களையும் கவனத்திற்கொண்டு பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் தொகுப்புரையில் ஈடுபடவும்.

- ☞ மஹாத்மா காந்தியின் வார்ப்பு எமக்குச் சிறந்த முன்மாதிரியாகும்.
- ☞ சிக்கலான சமூகத்தில் மனிதத் தேவைகள் பல்வேறுபட்டவையாகும்.
- ☞ தமது தேவைக்கேற்றவற்றை மாத்திரம் பெற்று திருப்தியடையும் பண்பு முக்கியமானது.
- ☞ தமக்கு கட்டாயமாகத் தேவையற்ற விடயங்கள் தொடர்பாக குழப்பமுறல் தீமையாது.
- ☞ நேர்மை நீண்டகால நற்பலன்களைப் பெற்றுத் தரக்கூடியது.

(15 நிமிடம்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- ''நல்வாழ்வு'' என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இரண்டு விடயங்களின் துணையுடன் நல்வாழ்வின் தேவையை உறுதிப்படுத்துவார்.
- நல்வாழ்வை ஊக்குவிப்பதற்காக மாதிரி வாக்கியமொன்றை வடிவமைப்பார்.
- நல்வாழ்வு அவரவரிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என அறிந்து அதற்கான மனஉறுதியைப் பெறுவார்.
- ஏனையோருடன் நல்வாழ்வு பற்றி உரையாடுவார்.

**இணைப்பு 9.2.1.1.1**

நேர்மையான விறகுவெட்டியும் காணாமற்போன கோடரியும்

விறகுவெட்டியொருவன் காட்டில் விறகு வெட்டிக்கொண்டிருந்தான். அவனது கோடரி தவறுதலாக அருகிலிருந்த ஆற்றில் விழுந்து காணாமற் போனது. எவ்வளவு தேடியும் கிடைக்காமற் போனதால் அவன் மிகவும் துயரமடைந்தான். அழ ஆரம்பித்தான். அச்சமயம் ஒரு தேவதை அவன் முன் தோன்றி ஒரு தங்கத்தாலான கோடரியை எடுத்து, அது அவனது கோடரியா எனக் கேட்டது. ''அல்ல'' என அவன் கூற தேவைதை ஒரு வெள்ளிக் கோடரியை நீட்டியது. அதுவும் தனது கோடரி அல்ல என அவன் கூற தேவை அவனது உண்மையான கோடரியைக் காட்டியது. தனது கோடரி அது என அவன் ஏற்றுக்கொள்ள, மகிழ்ச்சியடைந்த தேவதை மற்ற இரண்டு கோடரிகளையும் அவனுக்குப் பரிசாக அளித்தது.

அவனது இக்கதையைக் கேள்விப்பட்ட மற்றொருவனும் அவ்விடத்திற்கு வந்து தனது கோடரியை ஆற்றில் எறிந்துவிட்டு அழ ஆரம்பித்தான். தேவதை அவன் முன் தோன்றி தங்கக் கோடரியை நீட்ட அவன் அது தனது கோடரி எனக் கூறினான். தேவதை அவன் பொய் கூறுவதாகக் கூறி அந்த ஒரு கோடரியையும் அளிக்காது மறைந்தது.

**இணைப்பு 9.2.1.2**

## செயற்பாட்டுப்பத்திரம்

- மஹாத்மா காந்தி தொடர்பில் விபரங்களடங்கிய கட்டுரையொன்றை வரைக.
- மஹாத்மா காந்தியிடம் காணப்பட்ட நற்பண்புகளைப் பட்டியற்படுத்துக.
- மஹாத்மா காந்தியிடம் காணப்பட்டதைப் போன்று உங்களிடம் காணப்படும் நற்பண்புகளை எழுதுக.
- நீங்கள் அறிந்து கொண்ட, விருத்தி செய்து கொள்ள வேண்டிய நற்பண்புகளைக் குறிப்பிட்டுக் காட்சிப்படுத்துக.

### 9.2.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வை விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வின் முக்கியத்துவத்தை விசாரணை செய்வார்.

**செயற்பாடு** :- அமலனின் குணநலன்

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :- • இணைப்பு 9.2.2.1

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.2.1**

- மாணவர் அறிந்த உலோக வகைகள் சிலவற்றைக் கேட்டறிந்து கரும்பலகையில் எழுதுங்கள்.
- நல்வாழ்வுக்குத் தேவையான குணவியல்புகள் சிலவற்றைக் கேட்டறிந்து கரும்பலகையில் எழுதுங்கள்.
- உலோகங்களில் மிகவும் உயர்ந்த உலோக வகை எது எனக் கேட்டு கரும்பலகையில் எழுதுங்கள்.
- மேற்படி விடயங்களைத் துணையாகக் கொண்டு பின்வருமாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

> ☞ பௌதிக ரீதியில் நிலவுகின்றவற்றிற்கு பெறுமானத்தை நிர்ணயிக்க முடியுமாயினும் ஆளின் பண்புகள் தொடர்பாக அவ்வாறில்லை.
> ☞ பெறுமதி மிகுந்த பொருட்களிலும் பார்க்க மனிதப் பண்புகள் யாவும் மிகவும் பெறுமதி மிக்கவை.
> ☞ நீண்ட கால அடிப்படையில் நோக்கும்போது நேர்மை நல்ல பலன்களை விளைவிக்கும்.

(05 நிமிடங்கள்)

**படி 9.2.2.2**

- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 9.2.2.1 இல் காணப்படும் வெளியீட்டிலிருந்து ஐந்து வீதம் மாணவர்களுக்குப் பகிர்ந்தளித்து செயற்பாட்டுப்பத்திரத்தில் கூறப்பட்டுள்ளவாறு செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- செயற்பாடுகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும்.

(15 நிமிடங்கள்)

படி 9.2.2.3

- குழு முன்வைப்புக்களைக் கருத்திற்கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்படுமாறு கலந்துரையாடலில் ஈடுபடவும்.

| |
|---|
| • நல்வாழ்க்கைக்கான பண்புகள் என்பவை நல்ல மனிதப் பண்புகள் ஆகும்.<br><br>உதாரணம் :-<br><br>☞ பொறுமை.<br>☞ ஏனையோரில் நல்லவற்றைக் காணல்.<br>☞ நேரத்தை உச்ச அளவில் பயன்படுத்தல்.<br>☞ கவனமாகச் செவிமடுத்தல்.<br>☞ நன்றி கூறல்.<br>☞ கருணையுடன் செயற்படல்.<br>☞ தவறுகளை ஏற்றுக்கொள்ளல்.<br>☞ மகிழ்வுடன் இருத்தல்.<br>☞ உதவி செய்தல்.<br>☞ தலையிடுதல்.<br>☞ நல்லெண்ணத்துடன் செயற்படல்.<br>☞ எல்லா நற்பண்புகளும் முக்கியத்துவமுடையவை.<br>☞ அர்ப்பணிப்பு.<br>☞ சுறுசுறுப்பு.<br>☞ ஏனையோரின் மனதைப் புண்படுத்தாதிருத்தல்.<br>☞ நேசமுடன் செயற்படல்.<br>☞ கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியுறல்.<br>☞ தைரியமாக இருத்தல்.<br>☞ சிக்கனம்.<br>☞ சேமிப்பு.<br>☞ எளிமையான வாழ்க்கை.<br>☞ இயற்கையை நேசித்தல்.<br>☞ இப்பண்புகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்க்கை சிறக்கும்.<br>☞ இதன் மூலம் சமநிலையான வாழ்க்கையின் அடிப்படை கட்டியெழுப்பப்படும். |

(20 நிமிடங்கள்)

### கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்

- நற்பண்புகளைப் பெயரிடுவார்.
- நல்வாழ்வுப் பண்புகளை பயிலுதலின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- நல்வாழ்வுப் பண்புகள் பற்றிக் குறிப்பிடும் ஆவணங்களைச் சேகரிப்பார்.
- தம்மால் முடிந்தளவு நல்வாழ்வுப் பண்புகளில் தேர்ச்சி பெற முயற்சிப்பார்.
- நெருங்கியவர்களை நல்வாழ்க்கைப் பண்புகளின் பால் ஈர்ப்பார்.

**இணைப்பு 9.2.1.2.1**

- பின்வரும் கூற்றுக்களை நன்கு வாசியுங்கள்.
- அவற்றின் துணையுடன் ஒருவர் பயிற்சிபெற வேண்டிய நல்வாழ்வுப் பண்புகள் ஐந்து எழுதுங்கள்.
- அவற்றுள் இரண்டின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குங்கள்.

1. யாவருக்கும் தேவையான வளி என்றும் தற்பெருமை கொள்வதில்லை.
2. எம்முடன் போரிடுபவர்கள் எமக்குப் பொறுமையையும் சக்தியையும் தருகின்றனர்.
3. எல்லாவற்றிலும் குறைகளை மாத்திரம் காண்பவராக இருக்க வேண்டாம்.
4. நேரத்தைப் பயன்படுத்துவதில் சிறப்பாற்றல் பெறுங்கள்.
5. உரையாடல்களின்போது அமைதியாயிருக்க வேண்டிய சந்தர்ப்பத்தை விளங்கிக் கொள்ளுங்கள்.
6. நன்றி கூறப் பயிலுங்கள்.
7. கருணையும் அன்பும் மிக்கவராக இருங்கள்.
8. உங்களது தவறைப் பயமின்றி ஏற்றுக்கொள்ளுங்கள்.
9. தற்பெருமை கூடும்போது நபர்கள் வீழ்ச்சியடைவர்.
10. துக்கத்தை விரட்ட சிரித்த முகத்துடன் இருங்கள்.
11. ஏனையோருக்குத் தேவைப்படுபவராக மாறுங்கள்.
12. விமர்சிப்பவர்களுக்கு விடையளிக்க நேரத்தைச் செலவிடாதீர்கள்.
13. எல்லாத் துயரங்களுக்கும் பெறுமதிமிக்க பாடமொன்றுள்ளது.
14. பெறுபவரிலும் பார்க்க கொடுப்பவர் மகிழ்ச்சியடைவார்.
15. குற்றம் கூறுபவருக்கு குற்றங்களைக் கேட்கவும் நேரிடும்.
16. சோம்பேறியை மற்றொரு சோம்பேறியே அண்மிப்பார்.
17. அளவுக்கதிகமாக வசதிகளை நாடவேண்டாம்.
18. சேமிக்கப் பழகியவர்கள் வங்குரோத்தாவதில்லை.
19. சோம்பேறியாக இருப்பவருக்கு மனதுக்கேற்றவாறு சோம்பேறியாக காலம் கடத்த முடியும்.
20. இயற்கையைப் போன்ற மாய வித்தைக்காரன் யாருமில்லை. அதன் அழகை இரசியுங்கள். கேளுங்கள். சுவையுங்கள்.

இதனையொத்த வேறு கூற்றுக்களையும் உங்களால் சேகரித்துக்கொள்ள முடியும். ஒரு குழுவிற்கு அவற்றிலிருந்து ஐந்தை வழங்குதல் போதுமானது.

## 9.2.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வை விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :-

**செயற்பாடு** :- "நற்பண்புகளை பேணி நாட்டைக் கட்டியெழுப்புவோம்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.2.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்புப் படிவம் ஆசிரியர் அறிவுரைப்புப்படிவம்
- இணைப்பு 9.2.3.2 இல் காட்டப்பட்டுள்ளவாறான பத்திரிகை அறிக்கை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.3.1**

- வகுப்பிலுள்ள மாணவர் 5 பேரைக் கண்காணிப்புக் குழுவிற்காகத் தெரிவு செய்து கொள்ளவும்.
- கண்காணிப்புக் குழுவிற்கு இணைப்பு 9.2.3.1 இலுள்ள கண்காணிப்பு பத்திரம்/ படிவத்தை வழங்கி உரியவாறு குறிப்பெடுக்க விளக்கமளிக்கவும்.
- வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களை, 5 குழுக்களாக்க ஒழுங்கமைத்துக் கொள்ள வழிப் படுத்தவும்
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடுங்கள்.

☞ அன்றாட வாழ்வில் நல்வாழ்விற்காக குணவியல்புகள் எம்மையறியாமலேயே புறக்கணிக் கப்படுவதை காணலாம்.
☞ சிந்தித்துச் செயற்படாமையே இதற்கான காரணமாகும்.
☞ இவ்வாறு நல்வாழ்க்கைக்கான பண்புகளைக் கடைப்பிடிக்காமையால் பல்வேறு பிரதிகூலங்கள் ஏற்படும்.
உ-ம்: குடும்பம், பாடசாலை, சுற்றாடல், சமூகம்

(10 நிமிடங்கள்)

**படி 9.2.3.2**

☞ முதலில் ஒழுங்கமைத்த 5 குழுக்களிற்கும் கண்காணிப்பு குழுவிலுள்ள ஒவ்வொருவரையும் உள்ளடக்கவும்.
☞ இணைப்பு 9.2.3.2 இல் குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிக்கையை குழுவுக்கு 1 வீதம் பகிர்ந்தளிக்கவும்.
☞ அதில் காணப்படும் அட்டவணையை பூர்த்தி செய்ய தேவையான ஆலோசனையை வழங்கவும்
☞ மாணவர் முன்வைப்புக்கு சந்தர்ப்பமளிக்கவும்

(15 நிமிடம்)

**படி 9.2.3.3**

- ☞ பல்வேறு குழுக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- ☞ இணைப்பு 9.2.3.2 ஐப் பயன்படுத்தி பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

- சிறுவயதிலிருந்தே நல்வாழ்க்கைக்கான பண்புகளை பயலாமையும், கடைப்பிடிக்காமையும் பிற்காலத்தில் ஏற்படும் பாரிய பிரச்சினைக்கு காரணமாகும்.

- நல்வாழ்வின் பண்புகளை வளர்த்துக் கொள்ளளாமென பெறுமதியான மனித வாழ்க்கை, கால்நடைகள், பொதுச் சொத்துக்கள், இயற்கைச் சூழல் உட்பட பல்வேறு தரப்புக்களும் பாதிக்கப்படுகின்றன.
  உ-ம்:
  - ☞ மனித வாழ்வை முடிவுறுத்தச் செய்தல்
  - ☞ ஆளிடைத் தொடர்புகள் முறிவடைவதால் மனிதன் தனிமைப்படுத்தப்படுகின்றான்.
  - ☞ இயற்கை வளங்கள் அழிவுறுதல்
  - ☞ செலவீனம் அதிகரிப்பதால் சேமிப்புக் குறைவடைதல்
  - ☞ குடும்ப வருமானம் மட்டுமன்றி தேசிய வருமானமும் விரயமாதல்

- நல்வாழ்விற்கான பண்புகளைக் கடைப்பிடிக்காமையால் தனிமனித அபிவிருத்தியன்றி தேசிய அபிவிருத்தியும் பின்னடையும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- நல்வாழ்விற்கான குணவியல்புகளைக் கடைப்பிடிக்காமையால் ஏற்படும் மோதல்களைப் பட்டியற் படுத்துவார்.
- நல்வாழ்விற்கான குணவியல்புகளை வெளிப்படுத்தாமையால் தனியாள் விருத்தியில் விரும்பத் தகாத விடயங்கள் இடம்பெறும் எனக் கருத்துத் தெரிவிப்பார்.
- பிரஜைகளிடையே நல்வாழ்விற்கான குணவியல்புகளை உறுதிப்படுத்தாது விடின் தேசிய அபிவிருத்தி பின்னடையும் என்பதை சுருக்க குறிப்பின் மூலம் தெரிவிப்பார்.
- நல்வாழ்விற்கான குணவியல்புகளைக் கடைப்பிடிக்க திடசங்கற்பம் பூணுவார்.
- நல்வாழ்விற்கான குணவியல்புகளைக் கடைப்பிடிக்காமையால் ஏற்படும் விளைவுகளை முன்வைத்து ஏனையோருக்கு சரியான வழியை முன்வைப்பார்.

**இணைப்பு 9.2.3.1**

- உங்கள் நண்பர்களது நடத்தைகளை நன்கு அவதானிக்கவும்.
- பின்வரும் நடத்தைகள் காணப்படுமாயின் உரிய நிரலில் (√) என அழையாளம் இடல்.

| தொடர் இல. | நடத்தைகள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | கூச்சலிடுதல் | | |
| 2 | பொருட்களின் பாதுகாப்புக்குறித்துக் கவனமின்மை | | |
| 3 | தனது நலன் குறித்து மாத்திரம் சிந்தித்தல் | | |
| 4 | ஒப்படைக்கப்படும் வேலைகளை புறந்தள்ளுவதில் கவனமாயிருத்தல் | | |
| 5 | ஏனையோர் மீது குற்றஞ்சாட்டுதல் | | |
| 6 | பொறுமையின்றி செயற்படுதல் | | |
| 7 | தனது ஏனைய வேலைகளில் ஈடுபடல் | | |

இங்கு மேலதிகமான கருத்துக்களையும் குழுவின் ஊடாக முன்வைக்கப்படும்.

**இணைப்பு 9.2.3.2**

- கீழ்வரும் பத்திரிகை அறிக்கையை குழுவிற்கு பகிர்ந்தளித்து கலந்துரையாடலில் ஈடுபடுக.
- உங்களது குழுவின் கருத்துக்களையும் உள்ளடக்கியவாறு வழங்கிய அட்டவணையைப் பூர்த்தி செய்க.

  (பின்வரும் தலைப்புக்களுக்கேற்றவாறு பத்திரிகைச் செய்திகளை சேகரித்துக் கொள்ளுமாறு ஆசிரியர் அறிவுறுத்தப்படுகின்றனர்.)

தலைப்புக்கள்

1. குடும்பச் சொத்தைப் பகிர்வதில் ஏற்பட்ட தகராறு மரணம் வரையில் இட்டுச் செல்லல்.
2. மது போதையுடன் வாகனம் செலுத்தும் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் ரத்துச்செய்யப்படல் வேண்டும்.
3. சிக்கனமின்மையால் பாடசாலையின் பௌதிக வளங்கள் விரயமாகின்றன.
4. சில பார்வையாளர்களினால் (சுற்றுலாப்பயணிகள்) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இயற்கைச் சூழல் பாதிக்கப்படுகிறது.
5. தமது தேவையைப்பூர்த்தி செய்து கொள்ளச் செல்லும் பொதுமக்கள், அதிகாரிகளினால் அவமரியாதைக்குட்படுத்தப்படல்.

**நல்வாழ்க்கைப் பண்புகளைக் கடைப்பிடிக்காமை**

| தனியாளைப் பாதிக்கும் விதம் | சமூகத்தைப் பாதிக்கும் விதம் |
|---|---|
| | |

### 9.2.4 செயற்பாடு

**தேர்ச்சி** :- போட்டித்தன்மை வாய்ந்த உலகில் நல்வாழ்வை விருத்தி செய்து கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :-

**செயற்பாடு** :- "நல்வாழ்விற்குப் பாதையமைப்போம்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.2.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுரைப்புப்படிவம்
- இணைப்பு 9.2.4.2 இல் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டுப்பட்டியல்
- இணைப்பு 9.2.4.3 இல் காண்பிக்கப்படும் படம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.4.1**
- இணைப்பு 9.2.4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் அறிவுறுத்தற்படிவத்திற்கு அமைய மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- செயற்பாட்டின் நினைவில் மாணவர்க்கு ஏற்பட்ட உணர்வை விசாரிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

> ☞ தன்னில் நல்வாழ்க்கைக்கான பண்புகளை தன்னாலேயே உருவாக்க முடியும்.
> ☞ தம்முள் நல்வாழ்க்கைக்குத் தேவையான குணவியல்புகளை வளர்த்துக் கொள்வதற்கான சக்தி காணப்படுகிறது.
> ☞ நல்வாழ்க்கைக்குரிய பண்புகளுடன் வாழ்வதென்பது எமது வாழ்க்கைப் பயணத்தை இலகுபடுத்தும்.

(08 நிமிடங்கள்)

**படி 9.2.4.2**
- மாணவர்களைச் சிறு குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.2.4.2 இல் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை பிரதிபலிக்கும் வண்ணம் இரண்டு நிமிடங்களுக்குட்பட்ட வகிபாகமேற்று நடிக்கும் நிகழ்வை உருவாக்க வழிப்படுத்தவும்.
- இணைப்பு 9.2.4.3 இல் காண்பிக்கப்படும் மாதிரி உருவை மாணவர்களுக்கு வழங்கி அவ்வவ் வகிபாகமேற்று நடித்தலை கண்காணிப்புக்குட்படுத்தி அம்மாதிரியை பூரணப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளை வழங்கவும்.

(12 நிமிடங்கள்)

படி 9.2.4.3

- அவ்வவ்வகிபாகமேற்று நடித்தலினூடாக தமக்கேற்பட்ட உணர்வுகைள மாதிரியுரு மூலம் வெளிப்படுத்திய மாணவர்களை ஊக்கப்படுத்தவும்.
- ஒவ்வொரு வகிபாகமேற்று நடித்தலையும் 2 நிமிடங்களுக்கு முன்வைக்க வழிப்படுத்தவும்.
- வகிபாகமேற்று நடித்தல் நிறைவுற்றதும் எடுத்துக் கொண்ட குறிப்புக்களைத் தனித்தனியாக முன்வைக்க வழிப்படுத்தவும்.
- கீழ்வரும் கருத்துக்கள் வெளப்படும் வண்ணம் தொகுப்புரையில் ஈடுபடவும்.

- நபர்களின் உடல், உள, சமூக மற்றும் ஆத்மிக அபிவிருத்திக்கு நல்வாழ்க்கைப் பண்புகள் அவசியம்.

- உடல் வளர்ச்சிக்கானவை.
  - ☞ காலையிலேயே எழுந்திருத்தல்.
  - ☞ தமது தனிப்பட்ட சுகாதாரத்தை சீராகப் பேணல்.
  - ☞ குறைந்த செலவில் பயனுள்ள உணவுப் பானங்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளல்.
  - ☞ தேவையான உடற்பயிற்சியைப் பெறும் நோக்குடன் வீட்டு வேலைகளில் ஈடுபடல்.
  - ☞ நித்திரை, ஓய்வு ஆகியவற்றை முறையான திட்டமொன்றின்படி பெறல்.
  - ☞ உடலின் புறக் கவர்ச்சி பற்றி கவனம் செலுத்துதல்.

- உள அபிவிருத்திக்காக
  - ☞ ஏனையோரின் கருத்துகளுக்குச் செவிமடுத்தல்.
  - ☞ தமது கருத்துக்களை அமைதியாகவும் தெளிவாகவும் சமர்ப்பித்தல்.
  - ☞ பக்கச்சார்பின்றி ஏனையோருக்கு விடயங்களை விளக்குதல்.
  - ☞ தூர நோக்குடன் செயலாற்றல்.
  - ☞ எப்போதும் புத்தகங்கள், நூல்கள் அல்லது பொருத்தமான வேறு ஊடகங்களின் துணையுடன் பரந்த அறிவைப் பெறல்.
  - ☞ பிரச்சினையை விரிவாக நோக்குதல்.

- சமூக அபிவிருத்திக்கானவை
  - ☞ தேவையானபோது மன்னிப்பு கோரலும் நன்றி கூறலும்.
  - ☞ முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏனையோருக்கு உதவுதல்.
  - ☞ நேயமான நபரிடையே தொடர்புகளைப் பேணல்.
  - ☞ பொதுச் சொத்துக்களைக் கவனமாகக் கையாளல்.
  - ☞ இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்.
  - ☞ ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மதித்தல்.

- ஆத்மீக அபிவிருத்திக்கானவை
  - ☞ மகிழ்ச்சியாக இருத்தல்.
  - ☞ கிடைத்ததைக் கொண்டு திருப்தியுறல்.
  - ☞ கருணையுடன் செயற்படல்.
  - ☞ பணிவுடன் நடந்துகொள்ளல்.
  - ☞ சிறந்த விளக்கத்துடன் செயலாற்றல்.
  - ☞ எளிமையான வாழ்வு வாழல்.

- தம்மிடம் குறைவாகவுள்ள நல்வாழ்வுப் பண்பைப் பயிலும் ஆரம்ப சந்தர்ப்பம் நாளை ஆரம்பமாகும் எனக் கருதாது அது இன்றே, இப்போதே ஆரம்பமாகும் என நினைத்தல்.
- வாழ்நாளில் முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினை அல்லது காதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியுமானதாயினும் அவற்றுக்கு முகங்கொடுக்கும்போது நல்வாழ்வுக்கான குணப்பண்புகளை மேலெழச் செய்வதன் மூலம் அந்த நிலைமைகளின் கசப்பான தன்மையை அல்லது துர்ப்பாக்கியத்தைக் குறைத்துக்கொள்ளலாம்.
- மகிழ்ச்சியாகவும் கருத்துடனும் தனியாக வாழ்வதற்கும் கூட்டாக வாழ்வதற்கும் சகவாழ்வுப் பண்புகள் அவசியம்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தம்முள் நல்வாழ்வுப் பண்புகளை வளர்த்துக்கொள்வது தாமே எனக் கருத்துரைப்பர்.
- குணநலன்களை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் தம்முள் உள்ளதெனக் கூறுவார்.
- நல்வாழ்வுப் பண்புகளில் தேர்ச்சி பெறுவதன் மூலம் தமது உடல், உள, ஆத்மிக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை எண்ணக்கரு படமொன்றின் மூலம் முன்வைப்பார்.
- நேர்மையாக நல்வாழ்க்கைப் பணியைப் பேணியவாறு தனிப்பட்ட முறையில் வசதியையும் திருப்தியையும் பெறுவார்.
- நல்வாழ்வுப் பண்புகள் தொடர்பில் ஏனையோருக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வார்.

**பின்தொடர்வேலை**

- நல்வாழ்வுப் பண்புகளில் தேர்ச்சிபெறல் எனது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதம் எனும் தலைப்பில் உடல், உள, சமூக மற்றும் ஆத்மிக அபிவிருத்தித் துறைகள் அடங்கும் எண்ணக்கருப் படமொன்றை தயாரிக்குக.

**இணைப்பு 9.2.4.1**

**ஆசிரியர் அறிவுறுத்தற்படிவம்**

- இச்செயற்பாட்டிற்கு நான்கு நிமிட நேரத்தைப் பயன்படுத்துங்கள்.

- உங்கள் குரலை மிருதுவானதாக மாற்றியபடி மிக அமைதியாக படிப்படியாக மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

  - ☞ வசதியான ஆசனத்தில் அமர்ந்துகொள்ளுங்கள்.
  - ☞ இரண்டு கைகளையும் கால்களையும் தமக்கு வசதியானவாறு வைத்துக்கொள்ளுங்கள்.
  - ☞ கண்களை மூடிக்கொள்ளுங்கள்.
  - ☞ நன்கு சுவாசத்தை உள்வாங்கி அமைதியடையுங்கள்.
  - ☞ கடந்த சில நாட்களில் கற்ற நல்வாழ்க்கைப் பண்புகளை ஞாபகப்படுத்துங்கள்.
  - ☞ அதே சமயம் நல்வாழ்க்கைப் பண்புகளை மேம்படுத்திக் கொள்வதில் தடையாக அமையும் யாதாயினும் இணக்கமற்ற பண்புகள் உங்களிடம் காணப்படுமாயின், அதுபற்றி மனதால் எண்ணிப் பாருங்கள்.
  - ☞ எஞ்சியிருக்கும் அவ்வாறான வேறு சிறிதளவேனும் பாதகமான பண்புகள் இருக்குமாயின் அவற்றை இனங்காணுங்கள்.
  - ☞ இப்போது வெள்ளைத்தாள் ஒன்றையும் பேனாவொன்றையும் மனதால் கற்பனை செய்துகொள்ளுங்கள்.
  - ☞ கற்பனையில் பேனாவை எடுத்து வெள்ளைத்தாளின் மீது உங்களிடம் உள்ளதெனக் கருதும் பாதகமான பண்பை பெரிய எழுத்ததில் எழுதுங்கள்.
  - ☞ யாரும் அதனைக் காணமாட்டார்கள் ஆகையால் எதுவித பயமுமின்றி எல்லாப் பண்புகளையும் ஒன்றுவிடாது எழுதுங்கள்.
  - ☞ இப்போது எழுதியவற்றை மீண்டும் வாசித்து ஞாபகப்படுத்துங்கள்.
  - ☞ இப்போது அதே பேனாவினால் எழுதிய யாவற்றையும் கீறிவிடுங்கள்.
  - ☞ நன்கு கீறிவிடுங்கள்.
  - ☞ அடுத்து கடதாசியை மனதால் எடுத்து கசக்குங்கள்.
  - ☞ சிறியதொரு பந்தாகும் வரை அதனைக் கசக்குங்கள்.
  - ☞ மேற்படி கடதாசிப் பந்தை முடிந்த வரை வேகமாக ஆகாயத்தில் வீசி எறியுங்கள்.
  - ☞ அது தூர வானில் பறந்து செல்லும் விதத்தை மனதால் காணுங்கள்.
  - ☞ அது சிறிய ஒரு புள்ளியாக மாறி மறைந்துபோய் தம்மிடமிருந்து முற்றுமுழுதாக அகன்றதெனக் கருதுங்கள்.
  - ☞ தற்போது உங்களிடம் இருப்பவை மிகப் பெறுமதி வாய்ந்த நல்வாழ்க்கைப் பண்புகள் மாத்திரமே எனக் கருதுங்கள்.
  - ☞ ஆழ்ந்து சுவாசியுங்கள்.
  - ☞ உங்களைப் பற்றி நீங்கள் திருப்தியடையுங்கள்.
  - ☞ உங்களைப் பற்றி மற்றவர்கள் பெருமையாகக் கதைக்கும் விதத்தை மனதால் காணுங்கள்.
  - ☞ மெதுவாகக் கண்களைத் திறந்து அமைதியடையுங்கள்.

- உங்கள் ஓய்வுநேரத்தில் இச்செயற்பாட்டை தனியாகச் செய்யமுடியும் என்பதை ஞாபகப்படுத்துங்கள்.

- இங்கு தம்முள் தோன்றிய எண்ணங்களைக் கூறத் தயாராகுமாறு அறிவுறுத்துங்கள்.

**இணைப்பு 9.2.4.2**

- நீங்கள் இதுவரை கற்ற நல்வாழ்வுப் பண்புகளை வெளிக்காட்டக்கூடியவாறு பின்வரும் ஒரு சந்தர்ப்பம் தொடர்பாகப் பாத்திரமேற்று நடிக்கும் சந்தர்ப்பமொன்றை முன்வைக்கத் தயாராகுங்கள்.

- தரப்பட்ட எண்ணக்கருப் படவாக்கத்தின் மாதிரியுரு பற்றியும் கவனம் செலுத்துங்கள்.

- மேற்படி ஒவ்வொரு சமர்ப்பித்தல் மூலமும் உங்கள் வாழ்வின் எந்தத்துறையை மேம்படுத்த உதவும் நல்வாழ்வு குணப்பண்பு வெளிக்காட்டப்படுகிறது என அறியுங்கள்.

- நீங்கள் இனங்கண்ட நல்வாழ்வுப் பண்பு எண்ணக்கருப் படவாக்கத்தில் குறிப்பிடப்படும் பாகங்கள் தொடர்பில் மிகச் சுருக்கமாக ஒவ்வொருவரும் தனித்தனியாகக் குறித்துக்கொள்ளுங்கள்.

- முடிவில் எண்ணக்கருப் படவாக்கத்தின் துணையுடன் குழுவின் கருத்தைச் சமர்ப்பிக்கத் தயாராகுங்கள்.

## பாத்திரமேற்று நடிப்பதற்கான தலைப்புக்கள்

- காலையில் நித்திரைவிட்டு எழுந்தது முதல் உணவு உட்கொள்ளல், உடற்பயிற்சி செய்தல், ஓய்வு, நித்திரை மற்றும் சுத்தம் ஆகியவற்றுடன் தமது உடல் நலத்தைப் பேணுவதற்கான வேலைத்திட்டம் பற்றி சகோதர சகோதரிகளுடன் நடத்தும் உரையாடல்.

- வீட்டின் மின்சாரப் பயன்பாடு, குப்பைகூழங்களை அகற்றல், குடும்பத்தின் ஒற்றுமையைப் பேணல் பற்றி வீட்டுக்கு வந்த உறவினருடன் கருத்துப் பரிமாறல்.

- பல்வேறு வடிவலங்காரம், நவீன தொழினுட்ப உபகரணங்கள், பொழுதுபோக்கு, வெகுசன ஊடகத்தை கையாளல் ஆகியன பற்றி நண்பர்களின் மத்தியில் நடைபெறும் உரையாடல்.

- அயல் வீடொன்றில் வசிக்கும் பாடசாலை செல்லும் வயதிலுள்ள பிள்ளையொன்றுக்கு உதவும் நோக்குடன் சகோதர சகோதரிகள் மத்தியில் நடைபெறும் கலந்துரையாடல்.

- வரவிற்கேற்ப புதிய ஆண்டில் குடும்பத்தவருக்கும் வீட்டுக்கும் தேவையான பொருட்களை வாங்குவதற்காக பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே நடைபெறும் கலந்துரையாடல்.

## இணைப்பு 9.2.4.3


உடல் வளர்ச்சி
1.
2.
3.
4.
5.
உள வளர்ச்சி
1.
2.
3.
4.
5.
நபரின் வாழ்க்கை
சமூக வளர்ச்சி
1.
2.
3.
4.
5.
ஆத்மிக வளர்ச்சி
1.
2.
3.
4.
5.

## 9.3 வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார்

(பாடவேளைகள் 08)

**அறிமுகம்**

வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. வாழ்க்கையை ஒன்றுடனொன்று பிணைக்கப்பட்ட தீர்மானங்களின் வரிசை என அழைக்கலாம். சில சந்தர்ப்பங்களில் மிகக் குறுகிய காலத்தினுள் பெருமளவு தீர்மானங்களை நாங்கள் எடுக்க நேரிடுகின்றது. தீர்மானம் எடுத்தல் இலகுவான செயலாகக் காணப்பட்டபோதிலும் அது சிக்கலான அறிவுசார் செயற்பாடாகும். நாம் தீர்மானம் எடுப்பதற்கு எங்களுடையதும் பிறரினதும் உணர்வுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும் ஆகவே பயனுடைய தீர்மானங்களை எடுப்பதற்கு அனுபவங்கள், பரந்த நோக்கு, சிறந்த அறிவு என்பன அவசியமாகும். நாம் எடுக்கும் தீர்மானம் ஒன்றின் விளைவுகள் எங்களுக்கு மட்டுமன்றி எங்கள் குடும்பம், பாடசாலை, சமூகம் ஆகியவற்றிலும் தாக்கம் செலுத்தும். சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான வழிகாட்டல்கள் மூலம் வாழ்க்கையைச் சிறப்பாகக் கொண்டு நடத்துவதற்கான திறனைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றை இப்பாடத்தைக் கற்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தேர்ச்சி** :- வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- 9.3.1 வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் நுணுகியாய்வார்.

9.3.2 பல்வேறு சவால்களின் போது தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

**பாட உள்ளடக்கம்**

**9.3.1 வாழ்க்கையின் பல்வேறு சவால்களையும் சந்தர்ப்பங்களையும் விசாரணை செய்வார்.**
- சவால்களை இனங்காணுதல் (நோக்கங்களை சாதகமாக நிறைவேற்றிக்கொள்ளும்போது ஏற்படும் தடைகள் அல்லது வரையறைகள்)
- சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் - தமக்கு, தமது குடும்பத்துக்கு, பாடசாலைக்கு, சமூகத்திற்கு, வேறு சந்தர்ப்பங்களில்.
- சவால்கள் வரும் சந்தர்ப்பங்களில் எழுகின்ற ஆக்கபூர்வமான விடயங்கள்.
- சவால்களை பயனுள்ள வாழ்க்கை அனுபவங்களாக்கிக் கொள்ளுதல்.

**9.3.2 பல்வேறு சவால்களின்போது தலைமைத்துவ பண்புகளை விருத்தி செய்து கொள்வார்**
- சவால்களை எதிர்கொள்ளும்போது ஏற்படும் நிலைகள் - தனிப்பட்ட ரீதியாக, கூட்டாக
- சவால்களின்போது சந்தர்ப்பங்களுக்கேற்ப தலைமைத்துவத்தை ஏற்றல்.
- தலைமைத்துவப் பண்பை மேம்படுத்தியவாறு சவால்களை எதிர்நோக்குதல்.

**9.3.3 வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வார்**
- பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றை வெற்றிகொள்வதற்கான மாற்றுவழிகள்.
- ஆக்கபூர்வமான முறைகளைப் பரீட்சித்துப் பார்த்து சிறந்த மாற்று வழியைத் தெரிவுசெய்தல்.
- பிரச்சினைகள், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பவற்றை வெற்றிகரமாக எதிர்நோக்குதல்.

## 9.3.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் நுணுகியாய்வார்.

**செயற்பாடு** :- "அறிவினால் சவால்களை வென்றிடுவோம்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.1.1 இல் உள்ள பாடல்
- இணைப்பு 9.3.1.2 இல் உள்ள விடயக் கற்கை
- கடதாசி, பேனை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.1.1**

- இணைப்பு 9.3.1.1 இல் உள்ள பாடலை வகுப்பில் (மாணவரைக் கொண்டு/ ஒலிநாடா உதவியுடன்) பாடுங்கள்.
- அதிலுள்ள கருத்துக்களை மாணவர்களிடம் கேளுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> ☞ வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவித சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது.
> ☞ அவ்வாறான வாழ்க்கைச் சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும்.
> ☞ சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை விட்டு எம்மால் விலக முடியாது.
> ☞ சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்துச் சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.
> ☞ சரியான தீர்மானங்கள் வெற்றிகரமான வாழ்க்கைக்கு ஏதுவாகின்றன.

(07 நிமிடங்கள்)

**படி 9.3.1.2**

- இணைப்பு 9.3.1.2 இல் குறிப்பிடப்படும் நிகழ்வுச் சந்தர்ப்பம் கொண்ட பத்திரத்தை வகுப்பு மாணவரிடையே பகிரவும்.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(20 நிமிடங்கள்)

**படி 9.3.1.3**

- மாணவர் தமது கருத்துக்களை வகுப்பறையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் பங்குபற்றலுடன் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடல் நடத்துக.

| |
|---|
| ☞ வாழும்போது எப்போதும் சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுதல்.<br>☞ சவால்கள் வரும்போது ஆக்கபூர்வமானதும் சரியானதுமான தீர்மானங்களை எடுத்தல்.<br>☞ வாழ்க்கையில் ஏற்படும் சவால்களைப் பயனுள்ள வாழ்க்கை அனுபவங்களாகக் கொள்ளுதல்.<br>☞ அதனூடாக வாழ்க்கையில் வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். |

(13 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- வாழ்க்கையில் ஏற்படும் சவால்களைப் பெயரிடுவார்.
- வாழ்க்கையில் சவால்களை எதிர்நோக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- சவால்களுக்கு ஆக்கபூர்வமாக முகங்கொடுப்பார்.
- ஆக்கபூர்வமான தீர்மானங்களை மேற்கொண்டு வாழ்க்கையைச் சாதகமானதாக்கிக் கொள்வார்.
- சரியான தீர்மானங்களினூடாக சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வார்.

**இணைப்பு 9.3.1.1.2**

இச்சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான பாடலொன்றை அமைத்து இசைக்கவும்.

**இணைப்பு 9.3.1.1.2**

1. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வினை நீங்கள் எதிர்கொள்ளும் முறையினை விபரிக்குக.

   மகாவலி நதி பெருக்கெடுக்கும் மழைக்காலத்திலே ஒருநாள் இரவில் நித்திரையில் இருந்தபோது எவரோ ஒருவர் பெருங்குரலில் சத்தமிடும் ஒலி கேட்டு விழித்தெழுந்தீர்கள். எழுந்து பார்த்தபோது உங்கள் வீட்டினுள் இரண்டு அடி அளவு உயரத்தில் நீர் நிற்பதைக் காண்கிறீர்கள். வீட்டுக்கு வெளியேயும் அயல் வீடுகளிலும் அந்நிலைமையே காணப்பட்டது. நீர்மட்டம் விரைவாக உயர்ந்து செல்வதாகத் தெரிந்தது. இவ்வேளையில் நீங்கள் செயற்படும் விதத்தை விபரிக்குக.

2. திலகன் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவன். ஒருநாள் திலகன் பெற்றோருடனும் தம்பியுடனும் கண்டிக்குப் பயணம் செய்தான். வழியில் அவர்கள் பயணம் செய்த வேன் விபத்துக்குள்ளானது. விபத்தில் திலகனின் தகப்பனாலும் தம்பியும் கடுமையான காயத்துக்கு உள்ளானார்கள். நடுங்கிப் போன தாயாரும் மயக்கமுற்றுவிட்டார். சிறு காயங்களுடன் தப்பியது திலகன் மட்டுமே. நீங்கள் திலகனாக இருந்தால் இச்சந்தர்ப்பத்தை எதிர்கொள்ளும் விதத்தை விபரிக்குக.

## 9.3.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- பல்வேறு சவால்களின் போது தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு** :- "தலைமைத்துவத்தை நோக்கி"

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.2.1 இல் குறிப்பிடப்படும் சம்பவம்
- இணைப்பு 9.3.2.2 இற்கான ஆய்வுப்பத்திரம்
- இணைப்பு 9.3.2.3 - ஆய்வுப்பத்திரம்
- 5 நிற கண்ணாடிக் குமிழ்கள், ஊசி, நூல், பிறிஸ்டல் மட்டை, கத்தரிக்கோல், கடதாசி, பசைத்தப்பி.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.2.1**

- இணைப்பு 9.3.2.1 இல் குறிப்பிடப்படும் செய்தியை வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலிருந்து எழுகின்ற கருத்துகள் பற்றி மாணவர்களிடம் விசாரியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> ☞ வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் எதிர்நோக்கவேண்டி நேரிடுதல்.
> ☞ அவ்வாறான சந்தர்ப்பங்களில் சவால்களின் நிலைமையை நன்கு இனங்கண்டுகொள்ளுதல்.
> ☞ தன்னம்பிக்கையுடன் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.3.2.2**

- மாணவரை 5-7 பேர் கொண்ட சிறு குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் 3 நிறக்குமிழ் வீதம் (சிறு பைக்கட்டுகள் 3), நூல், ஊசி, பிறிஸ்டல் மட்டை 01, கத்தரிக்கோல் வீதம் பகிர்ந்தளிக்கவும்.
- இணைப்பு 9.3.2.2 குறிப்பிட்ட ஆய்வுப்பத்திரத்தை வகுப்பு மாணவர் குழுக்களிடையே பகிரவும்.
- மாணவரை உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- இணைப்பு 9.3.2.3 ஐ வழங்கவும்.
- செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(25 நிமிடங்கள்)

**படி 9.3.2.3**

- குழுக்களின் ஆக்கங்களை வகுப்பில் முன்வைக்கச் செய்யுங்கள்.
- மாணவர் தமது கருத்துக்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் பங்குபற்றுதலுடன் பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துங்கள்.
- இணைப்பு 9.3.2.3 ஐ சமர்ப்பித்த மாணவரின் முன்வைப்பை மதிப்பிடவும்.
- பின்வரும் விடயங்களை வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடலை நடத்துங்கள்.

> ☞ தனியாகவும் கூட்டாகவும் வாழ்வின் சவால்களை எதிர்நோக்க நேரிடுதல்.
> ☞ சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் எவரேனும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்.
> ☞ பொறுப்பு மிக்க தலைவனாக சவால்களுக்கு முகம் கொடுத்தல்.
> ☞ சவால்களை வெற்றிகொண்டு வாழ்க்கையைச் சாதகமாக நடத்துதல்.

(45 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- வாழ்க்கையில் சவால்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் பல்வகைப்பட்டவை என ஏற்றுக்கொள்வார்.
- சவால்கள் ஏற்படும் வேளைகளில் தலைவனாகச் செயற்படுவார்.
- தலைமைத்துவப் பண்புகளை தமக்குள்ளே வளர்த்துக்கொள்வார்.
- சவால்களை வெற்றிகொண்டு வெற்றிமிக்க தலைவனாக சமூக முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்வார்.

## இணைப்பு 9.3.2.1

கீழே தரப்பட்டுள்ள நிகழ்வினை நன்கு வாசியுங்கள்.

சூரியா 15 வயது நிரம்பிய சிறுமி. அவளது தந்தை அவள் குழந்தையாக உள்ளபோதே இறந்துவிட்டதால் பாட்டி, அம்மா ஆகியோரின் பாதுகாப்பில் சூரியா, அவளின் தம்பி, தங்கை ஆகியோரும் வாழ்ந்து வந்தனர். தந்தை இல்லாத குடும்பத்தின் பெருஞ்சக்தியாக சூரியாவின் தாய் இருந்தார். அவர் கைத்தொழிற்சாலைகளில் இருந்து கழிவாக அகற்றப்படும் துண்டுத் துணிகளிலிருந்து கால்துடைப்பான், செல்லப்பிராணிகள் என்பன தயாரித்து விற்பனை செய்துவந்தார். பாடசாலை முடிவடைந்து வீட்டுக்கு வரும் சூரியாவும் சிலசமயங்களில் தாய்க்கு உதவி செய்வதுண்டு. சடுதியாக ஏற்பட்ட வாகன விபத்தில் சூரியாவின் அம்மாவும் மரணமானார். தாயாரின் திடீர் மரணத்தினால் குடும்பத்துக்கு உண்டான சவால்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பும் தலைமைத்துவமும் சூரியாவுக்கு ஏற்பட்டது. அவள் அச்சமின்றி துணிவுடன் இந்த சவால்களை எதிர்நோக்கத் தயாரானாள். நீங்கள் சூரியாவெனில்... -

- நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் யாவை?
- சவால்களை சந்தித்த உங்களுக்குள்ள பொறுப்பு யாது?
- நீங்கள் சவால்களை வெற்றிகொள்ளும் விதத்தினை விபரிக்குக.

## இணைப்பு 9.3.2.2

### ஆய்வுப்பத்திரம் 1

- உங்களது குழுவிற்கக் கிடைத்த குமிழ், ஊசி, நூல் ஆகியவற்றைக் கொண்டு ஆக்கமொன்றைத் தயாரிக்க. (ஏனைய உபகரணங்களையும் பயன்படுத்தி)
- தேடல் படி 1 இற்கு 10 நிமிடங்களையும், தேடல் படி 2 இற்கு 10 நிமிடங்களையும் செலவிட்டு தேடலிலீடுபடுக.

## இணைப்பு 9.3.2.3

### ஆய்வுப்பத்திரம் 2

குழுவாகப் பின்வரும் விடைகளுக்கு விடையளிக்க.

1. உங்களது குழு முகங்கொடுத்த சவால்கள்/ தடைகள் எவை?
2. நீங்கள் தனித்தனியாக முகங்கொடுத்த பிரச்சினைகள்/ தடைகள்/ சவால்கள் எவை?
3. அவற்றை வெற்றிகொள்ள நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?
4. உங்களது குழுவுக்குத் தலைமைத:துவம் வழங்கப்பட்டிருப்பின் அத்தலைவர் யார்?
5. தலைவர் நியமிக்கப்பட்ட விதம் யாது?
6. தலைவரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளைப் பட்டியலிடுக.
7. இச்செயற்பாட்டின் மூலம் கிடைதத அனுபவங்கள் யாவை?

## 9.3.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- வாழ்வில் சந்தர்ப்பங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து, விளைதிறன்மிக்க தீர்மானங்களை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- வாழ்வின் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை வெற்றிகரமாக எதிர் கொள்வார்.

**செயற்பாடு** :- "சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்போம்."

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.3.1
- எழுதும் கடதாசி
- நலபான ஜாதகக்கதை அல்லது பந்துகாபய இளவரசனின் இளமைக்காலம் பற்றிய கதை (தருவித்துக் கொள்க)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.3.1**

- நலபான ஜாதகக் கதை அல்லது பந்துகாபயனின் இளமைக்காலத்துக்குரிய நிகழ்ச்சியினை மாணவர்களுக்கு முன்வைக்குக.
- அக்கதை மூலம் இளவரசன் இளமைக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களின்போது ஆக்கபூர்வமாகச் செயற்பட்ட விதத்தை மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துக.

> ☞ எவரும் பல்வேறு சூழ்நிலைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுகின்றது.
> ☞ சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு சாதகமான விளைவுகளைக் கண்ட பலரும் எங்களிடையே இருக்கின்றனர்.
> ☞ அவர்கள் சவால்கள், பிரச்சினைகளை எதிர்கொண்டு சாதகமான பலன்களைப் பெறுவதற்கு ஆக்கபூர்வதாகச் செயற்பட்டுள்ளனர்.
> ☞ நாமும் எப்போதும் சவால்களை, அவற்றை வெற்றி காண்பதற்கு செயற்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.3.3.2**

- பொருத்தமான விதத்தில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 9.3.1.1 ஐ மாணவர்க்கு வழங்கி அதிலுள்ள நிகழ்வை வாசித்து விடையைக் காணுவதற்கு ஆலோசனைகள் வழங்குக.
- வழிகாட்டுவதுடன் தேவையான வசதிகளை வழங்குக.

(15 நிமிடங்கள்)

படி 9.3.3.3

- மாணவர் விடைகளை வழங்கிய குழுச் செயற்பாட்டின் தகவல்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- அனைத்துக் குழுக்களினதும் கருத்துக்களை கவனத்திற்கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

| |
|---|
| ☞ வாழ்க்கையானது சவால்கள், தடைகள், பிரச்சினைகள் என்பவற்றைக் கொண்டது.<br>☞ எந்தவொரு நேரத்திலும் இத்தகைய நிலைமைகளை எதிர்நோக்க வேண்டி நேரிடும். (பிரச்சினைகள், தடைகள், சவால்கள்) இது வாழ்க்கையின் யதார்த்தமாகும்.<br>☞ வாழ்க்கையில் இவ்வாறான ஆபத்தான பிரச்சினைகள் ஏற்படும் வேளைகளில் துணிச்சலுடன் அறிவுபூர்வமாக ஆராய்ந்து சமயோசித புத்தியுடன் செயற்படுதல் வேண்டும்.<br>☞ தீர்மானம் எடுக்கும் முன்னர் பிரச்சினைகளை நன்கு அவதானித்து பின்னர் தமக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நன்மைகளைத் தரும் விதத்தில் தீர்வு காணுதல்.<br>☞ நல்ல அறிவுபூர்வமான தீர்மானங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். இல்லையெனில் பின்னால் வருந்த நேரிடும்.<br>☞ எந்நேரத்திலும் எவ்விடத்திலும் நல்ல சிந்தனையுடன் அறிவுடன் நடந்து அமைதியுடன் சவால்களை எதிர்நோக்கின் நன்மைகள் கிட்டும்.<br>☞ தீர்மானங்களை எடுக்கும்போது மாற்றுவழிகளில் அதிக நன்மைகளைக் கொண்ட தீர்மானங்களை எடுக்கும் விதத்தில் செயற்பட வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- பிரச்சினைகள், தடைகள், சவால்கள் என்பன ஏற்படும்போது செயற்பட வேண்டிய விதம் பற்றி விளக்குவார்.
- சவால்கள், பிரச்சினைகள், தடைகள் என்பன ஏற்படும் வேளைகளில் துணிவுடன் அறிவுபூர்வமான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்வார்.
- குழுச் செயற்பாடுகளின்போது ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- ஆராய்ந்து அறிவுபூர்வமான உபாயங்களை மேற்கொள்வார்.
- அறிவுபூர்வமான தீர்மானங்களை மேற்கொள்ள ஏனையோருக்கும் உதவுவார்.

**இணைப்பு 9.3.1.1**

☞ நீங்கள் பாடசாலை முடிந்து நண்பருடன் போகும்போது நண்பன் மயக்கமுறுகிறான். அக்கம் பக்கத்தில் வீடுகள் காணப்படவில்லை. நோயுற்ற பாட்டியைப் பார்க்கப் போவதற்கு உங்களின் வருகையை தாயார் எதிர்பார்த்திருப்பதால் விரைவாக வீடு செல்ல வேண்டி இருந்தது.

- இங்கு நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அல்லது சவால்கள் யாவை?
- இவ்விடத்தில் நீங்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் யாது?
- அத்தகைய ஒவ்வோர் (தீர்மானம்) செயற்பாட்டினதும் நன்மைகள், தீமைகள் என்பவற்றைக் குறிப்பிடுக.
- இதற்கேற்ப நீங்கள் மேற்கொள்ளும் சிறந்த தீர்மானம் எது? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

☞ நவாஸ் தரம் 9 இல் கல்வி கற்பவன். தம்பியும் தங்கையும் மிகச் சிறியவர்கள். இறுதித் தவணைப் பரீட்சைக்கு ஒரு வாரம் மட்டுமே இருந்தது. நவாஸின் தந்தை சடுதியாக நோயுற்று மருத்துவமனையில் இந்நேரத்தில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் தாயார் பகல் வேளையில் தந்தையுடன் தங்கியிருக்க வேண்டியிருந்தது. இரவில் தந்தையுடன் தங்கியிருக்க வேண்டிய நிலை நவாஸுக்கு ஏற்பட்டது.

- மேற்குறிப்பிட்ட சம்பவத்திற்கேற்ப நவாஸ் எதிர்நோக்க வேண்டியிருந்த பிரச்சினைகள் அல்லது தடைகள் அல்லது சவால்கள் யாவை?
- இந்த சந்தர்ப்பத்திலே நவாஸ் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் யாவை?
- இச்செயற்பாடுகளின் (தீர்மானம்) நன்மைகள், தீமைகள் என்பவற்றைக் குறிப்பிடுக.
- இதற்கேற்ப அவன் எடுக்கக்கூடிய சிறந்த செயற்பாட்டினைக் குறிப்பிட்டு அதனை உறுதிப்படுத்துவதற்கான காரணங்களை முன்வைக்குக.

☞ நீங்கள் பாடசாலை முடிந்து வீடு செல்லும்போது முன்னொருபோதும் கண்டிராத ஒருவர் வந்து... “எப்படி சுகம் தம்பி தங்காய்! அம்மா அப்பா வீட்டிலா? நான் உங்கள் வீட்டுக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு என்னை நினைவிருக்காது. உங்கள் அப்பாவின் பெயர்... இதோ! நான் இனிப்பு வாங்கினேன். இதோ, இனிப்பை எடுங்கள்.” இவ்வாறு கூறி உங்களிடம் நெருங்குகிறார்.

- இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் யாவை?
- இத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் யாவை?
- நீங்கள் எடுக்கும் ஒவ்வோர் தீர்மானத்தினதும் நன்மைகளையும் தீமைகளையும் குறிப்பிடுக.
- இவ்வேளையில் எடுக்கக்கூடிய சிறந்த தீர்மானம் யாது? அதனை உறுதிப்படுத்தும் காரணங்களைக் குறிப்பிடுக.

# 9.4 அனர்த்த முகாமைத்துவம்

**(பாடவேளைகள் 03)**

**அறிமுகம்**

உலகில் வாழும் அனைவருமே பல்வேறு விபத்துகளுக்கும் அனர்த்தங்களுக்கும் முகம்கொடுக்க நேரிடுகிறது. இவற்றை இயற்கையாக ஏற்படுவன, மனித செல்வாக்கினால் ஏற்படுவன என வகைப்படுத்தலாம். வீடுகள், பாடசாலைச் சூழல், வேலைத்தலங்கள் ஆகிய எந்தவொரு இடத்திலும் விபத்துகளும் அனர்த்தங்களும் ஏற்பட முடியும்.

பல்வேறு உணவு வகைகள், மருந்துகளைப் பயன்படுத்தும் வேளைகளிலும் ஆபத்துகள் ஏற்படலாம். இதுபோல தனிநபர்களுக்கிடையிலுள்ள துர்ப்பழக்கங்களினாலும் கவனமின்மையாலும் விபத்துகள் ஏற்படும் சந்தர்ப்பங்களையும் காணலாம்.

அனர்த்தங்கள், விபத்துக்கள் ஏற்படும்போது அறிவுபூர்வமாகச் செயற்படுவதன் மூலம் ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள எடுக்க வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் விபத்துகள், ஆபத்துகள் ஏற்படக்கூடிய இடங்கள், ஆபத்துகளுடன் நேரடித் தொடர்பான இடங்கள் என்பன பற்றியும் அறிதல் என்பனவே இந்த அலகினைக் கற்பதின் மூலம் எதிர்பார்க்கப்படுவனவாகும்.

**தேர்ச்சி** :- இடர்முகாமைத்துவத்தை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் :-** 9.4.1 விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுவார்.

9.4.2 விபத்துக்கள், அனர்த்தங்களின் போது புத்திசாலித்தனமாகச் செயற்படுவார்.

**பாட உள்ளடக்கம்**

நாம் அன்றாடம் எதிர்நோக்கும் முக்கிய ஆபத்துகள் மூன்று விதங்களில் ஏற்படலாம்.

1. இயற்கையானவை
2. மனித நடவடிக்கைகள்
3. ஏனையவை

☞ இயற்கையாக நிகழும் அனர்த்தங்கள்

- வெள்ளம்
- மின்னல்
- மண்சரிவு
- சூறாவளி
- சுனாமி
- புவிநடுக்கம்
- ரொனாடோ
- காட்டுத்தீ
- எரிமலை

☞ **மனிதச் செயற்பாடு**

- பாதுகாப்பற்ற செயற்பாடுகள்

  உதாரணம் :- வீதி சமிக்ஞை மற்றும் சட்டங்களைப் பின்பற்றாமை.
  பாதுகாப்பற்ற இடங்களில் கட்டிடங்கள் கட்டுதல்.
  (மலைச்சரிவுகள், கடற்கரை ஓரம், ஆற்றங்கரைகள்.)

- கவனமின்மை

  உதாரணம் :- கவனமின்றி மின்சக்தியைப் பயன்படுத்தல்.
  ஆயுதங்களைக் கவனமின்றிப் பயன்படுத்தல்.
  ஆபத்தான இடங்களில் நீராடுதல்.
  நிலக்கண்ணி வெடிப்பொருட்கள் புதைக்கப்பட்ட இடங்களில் வேலைசெய்தல்.

☞ முறையற்ற விதத்திலான கையாளல்

உதாரணம் :- முறையற்ற விதத்தில் காடுகளை அழித்தல்.
(மண்சரிவு, வெள்ளம், ஆற்றில் மண் அகழ்தல்,
மலையை அண்டிய பகுதிகளில் காடுகளை அழித்தல்.)

- சேற்றுநிலங்களை நிரப்புதல். (வெள்ளப் பெருக்கேற்படக் காரணமாதல்.)
- ஆபத்து நிலைமைகளைக் கருத்திற் கொள்ளாது வாகனங்களைப் பயன்படுத்துதல். (மிதிபலகைகளில் பயணித்தல், போக்குவரத்துக்கு உகந்ததல்லாத வாகனப் பயன்பாடு)
- தரப்படுத்தப்படாத பொருள்களைப் பயன்படுத்தல்.
- உணர்ச்சிவசப்பட்ட நடத்தை

  உதாரணம் :- தற்கொலைத் தாக்குதல், தீங்கு விளைவித்தல்,
  கொலை, குற்றச் செயல்கள்.

☞ **உணவு, மருந்து வகைகள் தொடர்பான விபத்துக்கள்**

- நஞ்சு கலந்த உணவு, பழுதடைந்த உணவு, காலாவதியான உணவுகளை உட்கொள்ளல்.
- வைத்திய ஆலோசனையில்லாமல் மருந்து பெறல், பிழையான மருந்து பாவனை.
- சரியாக நோயை இனங்காணாது மருந்து, அம்மைப்பால் கட்டுதலை அலட்சியமாக வழங்குதல்.

☞ **தீங்கான பழக்கங்களினால் ஏற்படும் விபத்துக்கள்**

- பல்வேறு தீய பழக்கங்களினாலும் அவற்றுக்கு அடிமையாகுவதினாலும் ஏற்படும் விபத்துக்களை இதில் உள்ளடக்கலாம். இவ்வாறு அடிமையாவதினாலும் பழக்கங்களினாலும் ஏற்படும் விபத்துக்கள் அதிகரிப்பதால் உயிரிழப்புக்கள் கூட ஏற்படலாம். இவ்வாறான பழக்கங்களினால் நீண்ட கால விபத்துக்களைக் கூட சந்திக்க நேரிடலாம். போதைப்பொருட்கள், மதுபானம், சிகரெட், பாலியல் துஷ்பிரயோகம், உள மற்றும் உடல் ரீதியாக வேறு விதமாக அடிமையாதல்.

☞ **ஏனையவை**

- விலங்குகளால் ஏற்படுவன.
- எரிதல், விழுதல் ஆகியன.
- மயக்கமடைதல்.

இயற்கை அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு (பௌதிக ரீதியில் ஏற்படுவன) கட்டடங்களைக் கட்டும்போது அவற்றை எதிர்நோக்கக்கூடிய விதத்தில் முன் ஆயத்தத்துடன் அமைப்பதினூடாக அத்தகைய ஆபத்துக்களை இழிவளவாக்கலாம். புவிநடுக்கத்தினால் ஏற்படும் அனர்த்தங்களை இழிவளவாக்குவதற்கு வீட்டு உபயோகப் பொருள்களை உரியவாறு இடப்படுத்துதல். (அலுமாரி, மின்விசிறி போன்றன.)

**விபத்துகள் ஏற்படும்போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள்**

- விபத்துகளின் இயல்பைச் சரியாக இனங்காணுதல்.
- ஏனையோரை வெளியேற்றுதலும் சரியான தொடர்பாடலும்.
- அமைதி பேணுதல்.
- விபத்தில் சிக்கியோரைக் காப்பாற்றுதலில் ஈடுபடுதல்.
- சரியான சிகிச்சை வழங்குவதில் ஈடுபடுதல்.
- விபத்துக்குள்ளானவரின் சொத்துகளைப் பாதுகாத்தல்.
- சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் தம்மையும் பாதுகாத்துக் கொள்ளுதல்.

## அனர்த்த முகாமைத்துவ வட்டம்




### A முன்னாயத்த நிலை

முன்னாயத்தம் மூலம் விபத்துகளை இழிவளவாக்குதல்

### B அனர்த்த நிலை

விபத்து நிலையில் மக்களை வெளியேற்றுதல்
பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை இட்டுச் செல்லுதல்
மருத்துவ சிகிச்சை வழங்குதல்

### C அனர்த்தத்தின் பின்னரான நிலை

மீண்டும் அனர்த்தத்திற்குட்படாத வகையில் உடனடியான அறிவுபூர்வமான தீர்வினைக் காணுதல்.

## அனர்த்த முகாமைத்துவம்சார் நிறுவனங்கள்

- அனர்த்த முகாமைத்துவ நிலையம் DMC
  பண்டாரநாயக்க ஞாபகார்ந்த மண்டபம், கொழும்பு – 07.
  தொ.பே 0112670071/2670051/2670077 w.w.w.dmc.gov.lk
- தேசிய கட்டிட ஆய்வு நிறுவகம் NBRO
  99/1 ஜாவத்தை வீதி, கொழும்பு – 05.
  தொ.பே 0112588946/2503431
  w.w.w.nbro@.gov.lk/nbro@sltnet.lk
- வளிமண்டலவியல் திணைக்களம்
  383, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு – 07.
  தொ.பே 0112665088 w.w.w.meteo.slt.lk
- தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் NDMC
  146, காலி வீதி, கொழும்பு – 07.
  தொ.பே 0112395105 w.w.w.ndmc.gov.lk

ஏனையவை
- பிரதேச தீயணைப்பு நிலையங்கள்
- மருத்துவ மனைகள்
- காவல் நிலையங்கள் (Police)
- சமூக சேவை நிறுவகங்கள் போன்றன

**அனர்த்த நிலைமைகளில் உரியவாறு தந்திரோபாயத்துடனும் சிந்தனைத் தெளிவுடனும் செயற்படுதல்**

அனர்த்தம் இடம்பெறமுன்னர், அனர்த்தம் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், அனர்த்தத்தின் பின்னர் என்ற மூன்று சந்தர்ப்பங்களிலும் ஒருவர் அறிவுபூர்வமாகச் செயற்படுதல் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தனது வாழ்க்கையையும் ஏனையோரின் வாழ்க்கையையும் காப்பாற்றும் தேவையினாலாகும்.

- ஏனையோரின் வாழ்க்கையை அனர்த்தத்திலிருந்து மீட்டெடுக்கையில் மிகுந்த விளக்கத்துடன் தனது வாழ்க்கையை இழந்துவிடாத விதத்தில் செயற்படுதல்.

- தன்னைப் பாதுகாத்தலுடன் பிறரையும் காப்பாற்றக்கூடிய ஆத்ம சக்தியும் உடற்பலமும் தன்னிடம் உள்ளதா என்பதை அறிந்துகொண்டதன் பின்னர் அவற்றில் ஈடுபடுதல்.
  உதாரணம் :- நீரில் விழுந்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு நீந்தத் தெரியாதவர் நீரில் விழுந்து காப்பாற்ற முனைந்தால் இருவரும் ஆபத்துக்குள்ளாக நேரிடும்.

- அழுதல், சத்தமிடுதல் அல்லது அமைதியாக இருத்தல் போன்ற காரணிகளால் அனர்த்தம் நிகழுதல் அல்லது நிகழும் அனர்த்தம் மோசமடையும் நிலை ஏற்படுதல்.

- அனர்த்தத்தின்போது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்கு முன்னரான முதலுதவிகள் வழங்குதல் பற்றி அறிந்திருத்தல்.

- அனர்த்த வேளையில் அறிவிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள், தனியார் பற்றி அறிந்திருத்தல்.

## 9.4.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- இடர்முகாமைத்துவத்தை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுவார்.

**செயற்பாடு** :- சுற்றுப்புற அனர்த்தங்களை இனங்காண்போம்

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.4.1.1 வீட்டில், பாடசாலையில், சூழலில், வேலைத்தளங்களில் ஏற்படும் அனர்த்தங்களைக் காட்டும் சித்திரங்கள், அறிக்கைகள், படங்கள்
- இணைப்பு 9.4.1.2 குழுக்களுக்கிடையிலான செயற்பாட்டுப்பத்திரம்
- டிமை கடதாசி
- பாடநூல், பேனை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.4.1.1**

- இணைப்பு 9.4.1.1 இலுள்ள சித்திரங்களை, படங்களை மாணவர்களுக்குக் காட்டி அவை பற்றிய கருத்துகளை விசாரித்தறிக.
- அவற்றில் காட்டப்படும் அனர்த்தங்கள் எத்தகைய இடங்களில் நிகழக்கூடுமென மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்துக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடுக.

☞ எந்த வேளையிலும் நாம் விபத்துகள், அனர்த்தங்களுக்கு உட்படலாம்.
☞ எந்த இடத்திலும் விபத்துகள், அனர்த்தங்கள் என்பன ஏற்படலாம்.
☞ பயங்கரவாத செயற்பாடுகள் இடம்பெற்ற இடங்களில் நிலக்கண்ணி வெடி ஆபத்துக்களுக்கு உள்ளாக நேரிடலாம்.
☞ ஆபத்துகள் இயற்கையாகவும் மனித நடவடிக்கைகளாலும் ஏற்படும்.
☞ இடர்கள், ஆபத்துக்கள் என்பவற்றில் நாம் கவனமாக இருப்பதால் பெருமளவில் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

(10 நிமிடங்கள்)

**படி 9.4.1.2**

- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்குங்கள்.
- எல்லா குழுக்களுக்கும் இணைப்பு 9.4.1.2 செயற்பாட்டுப்பத்திரம், டிமை கடதாசி, பிளட்டினம் பேனை ஒவ்வொன்று வீதம் வழங்குங்கள்.
- மாணவர் செயற்பாட்டில் ஈடுபடும்போது அவர்களுக்கு வழிகாட்டிச் செயற்பாட்டைப் பூரணமாக்க உதவி வழங்குங்கள்.

(15 நிமிடங்கள்)

**படி 9.4.1.3**

- குழுக்களின் ஆய்வுச் செயற்பாடுகளை வகுப்பறையில் முன்வைக்க மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்த தகவல்கள் பற்றி கருத்துகள் தெரிவிக்க ஏனைய குழுக்களுக்கு இடமளிக்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் தொகுப்புரையில் ஈடுபடவும்.

☞ எந்தவொரு நேரத்திரும் எந்தவொரு இடத்திலும் இடர்கள் ஏற்படலாம்.
☞ வீடு, பாடசாலை, சுற்றுப்புறம், விளையாட்டு மைதானங்கள், வேலைத்தலங்கள், பயணங்களின்போது இடர்கள் ஏற்படலாம்.
☞ இயற்கையினாலும் மனித நடவடிக்களாலும் இடர்கள் விபத்துக்ள் ஏற்படலாம்.
☞ நாம் எதிர்நோக்க நேரிடும் இடர்கள், விபத்துகள் என்பன பற்றிய விழிப்புணர்வுடன் அன்றாட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
☞ இடர்கள், விபத்துக்கள் பற்றி விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் அவற்றை இழிவளவாக்க முடியும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- இடர்கள், ஆபத்துகள் என்பன நிகழக்கூடிய இடங்களைப் பெயரிடுவார்.
- இயற்கையாகவும் மனிதச் செயற்பாடுகளினாலும் ஏற்படும் இடர்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- இடர்கள், ஆபத்துகள் என்பன பற்றி விழிப்புணர்வு இருப்பின் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- தனது சுற்றுச் சூழலைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டுமென்பதை வெளிப்படுத்துவார்.
- கூட்டாகச் செயற்படுவதனூடாக குழு உணர்வை வளர்த்துக் கொள்வார்.

இணைப்பு 9.4.1.1

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 01**

வீட்டில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பற்றிய குறுநாடகம் ஒன்றை முன்வைத்தலே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 02**

பாடசாலையில் விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணிகள் பற்றிய நிகழ்வொன்றைப் பொருத்தமான நாடகம் மூலம் முன்வைப்பதே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 03**

இயற்கையாக ஏற்படும் விபத்துகள், இடர்கள் என்பனவற்றை சித்திரம் மூலம் முன்வைப்பதே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 04**

மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள், இடர்கள் பற்றி பகுப்பாய்வு ஒன்றை முன்வைப்பதே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 05**

நாம் எதிர்நோக்கும் விபத்துக்கள், இடர்கள் என்பவற்றை இழிவளவினதாக்குவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் பற்றிய கட்டுரை ஒன்றை வரைந்து முன்வைப்பதே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

## 9.4.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- இடர்முகாமைத்துவத்தை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- விபத்துக்கள், அனர்த்தங்களின்போது புத்திசாலித்தனமாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- "அனர்த்த ஆபத்தினை முகாமை செய்வோம்."

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.4.2.1
- இணைப்பு 9.4.2.2 செயற்பாட்டுப்பத்திரம்
- டிமை தாள்
- பல வர்ண பெல்ட் பேனைகள்
- வார்னிஸ் கடதாசி - 4 (4 வர்ணங்களில்)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.4.2.1**

- இணைப்பு 9.4.2.1 இலுள்ள உருக்களில் "அ" படங்களை மாணவர்களுக்கு நன்கு அவதானிப்பதற்கு வழங்குக. அதிலுள்ள சிறப்பியல்புகளைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குக. கரும்பலகையில் குறிப்புக்களை எழுதுக.
- "ஆ" படத்தினை மாணவர் நன்கு அவதானிக்க இடமளிக்குக. அதில் காணப்படும் சிறப்புகள் பற்றி ஆராய்ந்து கரும்பலகையில் குறிப்புக்கள் எழுதுக.
- "இ" படத்தினை மாணவர் நன்கு அவதானிக்கச் செய்க. அதிலுள்ள சிறப்புகளை கரும்பலகையில் குறிப்புக்களாக எழுதுக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துக.

> ☞ எமது சுற்றுச்சூழலில் அபத்துக்கள் காணப்படுகின்றன.
> ☞ அத்தகைய ஆபத்துக்களைத் தெளிவாக இனங்காணுதல்.
> ☞ அதற்கேற்ப அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்களை இனங்காண இயலுமாதல்.
> ☞ அத்தகைய பிரதேசங்கள் அனர்த்தங்களுக்கு உள்ளாதல்.
> ☞ அனர்த்தங்களை நிர்வகிப்பதன் மூலம் அவற்றைத் தவிர்த்துக்கொள்ள முடியுமாதல்.

(10 நிமிடங்கள்)

**படி 9.4.2.2**

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- தரப்பட்டுள்ள 4 செயற்பாட்டுப்பத்திரங்களை ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்குப் பகிர்ந்தளியுங்கள்.
- செயற்பாட்டுப்பத்திரத்திற்கு ஏற்ப செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- குழு முன்வைப்பிற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைத்தவற்றை மேலும் விருத்தியாக்குவதற்கு ஏனைய குழுக்களுக்கு இடமளியுங்கள்.

(50 நிமிடங்கள்)

படி 9.4.2.3

- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் தொகுப்புரையில் ஈடுபடுக.

☞ அனர்த்தங்கள், உள்ளாகும் பிரதேசங்கள் மற்றும் அனர்த்தங்கள் என்பன அனர்த்த முகாமைத்துவத்தின்போது கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டிய எண்ணக்கருவாகும்.
☞ அனர்த்தத்தின்போது அறிவுபூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
☞ அதற்கென பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
☞ அனர்த்த முகாமைத்துவ வட்டத்துக்கேற்ப செயற்படுதல் மூலம் அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் முகாமைத்துவமும் செய்யலாம்.
☞ எல்லா பிரஜைகளும் ஆபத்துக்கள், அனர்த்தங்கள் என்பன பற்றிக் கவனமாக இருத்தல் வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- அனர்த்த முகாமைத்துவ எண்ணக்கருவை விளக்குவார்.
- சுற்றுப்புறச் சூழலில் அனர்த்தங்கள் ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- விபத்துகளைத் தவிர்ப்பதற்கு அறிவுபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தினை முன்வைப்பார்.
- எல்லாப் பிரஜைகளும் விபத்துகள், அனர்த்தங்கள் என்பவற்றைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்னும் கருத்தை வெளியிடுவார்.
- அனர்த்த முகாமைத்துவத்துக்காக சந்தர்ப்பத்துக்கேற்ற விதத்தில் விடயங்களை முன்வைக்கத் தயாராக இருப்பார்.

**இணைப்பு 9.4.2.1**










அனர்த்தத்துக்கு உள்ளாகும் பிரதேசங்கள்

பாட அறிமுகத்துக்கான உருக்கள்

மேலுள்ள உருக்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தக்கூடிய விதத்தில் பெரிதாக்கிக் கொள்க.

## செயற்பாட்டுப்பத்திரம்

### குழு 01

அனர்த்த முகாமைத்துவ எண்ணக்கருவை விளக்கும் செயற்பாடு உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும். அதற்கேற்றவாறான ஆக்கமொன்றை முன்வைக்குக.

### குழு 02

அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

இச்செயற்பாட்டை விளக்கமாக எழுதி முன்வைக்குக.

### குழு 03

இயற்கை அனர்த்தங்களை இழிவளவாக்க செயற்பட வேண்டிய விதம் பற்றி விளக்கும் செயற்பாடு உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

நீங்கள் விரும்பிய விதத்தில் ஆக்கத்தினை முன்வைக்குக.

### குழு 04

அனர்த்த முகாமைத்துவ வட்டம் பற்றி விளக்கம் அளித்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

பொருத்தமான முறையியலைப் பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ வட்டத்தை விளக்குக.

# 9.5 முரண்பாட்டுத் தீர்வு

**(பாடவேளைகள் 06)**

## அறிமுகம்

நபர்களிடையே காணப்படும் வேறுபாடுகளினால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நபர்கள் சிந்திக்கும், செயற்படும் விதங்களும் வேறுபடும். இவ்வேறுபாடுகளுள்ள, பலவகையான வித்தியாசங்கள் வெளிப்படல், கருத்தொருமித்தல் இல்லாமை போன்ற விடயங்களினால் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பழங்கால மனிதர்களும் தமது வாழ்வில் வெவ்வேறு கட்டங்களில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இன்றும் அன்று போலவே முரண்பாடுகள் காணப்படுகின்றன. எதிர்காலத்திலும் அவ்வாறே இருக்கும் என நம்பலாம். முரண்பாடுகளைத் தீர்த்தல் அறிவுசார் செயற்பாடாகும். மேலும் முரண்பாட்டை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக்கொள்ளல், சமூகம் முன்னோக்கி நகர்வதற்கும் காரணமாகும். மனிதர்கள் குழுவாக, சமுதாயமாக மாறும்போது கட்டாயமாக முரண்பாடுகளைத் தீர்க்கும் திறனைப் பெறவேண்டும்.

முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளும்போது அதன் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்கண்டு பகுத்தாய்ந்து, தீர்வுகாண வேண்டும். அதற்கு நெகிழ்ச்சியும் நடுநிலையும் மூன்றாம் தரப்பாரின் தேவையும் நிலவுகின்றது. மேற்படி இணக்கப்பாட்டாளர் எப்போதும் இரு பகுதியினருக்கும் வெற்றியைப் பெற்றுத் தர வேண்டும். முரண்பாட்டுத் தீர்வின்போது இடம்பெறக்கூடிய நிலைமைகள் நான்காகும்.

| **A** தரப்பார் | | **B** தரப்பார் |
|---|---|---|
| வெற்றி | | தோல்வி |
| தோல்வி | ⟷ | வெற்றி |
| தோல்வி | ⟷ | தோல்வி |
| வெற்றி | ⟷ | வெற்றி |

எப்போதும் இருதரத்தாருக்கும் வெற்றி கிட்டக்கூடிய தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும்.

முரண்பாட்டைத் தீர்க்கும் திறன்கள் பற்றி மாணவர் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவது இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி புரிந்துணர்வுடன்கூடிய செவிமடுத்தல், முரண்பாட்டைப் பகுப்பாய்வு செய்தல், மாற்றுத் தீர்வுகளை இனங்காணல் போன்ற உறுதிப்பாடான துலங்கல்களைக் காட்டுவதன் முக்கியத்துவம் போன்றவற்றை மாணவருக்கு எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.

பழங்காலத்திலிருந்து பின்பற்றப்படும் முரண்பாடுளை இணக்கமாக்கும் முறைகளின் மூலம் தீர்வுகளைப் பெறவும் இங்கு அக்கறை காட்டப்பட வேண்டும். இங்கு இணக்கத்தை ஏற்படுத்துபவராக செயற்பட வேண்டிய முறையையும் இணக்கப்படுத்துவதன் மூலம் இரு தரப்பாரும் ஏற்கக்கூடிய தீர்வைப் பெறும் விதத்தையும் பற்றிய விளக்கத்தைப் பெறக்கூடியவாறு செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இதன்படி முரண்பாடுகளைத் தீர்க்கும்போது மூன்றாம் தரப்பாரின் உதவியைப் பெற்றுக்கொண்டு இரு தரப்பாரும் தத்தமது சக்தியின் மூலம் வெற்றி – வெற்றி தீர்வை அடையக்கூடிய விதத்தைப் பற்றி மாணவருக்கு விளக்கமளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** **:** முரண்பாடுகளைச் சமாதானமான வகையில் தீர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் :** 9.5.1 முரண்பாடுகளின் தன்மையை விளக்குவார்.
9.5.2 தடைகளை வெற்றி கொண்டு முரண்பாடுகளைத் தீர்க்க முனைவார்.

**பாட உள்ளடக்கம்**

**முரண்பாடுகளைத் தீர்த்தல்**

கருத்துக்களின் பல்வகைமை காரணமாக அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகளினால் இரு நபர்கள் அல்லது இரு தரப்பார் மத்தியில் ஏற்படும் கருத்து வேறுபாட்டு நிலை காரணமாக முரண்பாடுகள் தோன்றுகின்றன.

**முரண்பாட்டின் தன்மையை இனங்காணல்**

கருத்துக்கள், மனப்பாங்குகள் ஆகியன காரணமாக ஏற்படும் முரண்பாடுகளின் தன்மையையும் சமூக ஏற்றத்தாழ்வுகளினால் ஏற்படக்கூடிய முரண்பாடுகளின் தன்மையையும் இனங்காணல்.

**முரண்பாடு என்பதை விவரித்தல்**

காரணங்கள் - தனி நபரின் கருத்துக்களிடையே வேறுபாடுகள் அல்லது சமூக ஏற்றத்தாழ்வுகளின் பெறுபேறாக பரந்தளவில் முரண்பாடுகள் ஏற்பட ஏதுவாகும் காரணங்களாகப் பகுப்பாய்வு செய்ய முடியும்.

பண்புகள் - உள முரண்பாடுகள் காரணமாக ஏற்படும் நெருக்கிடை போலவே திடீர் கோபம், எரிச்சல், கடுஞ் சொற்பிரயோகம், ஏனையோர் மீது உடற்பலத்தைப் பிரயோகித்தல் போன்றன.

**முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான தடைகள்**

**கடும் போக்கு** - ஒரு தரப்பாரின் கடுமையான போக்கின் காரணமாக மற்றைய தரப்பாரை அலட்சியம் செய்தல்.

**ஒரே தீர்வில் தங்கியிருத்தல்** - ஒரே தீர்வின் மீது தங்கியிருந்து மற்றைய தரப்பாரின் தேவைகளை அலட்சியம் செய்தல்.

மற்றைய தரப்பாரை தோல்வியடையச் செய்து தாம் வெற்றி பெற முயலுதல்.

மற்றைய தரப்பாரின் கருத்துக்களையும் தேவைகளையும் கவனத்திலடுக்காது தமது தரப்பினரை மாத்திரம் வெற்றியடையச் செய்ய வழிப்படுத்துவதன் மூலம் மோதல் நிலை உருவாக வழிவகுத்தல்.

**முரண்பாடு தீர்ப்பதன் பொதுவான இயல்புகளை இனங்காணல்**

தொடர்பாடல் - பயனுள்ள தொடர்பாடலின் மூலம் இரண்டு பகுதியினரும் தமது கருத்துக்களையும் கொள்கைகளையும் தெளிவாக முன்வைத்தல்.

மாற்றுத் தீர்வுகளைப் பெற முனைதல் - ஒரே தீர்வில் தங்கியிருப்பின் கூடுமானவரை மாற்றுத் தீர்வைக் காண முயலுதல்.

ஒத்தாசை – முரண்பாடு தொடர்பான இரு தரப்பாரினதும் கருத்துக்களிலும் தேவைகளிலும் உள்ள நியாயத்தினையும் பொருத்தப்பாட்டையும் இனங்கண்டு மாற்று தீர்வுகளைப் பெறுவதற்காக ஒருவருக்கொருவர் ஒத்தாசை வழங்கல்.

இரண்டு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை அடைதல். வெற்றி – வெற்றி தீர்வை நோக்கி இருதரத்தாரும் சென்றடைய முடியுமாக இருத்தல், முரண்பாடு தீர்த்தலின் வெற்றியாக அமையுமாகையால் இருதரப்பாரும் திருப்தியுறல்.

**முரண்பாடு தீர்க்கும் திறன்கள்**

புரிந்துணர்வுடன்கூடிய செவிமடுத்தல், முரண்பாட்டை பகுப்பாய்வு செய்தல், மாற்று தீர்வுகளை இனங்காணல், உறுதிப்பாடான துலங்கலின் மூலம் இருதரத்தாரும் வெற்றி – வெற்றி தீர்வை அண்மிக்கச் செய்யமுடியுமாக இருத்தல்.

**இணக்கப்பாட்டை அறிமுகஞ்செய்தல்.**
முரண்பாடு தீர்விற்காக மூன்றாம் தரப்பாரின் உதவியைப் பெறல்.

இங்கு கட்டளையிடல், வற்புறுத்தல், தண்டனை அளித்தல் ஆகியன இடம்பெறமாட்டாது. முரண்பாட்டுடன் தொடர்புடைய இரண்டு தரப்பாரையும் தமது முரண்பாட்டைத் தீர்த்துக்கொள்ள சரியான தீர்வைத் தம்மிடமிருந்தே பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கல். இணக்கப்பாட்டாளர் இருதரப்பாரும் ஏற்றுக்கொள்ளும் பக்கச்சார்பற்றவராக இருத்தல் வேண்டும்.

முரண்பாட்டை நுணுகி ஆராய்தலும் இங்கு நடைபெறும். இணக்கப்பாட்டாளர் இரண்டு தரப்பாரையும் அணுகி தனித்தனியாக உரையாடுல் வேண்டும்.

மாற்றுத் தீர்வை முன்வைக்க இரு தரப்பாரையும் தூண்டுதல், இருதரப்பாரும் ஏற்றக்கொள்ளும் தீர்வை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கல் என்பன இடம்பெறும்.

சமாதானமான முறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இதன் மூலம் வழிகாட்டப்படுகின்றது.

## 9.5.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- முரண்பாடுகளைச் சமாதானமான வகையில் தீர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- முரண்பாடுகளின் தன்மையை விளக்குவார்.

**செயற்பாடு** :- வெற்றி - வெற்றி தீர்வு

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.5.1.1 மோதலைக் காட்டும் மாதிரியுரு
- இணைப்பு 9.5.1.2 குழுச் செயற்பாடு
- டிமை தாள் - பிரிஸ்டல் போட்
- நிறப் பேனா

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.5.1.1**

- முரண்பாடு என்ற சொல்லை கரும்பலகையில் எழுதி அது தொடர்பான சிந்தனைக் கிளர்வுடன் கூடிய கலந்துரையாடலை நடாத்தவும்.
- மாணவரின் கருத்துக்களின் துணையுடன் பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

முரண்பாடு என்பது

- நபரினுள்
- இரு நபர்களிடையே
  அல்லது
- கூடிய எண்ணிக்கையானோர் மத்தியில்
  அல்லது
- இரண்டு குழுக்களிடையே
- பல குழுக்களிடையே

குறித்த சந்தர்ப்பம் / குறித்த நிகழ்வு தொடர்பாக கருத்தொற்றுமையின்மையால் ஏற்படும் நடத்தை மாற்றமாகும்.

☞ இவ்வாறான முரண்பாட்டுச் சந்தர்ப்பங்கள்/ பேதங்கள் தேவைகளை நிறைவேற்ற முற்படும்போதும் / தமக்கு ஏற்படக்கூடிய பயம் / சந்தேகம் / ஐயம் / அநீதி ஆகியவற்றை இல்லாமற் செய்ய முற்படும்போதும் ஏற்படுகின்றன.

☞ ஆகவே எல்லா முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களின்போதும் தேவைகள் / பயம் என்பவற்றைக் காணலாம்.

- ☞ முரண்பாட்டில் ஈடுபடுபவர்கள் “தரப்பார்” என அழைக்கப்படுவர்.
- ☞ முரண்பாட்டைத் தீர்ப்பதாயின் தரப்பாரின் தேவையையும் அச்சங்களையும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.
- ☞ முரண்பாட்டில் பங்குபெறும் தரப்பாரின் தேவையையும் பயத்தையும் நீங்கள் மாணவருக்கு வழிகாட்டும் வகையில் இணைப்பு 9.5.1.1 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி கரும்பலகையில் கட்டியெழுப்புங்கள்.

(10 நிமிடங்கள்)

**படி 9.5.1.2**

- வகுப்பிலுள்ள மாணவரின் எண்ணிக்கைக்கமைய சிறு குழுக்களாக்கவும்.
- 9.5.1.2 இணைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தவும்.
- குழுக்களுக்குத் தரப்பட்ட முரண்பாட்டுச் சந்தர்ப்பத்தை குழுக் கலந்துரையாடல் மூலம் விளங்கிக்கொள்ள குழுக்களுக்கு அறிவுரை வழங்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு குழுவில் கலந்துரையாடுங்கள்.

    i. முரண்பாடு ஏற்பட்டிருப்பது எதனால்?
    ii. அம்முரண்பாட்டைப் பொருத்தமான பெயரினால் அறிமுகஞ் செய்க.
    iii. முரண்பாட்டில் பங்கேற்கும் தரப்பினர் யாவர்?
    iv. தரப்பினரின் தேவைகள் யாவை?
    v. தரப்பினரின் பயம் யாது?
    vi. பொருத்தமான மாதிரியுருவின் மூலம் தரப்பினரின் தேவைகளையும் வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 9.5.1.3**

- ஒவ்வொரு குழுவினதும் விடைகளைச் சமர்ப்பிக்கச் செய்யவும்.
- ஒவ்வொரு குழுவும் தம் விடைஷைகளைச் சமர்ப்பித்த பின் அதுபற்றி ஏனைய குழுக்களின் கருத்துக்களுடன் பின்னூட்டலுக்கு வாய்ப்பளிக்கவும்.
- எல்லாக் குழுக்களும் விடைகளைச் சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட பின்னூட்டலைப் பெற்ற பின்னர் பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு முழுச் செயற்பாடும் குறித்த மீளாய்வை நடாத்தவும்.

- ☞ மோதலை படத்தின் மூலம் காட்டுவதை / முரண்பாட்டுப்படம் என அழைக்கப்படும்.
- ☞ இவ்வாறுமுரண்பாட்டைப் பகுப்பாய்ந்து தரப்பினரின் தேவைகளை / அச்சங்களை இனங்காணுதல் முரண்பாட்டில் பங்கேற்பவரினால் செய்யமுடியும்.
- ☞ எவ்வாறாயினும் முரண்பாட்டை அதில் பங்குபற்றும் தரத்தினர் அல்லாத வேறு நபர்கள் பகுப்பாய்தல் பயன்மிக்கதும் கருத்துள்ளதுமாகும்.
- ☞ முரண்பாட்டைப் பகுப்பாய்தற்காக பல்வேறு விதமான மாதிரியுருக்கள் பயன்படுத்தப்படும்.
- ☞ எல்லாத் தரத்தினரதும் தேவைகளை முடியுமானவரை நிறைவேற்றவும் பயப்பீதிகளை முடியுமானவரை குறைக்கவும் இவ்வாறான பகுப்பாய்வுகள் மூலம் முடியும்.
- ☞ இச்செயற்பாடு வெற்றி – வெற்றித் தீர்வை நோக்கிச் செல்லப் பயன்படும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- முரண்பாடு என்றால் என்ன என்று கருத்துரைப்பார்.
- முரண்பாட்டுப் பகுப்பாய்வு வெற்றி - வெற்றித் தீர்வின் பால் ஈடுபடக் காரணமாகும் என ஏற்றுக்கொள்வார்.
- முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களை பிழையின்றி பகுப்பாய்வார்.
- குழுச் செயற்பாட்டில் ஊக்கத்துடன் ஈடுபடுவார்.
- குழுச் செயற்பாட்டை ஆக்கபூர்வமாகச் சமர்ப்பிப்பார்.

**பின்தொடர் வேலைகள்**

நீங்கள் முகங்கொடுத்த முரண்பாட்டுச் சந்தர்ப்பமொன்றை ஞாபகப்படுத்துங்கள். இந்த முரண்பாடு ஏற்பட உங்கள் எத்தேவைகள், அச்சங்கள் காரணமாயின எனப் பகுப்பாய்க. (முரண்பாட்டு படவாக்கத்தில் ஈடுபடுக.)

**இணைப்பு 9.5.1.1**


முதலாம் தரப்பினர் தேவைகள்
இரண்டாம் தரப்பினர் தேவைகள்
முரண்பாட்டின் தன்மை
அச்சங்கள்
அச்சங்கள்

**இணைப்பு 9.5.1.2**

**குழு 01**

குமார் தனது நண்பன் கோபாலின் விஞ்ஞான பாடத்திற்குத் தரப்பட்ட ஒப்படையின் விடையைப் பார்த்து எழுதுவதற்காக கேட்டான். கோபால் அதனைத் தரமுடியாது எனக் கூறினான். குமாருக்கும் கோபாலுக்கும் இடையே வாக்குவாதம் சூடாக நடைபெற்றது.

**குழு 02**

தவணை முடிவில் நடைபெற்ற பரீட்சைக்காக படித்துக் கொண்டிருந்த நண்பர்களை நோக்கி வந்த விக்டரும் நளினியும் படமொன்றைப் பார்க்க வருமாறு அழைக்கின்றனர். நண்பர்கள் அதனை நிராகரிக்கின்றனர். நளினியும் விக்டரும் மீண்டும் மீண்டும் படம் பார்க்க வருமாறு கேட்டு வற்புறுத்துகின்றனர்.

**குழு 03**

சீகிரிய பார்க்கச் செல்லத் திட்டமிட்ட ஒருநாள் கல்விச் சுற்றுலாவின்போது பங்கேற்க முடியாதென கமலா வகுப்பாசிரியரிடம் கூறுகின்றாள். சுற்றுலாவில் கட்டாயமாகப் பங்குபற்ற வேண்டுமென வகுப்பாசிரியர் கூறுகின்றார். கட்டாயமாக பங்குபற்ற வேண்டுமென ஆசிரியை கூறியபோதும் தன்னால் பங்கேற்க முடியாதென மறுப்பு கூறினாள்.

**குழு 04**

கணித பிரச்சினமொன்றைத் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ள மூத்த சகோதரி வானொலியின் சத்தத்தைக் குறைக்குமாறு தம்பியிடம் கூறுகிறாள். தம்பி சாலையிலிருந்தபடி வானொலியில் ஒலிபரப்பாகும் சங்கீத நிகழ்ச்சியைக் கேட்டு கொண்டிருக்கின்றான். நிகழ்ச்சியின் சத்தத்தைக் குறைத்து தன்னால் கேட்கமுடியாதென தம்பி கூறுகின்றான்.

**9.5.1 இணைப்பு – 1**

ஒரு மாணவர் மேசை, கதிரைக்காக இரு மாணவர்கள் சண்டை பிடிக்கும் காட்சி. (முன் வரிசையில்)
பின்னணியில் ஆசிரியர் மேசை கரும்பலகை, ஏனைய மாணவரின் கதிரை மேசை உள்ளது.

## 9.5.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- முரண்பாடுகளைச் சமாதான நேயமான வகையில் தீர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- தடைகளை வெற்றி கொண்டு முரண்பாடுகளைத் தீர்க்க முனைவார்.

**செயற்பாடு** :- ஒற்றுமையாய் வாழ்வோம் - முரண்பாட்டைப் புத்தியுடன் தீர்ப்போம்

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.5.1.2 பாத்திரமேற்று நடிக்கும் நாடகத்திற்கு ஏற்ற வழிகாட்டல்கள்.
- இணைப்பு 9.5.2.2 - குழு ஒப்படை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.5.2.1**

- இணைப்பு 9.5.2.1 இல் தரப்பட்டுள்ள பாத்திரமேற்று நடிப்பதை வகுப்பில் நடித்துக் காட்டுங்கள்.
- முதலாம், இரண்டாம் தரப்பார் என்றவாறு ஒவ்வொரு பாத்திரத்தின் மூலமும் கூறப்படுகின்ற சந்தர்ப்பங்களையும் நடத்தையின் தன்மையையும் பற்றி வினவியவாறு மாணவர்களின் கருத்தைக் கேளுங்கள்.
- மாணவர்களின் துலங்கலை விமர்சன ரீதியில் அணுகி சுருக்கமானதொரு உரையாடலை நடத்துங்கள்.

> ☞ முதலாவது பாத்திரம் மூர்க்கத்தனமான நடத்தையையும், தாழ்மையான நடத்தையையும் காட்டுகின்றது.
> ☞ இரண்டாவது பாத்திரம் மூலம் ஒருவருக்கொருவர் மதிப்பளித்து உரையாடும் தன்மை வெளிக்காட்டப்படுகின்றது.
> ☞ அவ்வாறான நடத்த சரியான நடத்தை அல்லது உறுதிப்பாடான நடத்தை எனப்படும்.
> ☞ மூர்க்கத்தனமான நடத்தையும் தாழ்மையான நடத்தையும் முரண்பாடுகளுக்குக் காரணமாகும். சரியான நடத்தை அல்லது நிலையான நடத்தை மூலம் முரண்பாடுகள் தவிர்க்கப்பட்டு, ஏற்பட்ட முரண்பாட்டை சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள ஏதுவாகும்.
> ☞ சமாதானத்தை விரும்புபவராவதற்கும் சுமுகமாகச் செயற்படும் சமூகமொன்றை உருவாக்கவும் சமாதானமாக முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளவும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளவும் உறுதிப்பாடான நடத்தையை அல்லது சரியான நடத்தையைப் பழகிக்கொள்ள வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.5.2.2**
- மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களைக் குழுக்களாக உருவாக்குங்கள்.
- இணைப்பு 9.5.2.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு குழுக்களை ஈடுபடுத்துங்கள்.
- ஒருவருக்கு கூறுவதை எவ்வாறு செவிமடுக்க வேண்டும், ஒருவருடன் எவ்வாறு பேசவேண்டும் என்பவற்றுக்கு வழிகாட்டும் அறிவுரைத் தொகுதியொன்றைத் தயாரிப்பதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

படி 9.5.2.3

- குழுச் சமர்ப்பித்தலுக்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பிக்கும் விடயம் பற்றி கருத்து கூற ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கவும். (நேரத்தை தக்கவாறு பயன்படுத்துக.)
- குழுவின் விடைபற்றி ஏனைய குழுக்களின் கருத்தைக் கேட்டவாறு பின்னூட்டல் வழங்க வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மீளாய்வைச் செய்யவும்.

- மூர்க்கமான நடத்தையைக் கொண்டிராதிருத்தலும் தாழ்வாக இல்லாதிருத்தலும் சரியான/ உறுதிப்பாடான நடத்தையைப் பழகுவதும் அவசியமாகும்.
- நன்நடத்தையை, சரியான நடத்தை / உறுதிப்பாடான நடத்தை என்பர்.
- உறுதியான பேச்சு, அவதானத்துடன்கூடிய செவிமடுத்தல் / சரியான பேச்சு, சரியான செவிமடுத்தல் என மேற்படி நன்நடத்தை அழைக்கப்படும்.
- சரியான தொடர்பாடல் எனவும் இந்நிலை பெயர்பெறும்.
- முரண்பாடுகளைத் தவிர்க்கவும், ஏற்பட்ட முரண்பாடுகளைச் சமாதானமாகத் தீர்க்கவும் உறுதிப்பாடான அல்லது உரியவாறான நடத்தை காரணமாகும்.
- அவ்வாறான தீர்வு வெற்றி - வெற்றித் தீர்வாக அழைக்கப்படும்.
- சரியான பேச்சுக்கு சரியான கேட்டலுக்கு பழகியிருப்பின் அதில் ஈடுபடுவதாயின் முரண்பாட்டைக் குறைத்து அவற்றைத் தீர்க்க முடியும். ஏற்பட்ட மோதலை சுமூகமாகத் தீர்க்க முடியும்.
- இதுபற்றி அறிந்த மாணவர்கள் சமாதானத்தை விரும்புபவர்களாவதற்கு உறுதிப்பாடான நடத்தைப் பண்புகளைப் பெறவேண்டும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தாழ்மையான, மூர்க்கத்தனமான, உறுதிப்பாடான நடத்தைக் கோலங்களின் பண்புகளை விவரிப்பார்.
- உறுதிப்பாடான நடத்தைப் பண்பு சமாதானம் விரும்பும் நபரின் குணப்பண்பென ஏற்றுக்கொள்வார்.
- பல்வகை நடத்தைப் பண்புகளைத் தனித்தனியாக எழுதிக்காட்டுவார். (வெளிப்படுத்துவார்.)
- குழுவினுள் உறுதிப்பாடான நடத்தையைக் கொண்டிருப்பார்.
- உறுதிப்பாடான நடத்தைப் பண்புகளுடன் / ஏனையோருடன் இணக்கமாகச் செயற்படுவார்.

**பின்தொடர் வேலைகள்**

''நாம் உறுதிப்பாட்டுடன் ஒழுகுவோம்'' எனும் தலைப்பில் பத்திரிகைக்குக் கட்டுரையொன்றை வரைக. (500 சொற்களுக்கு மேற்படாதவாறு)

**இணைப்பு 9.5.2.1**

- மாணவர் ஒருவரினுள் மூர்க்கத்தனமாக நடத்தைக் கோலமும் இன்னுமொரு மாணவருள் தாழ்மையான நடத்தைக் கோலத்தையும் கொண்டதாகக் கருத்துக்கள் வெளிப்படுமாறு மாணவர் இருவரைக் கொண்டு நடித்துக் காட்டலொன்றில் ஈடுபடுத்தவும்.
- இதனைத் தொடர்ந்து மாணவர் இருவரைக் கொண்டு அவர்களிடையே ஒருவருக்கொருவர் செவிமடுக்கும் மதிப்புடன் உரையாடல் நடத்தையும் கொண்டதான நடித்துக்காட்டலையும் செய்விக்கவும்.

**இணைப்பு 9.5.2.2**

**செயற்பாட்டுப்பத்திரம் - 01**

- எரிச்சல் / கருத்து வேறுபாடு / மோதல் ஏற்படாதவாறு நடந்துகொள்வதற்கேற்ற அறிவுறுத்தல் தொகுதியொன்றைத் தயாரிக்கவும்.

- ஒருவருக்குச் செவிமடுப்பது எவ்வாறு? ஒருவருடன் உரையாடுவது எவ்வாறு? எனும் இரு பிரிவுகளையும் உரிய விதமாக அறிவுறுத்தல் தொகுதியுள் சேர்த்துக்கொள்ளவும்.

## 9.5.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- முரண்பாடுகளைச் சமாதானமான வகையில் தீர்த்துக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- தடைகளை வெற்றிகொண்டு முரண்பாடுகளைத் தீர்க்க முனைவார்.

**செயற்பாடு** :- "எந்த ஒரு முரண்பாட்டுக்கும் தீர்வு ஒன்றுண்டு"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :- • இணைப்பு 9.5.3.1 - நிகழ்வுக் கற்கை உள்ளடங்கிய படம்

### கற்றல் கற்பித்தல் செயற்பாடு

**படி 9.5.3.1**

- மாணவரிடம் உரையாடியவாறு அவர்கள் சிறுபராயத்தில் கேட்டுள்ள வானொலிப் பாடலான சின்னப் பெண்ணான போதிலே என்ற பாடலைப் பாட வாய்ப்பளிக்கவும்.

i. மாணவருடன் உரையாடலில் ஈடுபட்டவாறு அப்பாடலில் வரும் பாத்திரங்களைப் பற்றிக் கேட்கவும்.
ii. பாடலில் வரும் மோதல் பற்றி மாணவருடன் வினவவும்.
iii. அவர்கள் மோதலைத் தீர்த்த விதத்தை வினவவும்.
iv. இதில் வரும் ஒரு பாத்திரம் நடந்துகொண்ட விதத்தை மாணவரிடம் வினவவும். பின்வரும் கருத்துக்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடவும்.

- இணக்கப்படுத்தும்போது முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான மூன்றாம் தரப்பின் உதவியைப் பெறல் நடைபெறும்.
- இணக்கப்படுத்தும்போது குழுவாக அல்லது தனியாக இணக்கப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட முடியும்.
- இணக்கப்பாட்டாளர் இருதரத்தாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- இணக்கப்பாட்டின்போது தீர்வை பிரச்சினைக்கு உள்ளானவர்களிடமிருந்து பெறவேண்டும்.
- கட்டாயப்படுத்தல் அல்லது தீர்வளித்தல் நடைபெறமாட்டாது.
- இருதரத்தாரும் வெற்றி - வெற்றி முடிவை அடைய வேண்டும்.

(05 நிமிடங்கள்)

**படி 9.5.3.2**
- வகுப்பை 03 குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 9.5.3.4 இல் உள்ளடங்கும் சம்பவக் கற்கை படிவத்தை குழுக்களிடையே பகிர்ந்து கொடுக்கவும்.
- சம்பவத்தைக் கற்று தீர்வைக் காண்பதற்கு வாய்ப்பு அளிக்கவும்.

(15 நிமிடங்கள்)

**படி 9.5.3.3**
- மாணவரின் சம்பவக் கற்கை மூலம் பெற்ற விடைகளை வகுப்பில் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் வினவவும்.
- சரியான தீர்வை, யோசனையை மதிக்கவும்.
- பின்வரும் கருத்துக்கள் மேலெழும் விதமாக மீளாய்வு செய்யவும்.

- இணக்கப்பாட்டாளர் முரண்பட்டவர்கள் தமது முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு தத்தமது ஆற்றல்களைப் பற்றி இனங்காணச் செய்யப்படவேண்டும்.
- இணக்கப்பாட்டின் மூலம் கட்டாயப்படுத்தல் அல்லது முடிவைத் திணித்தல் நடைபெறாது சரியான தீர்வை நோக்கி பயணிக்க முயல வேண்டும்.
- இணக்கப்பாட்டாளர் தனித்தனியாக தரப்பினருடன் கலந்துரையாட வேண்டும்.
- மாற்று தீர்வுகளைத் தேடிப்பெற்று இரண்டு தரப்பிரும் வெற்றி - வெற்றி தீர்வை அடைய வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- முரண்பாட்டுத் தீர்வு என்பன வரைவிலக்கணஞ் செய்வார்.
- முரண்பாட்டுத் தீர்வின்போது இணக்கப்பாட்டின் மூலம் சரியான தீர்வைப் பெரும்பாலும் அடையலாம் என ஏற்று கருத்துக் கூறுவார்.
- இணக்கப்பாட்டாளராக ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைப்பார்/ எழுதிக் காட்டுவார்.
- தமது ஆளுமையின் மூலம் முரண்பாட்டுத் தீர்விற்காக இருக்கவேண்டிய சிறந்த பண்புகளை வெளிக்காட்டுவார்.
- முரண்பாட்டுத் தீர்வு திறன்களை காட்சிப்படுத்துவார். (மாற்று தீர்வுகளை அண்மித்தல், உறுதிப்பாடு, புரிந்துணர்வுடன் செவிமடுத்தல், முரண்பாடுகளை விவரித்தல்.)

**இணைப்பு 9.5.3.1**

பின்வரும் சம்பவம் அடங்கும் படிவத்தை மாணவர்கள் மத்தியில் விநியோகிக்கவும்.

**செயற்பாட்டுப்பத்திரம் - 01**

வாகீசனும் மதிவாணனும் சகோதரர்கள். தமது வீடுகளுக்கிடையேயுள்ள பலாமரத்தின் உரிமை தொடர்பாக எழுந்த வாக்குவாதம் இறுதியில் சச்சரவாக மாறியது. இதனால் இருவரும் இப்போது ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்வதில்லை.

இங்கு இணக்கப்பாட்டாளராக இதற்கான தீர்வை முன்வைக்கும் விதத்தை கலந்துரையாடி எழுதுங்கள்.

**செயற்பாட்டுப்பத்திரம் 2.**

மேனகாவும் தமயந்தியும் ஒரே வகுப்பில் கற்கும் நெருங்கிய நண்பிகள். இவர்கள் இம்முறை (சா/த) பரீட்சைக்கும் தோற்றுகின்றனர்.

தனது கணித செயல்நூல் காணாமல் போயுள்ளது என்றும் தமயந்தியிடம் இருப்பது தனது நூல் என்றும் மேனகா கூறுகின்றாள். மேனகாவின் புத்தகத்தை காணவில்லை என்று தமயந்தி கூறுகிறாள். இவர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் சச்சரவில் முடிவுற்றது. இங்கு இணக்கப்பாட்டாளராக உமது குழுவினருக்கு தீர்ப்பு வழங்க உதவக்கூடிய விதத்தைக் கலந்துரையாடுக.

அலகு 9.6

# வேலையுலகிற்குத் தயாராவர்

**(பாடவேளைகள் 04)**

## அறிமுகம்

நாட்டின் உயிர்நாடியான இளஞ் சந்ததியினர் நாட்டு அபிவிருத்தியின் தூண்களாவர். இடைநிலை வகுப்புக்களில் கற்கும் மாணவர்கள் குறுகிய காலத்துள் பாடசாலையை விட்டும் விலகி சமூகத்தில் பிரவேசிப்பர். வேலை உலகினுள் பிரவேசிக்கும் இவர்கள் வேலை உலகு பற்றி அறிந்திருப்பதும் அதனை முன்கூட்டியே சிந்தித்துப் பார்த்திருத்தலும் அவசியம். இதற்கு வகுப்பறையில் பயனுள்ள சில பயிற்சிகளில் ஈடுபடுதல் அவசியம். இங்கு பல்வேறு பண்புகளை வளர்த்துக்கொள்ளல் அவசியமாகும். தொழிலொன்றைப் புரிவதற்குத் தேவையான மனப்பாங்குகளை வளர்த்துக்கொள்ளவும் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர், தமது ஆற்றல்கள், திறன்கள் மற்றும் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ற தொழிலொன்றைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பொருத்தமான தொழிலை இலக்காக்கிக் கொள்ளவும் பின்னணித் தரவுகளை ஆய்வு செய்யவும், தேவையான வழிகாட்டலையும் அதன்மூலம் வளர்த்தெடுப்பதும் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றின் மூலம் தாய்நாட்டிற்குப் பயனுள்ள பங்களிப்பைச் செய்ய அவர்களால் முடியும்.

மாணவர்களுக்கு அவர்களது திறமைகள், விருப்பு, வெறுப்புக்கள், பிறவி ஆற்றல்கள் போன்றவற்றை இனங்காணச் செய்வதும் தமது ஆற்றல்கள், விருப்பு, வெறுப்புக்கள் போன்றவற்றின் அடிப்படையில் தமக்கு மிகவும் பொருத்தமான தொழில் யாதென தேர்ந்தெடுக்க ஊக்குவித்தலும் அவசியமானது.

**தேர்ச்சி 9.6** வேலை உலகிற்குத் தயாராவர்

**தேர்ச்சி மட்டம்**

9.6.1 பல்வேறு தொழிற் துறைகளை இனங்கண்டு தமது ஆற்றல்களுக்கு ஏற்ப விருப்பமான தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு முனைவார்.

9.6.2 தொழில் அபிவிருத்திக்குத் தேவையான மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.

**பாட உள்ளடக்கம்**

- **வேலை உலகு**

சமூகம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லத் தேவையான பல்வேறு பணிகள், தொழில்கள் மற்றும் வேலைகள் போன்றவற்றால் நிரம்பி உள்ளது. கல்வி கற்று பாடசாலையிலிருந்து வெளியேறும் எல்லா மாணவரும் வேலை உலகினுள் பிரவேசிக்கின்றனர். தமது வாழ்க்கையை கொண்டுசெல்லத் தேவையான தொழிலொன்றிலோ, வேலையொன்றிலோ ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்.

வாழ்க்கைக்காகத் தொழிலொன்றைத் தேர்ந்தெடுக்கும்போது யாவரும் தமது அறிவு சார்ந்த, விருப்பு, வெறுப்பு, உள்ளார்ந்த ஆற்றல் போன்றவற்றை இனங்கண்டு தொழிலொன்றை தேர்ந்தெடுப்பதன் மூலம் பயனுள்ள நபராகும் அதே சமயம் பயனுறுதியுள்ள சேவையை சமூகத்திற்கு ஆற்றவும் அவர்களால் முடியும்.

தாம் தேர்ந்தெடுக்கும் தொழிலுக்குத் தேவையான தகைமைகளையும் பயிற்சிகளையும் பெறுவதன் மூலம் திருப்தியான தொழில் வாண்மையாளராவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். ஆகவே தொழிற்பயிற்சி நிறுவனங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

ஒருவரது வேலை அல்லது தொழில், அரசதுறை, தனியார்துறை அல்லது சுயதொழிலாக அமையக் கூடும். அதனை வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செய்தல் அவசியமாகும். மேலும் பண்டங்களின் உற்பத்தியின்போதும் சேவைகளை வழங்கும்போதும் தரத்தைப் பேணக்கூடியவாறு செயற்படுதலும் தமது சேவையை மிகச் சிறப்பாக சமூகத்திற்கு வழங்க முனைவதும் தொழில் வாண்மையாளரின் கடமையாகும்.

**செயற்பாடு 9.6.1**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | :- | வேலை உலகிற்குத் தயாராவர் |
| **தேர்ச்சி மட்டம்** | :- | பல்வேறு தொழிற்துறைகளை இனங்கண்டு தமது ஆற்றல்களுக்கு ஏற்ப விருப்பமான தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு முனைவார். |
| **செயற்பாடு** | :- | “விருப்பமான தொழிலைத் தெரிவு செய்வோம்” |
| **நேரம்** | :- | 40 நிமிடங்கள் |
| **தர உள்ளீடு** | :- | • இணைப்பு 9.6.1.1<br>• இணைப்பு 9.6.1.2 |

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.6.1.1**

- இணைப்பு 9.6.1.1 ஐ வகுப்பில் காட்சிப்படுத்துங்கள்.
- அதிலுள்ள படத்தை நன்கு அவதானிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- மாணவருடன் கலந்தாலோசியுங்கள். பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

☞ வேலை உலகு பரந்தது. அங்கு தொழில்கள் பல உண்டு. கல்வி கற்ற பின்னர் வேலை உலகினுள் பிரவேசிக்க வேண்டும்.
☞ தமது ஆற்றல்கள், விருப்புக்கள், சமூகத் திறன்கள் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றுக்குப் பொருத்தமான தொழிலொன்றை இலக்காகக் கொண்டு செயற்படல் அவசியம்.
☞ தேர்ந்தெடுக்கும் வேலைக்குத் தேவையான தகைமைகளையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.6.1.2**
- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- இணைப்பு 9.6.1.2 ஐ குழுக்களிடையே பகிர்ந்து கொடுக்கவும்.
- அதனை நன்கு வாசித்து அறிவுறுத்தலுக்கமைய செயற்பட வழிப்படுத்தவும்.

(20 நிமிடங்கள்)

**படி 9.6.1.3**
- மாணவர் குழுக்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் வினவவும்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி தொகுப்புரையை மேற்கொள்க.

> ☞ ஒவ்வொருவரினதும் விருப்புக்கள் வேறுபட்டவை.
> ☞ தமது விருப்புக்கேற்ற தொழிலொன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
> ☞ தேவையான தகைமைகளையும் பயிற்சியையும் பெறுவதன் மூலம் இலகுவில் வேலை உலகினுள் பிரவேசிக்க முடியும்.
> ☞ அதனால் தொழிலின்றிக் கழிக்கும் காலம் குறைவடைந்து திருப்தியுடனான தொழிலில் ஈடுபட முடியும்.
> ☞ நாட்டின் அபிவிருத்திக்கும் தனது தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சிறப்பான அடித்தளத்தையிட முடியும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- வேலை உலகினுள் பிரவேசிக்கும் முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்குவார்.
- தமது ஆற்றல்களுக்கேற்ற தொழிலில் ஈடுபடுவதன் மூலம் தமக்கும் நாட்டுக்கும் பயனுள்ள சேவையில் ஈடுபட முடியுமென்பதை ஏற்றுக்கொள்வார்.
- தமது விருப்பினடிப்படையில் தொழிற்துறைகளைப் பட்டியற்படுத்துவார்.
- வேலை உலகின் தொழில், வேலைகள் பற்றி விமர்சிப்பார்.
- தேவையான தகைமைகளையும் பயிற்சியையும் பெற்று தொழில் உலகில் பிரவேசிக்கத் தயாராகுவார்.

**இணைப்பு 9.6.1.1**

- பின்வருமாறு பல்வேறு தொழில்களில் ஈடுபடும் தொழிலாளிகளைக்காட்டும் வேலைத்தளம், தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள், சந்தை, ஆடைத்தொழிற்சாலையின் ஊழியர்கள், ஒரு கடை, விவசாயி, கணினித் தொழினுட்பவியலாளர்கள், விலங்குப்பண்ணை, ஆசிரியர், காரியாலய ஊழியர், விமானி, மீன்பிடித்தொழிலாளி ஆகியோரைக் காட்டும் சித்திரமொன்றை அல்லது படத்தை வகுப்பிற் காட்சிப்படுத்தவும்.

**இணைப்பு 9.6.1.2 செயற்பாட்டுப்பத்திரம்**

**தொழில் அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சின் தொழில் விருத்தி செயற்றிட்டத்திலிருந்து பெறப்பட்டது**

**தொழில் நாடிகள் விரும்பும் தொழில்களின் அட்டவணை**

| விருப்பு | தொழிற்துறைகள் |
|---|---|
| **வெளிக்களம்** | இதன் பொருள் அலைந்து திரிந்து வெளிக்களத்தில் வேலைசெய்ய விரும்புவதாகும். விலங்குகள் பராமரிப்பு அல்லது பயிர்ச்செய்கை இத்தொகுதிக்கு உரித்தாகும். விவசாயம், காடு வளர்த்தல், பூந்தோட்டச் செய்கை, நில அளவை, விளையாட்டுத்துறை தொழில்கள் இத்துறை சார்ந்த சில தொழில்களாகும். |
| **பிரயோகிக்கக்கூடியன** | இயந்திரங்களைத் திருத்துபவர்/ செயற்படுத்துபவர், கருவி/ உபகரணங்களைப் பயன்படுத்தி வேலை செய்பவர்கள், விமானிகள், தொழிற்சாலை ஊழியர்கள், கைத்தொழிலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் இவ்வகையைச் சேர்ந்தவராவர். |
| **விஞ்ஞான ரீதியானவை** | புதிய கருத்துக்களை தேடல், அவதானிப்பு, ஆய்வு, செய்து பார்த்தல் போன்ற விஞ்ஞான ரீதியிலான செயற்பாடுகளாகும். மருத்துவர்கள், சுகாதாரத்துறையினர், மருந்து கலப்பவர்கள், விலங்கியலாளர்கள், பல் மருத்துவர்கள், இரசாயனவியலாளர்கள், பௌதிகவியலாளர்கள் இத்தகையோராவர். |
| **ஆக்க ரீதியானவை** | தமது ஆக்கத்தை வெளிப்படுத்தல் இதன் கருத்தாகும். ஓவியம், இசை, இலக்கியம் தொடர்பான தொழில்கள் இதிலடங்கும். ஓவியத்துறைக்குள்ள விருப்பு, உம்மிடம் காணப்படும் சில பொருட்களைத் தயாரிக்கும் ஆவல். அழகானவற்றை ரசித்தல், உங்கள் அயலிலுள்ளவற்றை அழகுபடுத்தல், அலங்கரித்தல் ஆகியவற்றினூடாக காட்சிப்படுத்தப்படுகின்றது. ஓவியர், புகைப்படக் கலைஞர்கள ஆகியோர் இத்தகையோராவர். இசை ஆக்கங்கள், நடனம், ஆடல், பாடல் ஆகியன இசைத் துறையைச் சேர்ந்தனவாகும். எழுத்துத்துறை, புத்தகங்கள் எழுதுதல், நிருபர், விளம்பரத் துறையினர் ஆகியோரும் இதிலடங்குவர். |
| **வர்த்தகத்துறை** | மனிதர்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடுவதில் உள்ள விருப்பு, சட்டத்துறை, அரசியல், வர்த்தக துறைகள் இவ்வகையில் அடங்கும். உல்லாசத்துறை வர்த்தகர்கள், கடை உரிமையாளர்கள், வர்த்தகத்துறை உயர் அதிகாரிகள், முகாமையாளர்கள் இதற்கு உதாரணங்களாகும். |

| | |
|---|---|
| **காரியாலயம்** | காரியாலயமொன்றில் எழுத்து வேலைகள், ஒழுங்கமைப்பு வேலைகளைச் சரியாகச் செய்யும் விருப்பு, திட்டமிடலாளர், நிர்வாகிகள், செயலாளர்கள், காரியாலய ஊழியர்கள், வரவேற்பாளர்கள், வங்கி எழுதுவினைஞர்கள், கணினி செயற்படுத்துபவர்கள் ஆகியோர் இதிலடங்குவர். காரியாலய வேலைகளுக்கு கணக்கு பதிதல், நிதிக்கட்டுப்பாடு, தரவு ஒழுங்குபடுத்துதல் போன்ற வேலைகளில் ஈடுபடும் கணினி தொழினுட்பவியலாளர்கள், சட்டவல்லுனர்கள், பொருளியலாளர்கள் போன்ற தொழில்கள் என்றவாறும் இவை பரந்து செல்லும். |
| **மக்கள் தொடர்பு** | மனிதர்களின் நலன்புரி வேலைகளுக்குள்ள விருப்பு, இத்தொழிலை தேர்ந்தெடுக்கக் காரணமாகும். ஆசிரியர்கள், தாதிகள், பொலீசார், நலன்புரி அதிகாரிகள், மக்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டவர்களாவர். விற்பனையாளர்கள், காசாளர்கள், உணவுச் சாலை சேவகர்கள், எழுதுவினைஞர் போன்ற தொழில் செய்பவர்கள் இவ்வகையோராவர். |

## இணைப்பு 9.6.1.3

உமக்குத் தரப்பட்டுள்ள செயலட்டையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. இங்கு தரப்பட்டுள்ள விருப்புக்குரிய துறையைப் பெயரிடுக.
2. ஒவ்வொரு விருப்புக்குரிய துறையைச் சேர்ந்த மூன்று வேலைகளைப் பெயரிடுக.
3. நீங்கள் மிகவும் விரும்பும் துறையிலிருந்து ஒரு தொழிலைத் தேர்ந்தெடுங்கள்.
4. அத்தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கான வேறு காரணங்களைச் சுருக்கமாக எழுதுங்கள்.

**செயற்பாடு 9.6.2.1**

**தேர்ச்சி** :- வேலை உலகிற்குத் தயாராவர்

**தேர்ச்சி மட்டம்** :- தொழில் அபிவிருத்திக்குத் தேவையான மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.

**செயற்பாடு** :- ''நல்ல தொழில்வாண்மையாளராவதற்கு ஒரு அறிவுரை''

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.6.2.1
- எழுதுதாள்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.6.2.1**

- இணைப்பு 9.6.2.1 இல் குறிப்பிடப்பட்ட பாத்திரத்தை வகுப்பறையில் நடித்துக்காட்டுமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்குக.
- அப்பாத்திரங்களில் சொல்லப்பட்டதன்படி பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

☞ சிறந்த தொழில்வாண்மையாளரிடத்திலே உள்ள பண்புகள் பல.
உதாரணம் :-
- வினைத்திறன், விளைதிறன், தொழில்பற்று, அர்ப்பணிப்பு, கடமைகளை நிறைவேற்றல்.
- வினைத்திறனுடன் தன் தொழிலில் ஈடுபடல் அவசியம். அத்துடன் அதனால் ஏற்படும் விளைதிறன் மிக அதிகமாகும்.
- தன் தொழிலின் கடமையை சரியாக நிறைவேற்றுவதால் தனியாளிடத்தில் தொழில்பற்று ஏற்படும். அத்துடன் விளைதிறனை மேம்படுத்துவதற்கும் அக்கறையெடுத்தல் வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.6.2.2**

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாக்குங்கள்.
- குழுவில் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ற விதத்தில் பொருத்தமான தொழிலொன்றைத் தெரிவுசெய்துகொள்வதற்கு அறிவுரை வழங்குங்கள்.
  1. அத்தொழிலை தெரிவுசெய்தமைக்கான காரணங்கள்.
  2. வினைத்திறன், விளைதிறனுடன்கூடியதாக தன் தொழிலில் ஈடுபடும் விதம்.
  3. தொழிலின் கடமைக்கூறுகளை நிறைவேற்றும் முறை போன்றவற்றைத் தெளிவுபடுத்தி வகுப்பின் முன்னிலையில் உரையொன்றை ஆற்றத் தயாராகும்படி அறிவுறுத்தல் வழங்கவும்.

(15 நிமிடங்கள்)

**படி 9.6.2.3**

- குழுக்கள் தயார்செய்த உரையை வகுப்பில் நிகழ்த்தச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- குழுக்களின் கருத்துக்களைக் கேட்டறியுங்கள்.
- நல்ல கருத்துக்களுக்கு மதிப்பளித்து பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் தொகுப்புரையை மேற்கொள்ளுங்கள்.

| |
|---|
| ☞ எந்தத் தொழிலாளியும் தனக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை முறையாக நிறைவேற்ற வேண்டும். |
| ☞ எந்தவொரு தொழிலாளியாலும் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க முடியும். |
| ☞ ஒரு நிறுவனத்தின் அல்லது நாட்டின் முன்னேற்றத்துக்கு அர்ப்பணிப்புடன் செயற்படல் அவசியம். |
| ☞ அதனூடாக தனக்கு திருப்தியான சேவையை வழங்குவதற்கு முடியும். |
| ☞ அதனால் தொழிலில் விருத்தி ஏற்பட வழிவகுக்கலாம். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தொழில் விருத்திக்கு அவசியமான பண்புகளை சுருக்கமாக விளக்குவார்.
- பொருட்கள், சேவைகள் தரமுள்ள வகையில் உற்பத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வார்.
- வினைத்திறன், விளைதிறன் உள்ளதாக செயற்படும் முறை, தொழில் மீதான கடமைப்பாட்டை நிறைவேற்றும் முறை போன்றவற்றை உள்ளடக்கிய அட்டவணை ஒன்றை முன்வைப்பதற்குத் தயாராவார்.
- தொழில் உலகினூடாக சமூகத்திற்குச் சிறந்த சேவையை செய்வதற்கு முன்வருவார்.
- தொழில் உலகிலே ஏனையோருக்கு முன்மாதிரியாகச் செயற்படத் தூண்டப்படுவார்.

**இணைப்பு 9.6.2.1**

வைத்தியர்: நான் ஒரு வைத்தியர். நான் தொழிலில் மிகவும் விருப்பத்துடன் ஈடுபடுகிறேன். என்னிடம் வரும் நோயாளிகளுடன் நான் நல்லமுறையில் அன்பாகக் கதைப்பேன். அவர்கள் என்மீது மிகவும் அன்பு காட்டுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் எனக்கு நன்றி செலுத்திவிட்டுத்தான் வெளியே செல்வார்கள். நோயாளிகள் விரைவாகக் குணமடைவதைக் கண்டு நான் சந்தோசமடைவதுடன் எனது சேவையில் திருப்தி அடைகிறேன்.

ஆசிரியர்: நான் ஓர் ஆசிரியர். எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கற்பித்தல் நடவடிக்கையை உரிய காலத்தில் நிறைவேற்றுவேன். எனது மாணவர்கள் அனைவரும் என்னில் அன்பு காட்டுவார்கள். அதனால் எனக்கு கற்பித்தல் என்பது மகிழ்ச்சிகரமானதொன்றாகும். என்னிடம் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்கின்றனர். நான் அதற்காக பாரிய அர்ப்பணிப்பைச் செய்து வருகின்றேன். அதனால் எனது பாடத்தில் உயர் பெறுபேற்றை பெறக்கூடியதாக உள்ளது. நான் மிகவும் சந்தோசமாக இருக்கின்றேன்.

தொழிலாளி: நான் மரவேலைத் தொழில் செய்கிறேன். காலை 8 மணிக்கு வேலையை ஆரம்பித்து மாலை 5 மணிவரை தொடர்ச்சியாக வேலை செய்கிறேன். அதனால் என்னுடைய வேலையை உரிய காலவேளையில் நிறைவுசெய்ய முடியும். அது மாத்திரமன்றி தரமான பொருட்களையும் நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுக்கிறேன். அவர்கள் எனது பொருட்களுக்கு மதிப்பளிக்கிறார்கள். அவ்வேளையில் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கும். நான் தொழிலுக்குரிய பயிற்சியைத் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து பெற்றுக் கொண்டேன். எனது வருமானம் குறித்து நான் சந்தோசமடைகின்றேன்.

சுயதொழில் செய்பவர்: சுயதொழில் ஒன்றைச் செய்வதன் மூலம் வருவாயைப் பெற்றுக் கொள்கிறேன். அதனால் எனது தொழிலை ஆரம்பிக்கும் நேரமோ, முடிக்கும் நேரமோ இல்லை. எனக்கு முடிந்தளவு நேரத்தைப் பயன்படுத்தி எனது தொழிலைச் செய்கிறேன். நான் கொஞ்சம் மூலதனம் சேகரித்துத் தான் எனது தொழிலை ஆரம்பித்தேன். சில நாட்களின் பின் நான் செலவழித்த பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனது அர்ப்பணிப்பு, அக்கறை காரணமாக (நல்ல பொருட்கள்) தரமான பொருட்களை சந்தைக்கு அனுப்புவதால் எனது பொருட்கள் விரைவாக விற்பனையாகின்றன. எனது வியாபாரம் வெற்றிகரமாக இருப்பதுடன் என்னிடம் பொருட்களை விலைகொடுத்து வாங்கும் நுகர்வோரும் சந்தோசமடைகின்றனர். அவர்கள் எனது பொருட்கள் மற்றும் வேறு பொருட்களுடன் உற்பத்தியாளர்களின் பொருட்களை ஒப்பிட்டு மதிப்பளித்துப் பேசுவார்.

# பாகம் 2
# குடியுரிமைக்கல்வி

## 9.1 நாம் வாழும் சமூகம்

**(பாடவேளைகள் 08)**

## அறிமுகம்

குடும்ப அலகுகள் ஒரு கூட்டுத் தொகையானால் சமூகமொன்று உருவாகின்றது. சுமூகமொன்றில் உறுப்பினர்களாக வாழும்போது அந்த உறுப்பினர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள சமூகத்தின் ஏதோ ஒரு வகையான நிர்வாகம் இருப்பது அவசியமாகிறது. அதன்மூலம் சமூகத்தில் முறிவு ஏற்படாது தவிர்க்கப்பட்டு சமூகத்தின் காப்பு கட்டியெழுப்பப்படுகின்றது. தனியாள் நலனுக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யும் விதத்தில் சமூகத்தின் நிர்வாகத்துக்குப் பல்வேறு சட்ட பிரமாணங்கள், சடங்கு, சம்பிரதாயங்கள், சமயங்கள் போன்ற பிரிவினால் பெருமளவு பணிகள் ஆற்றப்படுகின்றன. சமூகக் காப்பினை ஏற்படுத்துவதற்காக பாடசாலை, சமய, நிறுவனங்களும் பங்களிப்புச் செய்கின்றன. காவல்துறை, முப்படையினர் போன்ற அமைப்பகள் சமூகக் காப்பினை ஏற்படுத்துவதற்காக பெரியளவு பணியினை ஆற்றுகின்றன. தனி நபர் ஒருவருக்கு சமூகத்தினால் கிடைக்கப்பெறும் காப்பு, பாதுகாப்பு என்பன சமூகப்பாதுகாப்பு என மிக இலகுவாக அறிமுகப் படுத்தலாம். சமூகக் காப்புடன் இணைந்த நபர்களினதும் நிறுவனங்களினதும் பணிகளை இனங் கண்டவாறு அது தொடர்பான கற்கையில் மாணவரை ஈடுபடுத்துவது இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### தேர்ச்சி

கூட்டான செயற்பாடு களின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்க ளிப்புச் செய்வார்.

### தேர்ச்சி மட்டங்கள்

- சமூக பாதுகாப்புக்கான தனியாளின் பொறுப்புக் களையும் கடமைகளை யும் நிறைவேற்றுவார்.
- சமூக பாதுகாப்பின்மீது பங்களிப்புச் செய்யும் பல்வேறு நிறுவனங்களை அறிந்து பெருமிதங் கொண்ட பிரசை என்ற வகையில் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார்.
- கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சக வாழ்வு வாழும் பிரசையாகச் செயற்படுவார்.

**பாட உள்ளடக்கம்**

### 9.1.1 சமூகக் காப்பு

- ஏதேனும் ஒருவருக்கு உடல் ரீதியான அச்சம் ஏதுமின்றி வாழ்க்கையை நடாத்திச் செல்ல சமூகத்திலிருந்து கிடைக்கும் காப்பும் பாதுகாப்பும் சமூகக் காப்பாகும்.
- சமூகத்திற்கும் தனியாளுக்குமிடையிலான தொடர்பு சமூகம் என்பதால் கருதப்படுவது ஏதேனும் ஒரு நிலப்பகுதியில் வாழுகின்ற ஒரு இனத்தவர் அல்லது பல்வேறு மக்கள் தொகையினர் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள அமைப்புகள் போன்ற வலையமைப்புகளின் கூட்டாகும்.
- சமூகமானது தனிநபர் கூட்டமொன்றின் மொத்தமாகும்.
- தனிநபருக்கும் சமூகத்துக்கும் இடையில் நேரடித் தொடர்புகள் இருத்தல்.
- நல்லதொரு சமூக வாழ்வைக் கொண்டு செல்ல தனிநபர்களுக்கிடையில் இடைத்தொடர்புகள் அவசியமாகும்.

சமூகக் காப்பில் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களாவன:

- குடும்பம்
- பாடசாலை
- சமய நிறுவனங்கள்
- சமூக அமைப்புகள்

| சமூகக் காப்பிற்காகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் | சமூகக் காப்பிற்காக வழங்கப்படும் பங்களிப்பு |
|---|---|
| குடும்பம் | • அடிப்படைத் திறன்களை வழங்கல்.<br>• உளரீதியான தேவைகளை வழங்கல்.<br>• சமூகமயமாக்கல்.<br>• பாதுகாப்பையும் காப்பையும் வழங்கல்.<br>• நற்பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றை எதிர்காலச் சந்ததியினருக்குப் பொறுப்புக் கொடுத்தல். |
| பாடசாலை | • அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றால் முழுமையடைந்த நற்பிரசைகளை உருவாக்கல்.<br>• எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய நற்பிரசைகளை உருவாக்கல்.<br>• நல்ல, சமூகமய, நற்குணமுள்ள பிரசைகளை உருவாக்கல்.<br>• சமூகமயமாக்கல்.<br>• உரிமைகள், கடமைகள் தொடர்பில் அனுபவங்களைப் பெற்றுக் கொடுத்தல். |
| சமய நிறுவனங்கள் | • ஆன்மிக விருத்தியை ஏற்படுத்தல்.<br>• கட்டுப்பாட்டையும் நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்தல்.<br>• சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்தல். |
| சமூக அமைப்புக்கள் | • உறுப்பினரிடையே கூட்டு மனப்பாங்கை ஏற்படுத்தல்.<br>• சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து செயற்படுவதற்குப் பழகுதல்.<br>• சுயமரியாதையை ஏற்படுத்தல்.<br>• உரிமைகளையும் கடமைகளையும் நிறைவேற்றப் பழகுதல்.<br>• முரண்பாடுகளைக் குறைத்தல். |

**9.1.2 சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள பொறிகள், சட்டப் பிரமாணங்களுடன் தொடர்பான தனிப்பட்ட பொறுப்புகள்:**

- அரசியலமைப்புச் சட்டம்
- நீதிமன்றம்
- காவல்துறை
- பாதுகாப்புப் படைகள்
- இணக்க சபைகள்
- குறைகேள் அதிகாரி
- அரசினால் பிறப்பிக்கப்படும் சட்டப் பிரமாணங்கள்

| **சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்யும் பொறிமுறைகளும் நிறுவனங்களும்** | **சமூகக் காப்புக்காகப் பங்களிப்புச் செய்யும் விதம்** |
|---|---|
| அரசியலமைப்புச் சட்டம் | • அடிப்படை உரிமைகள் சட்டத்தினால் உறுதிப்படுத்தல்.<br>• அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் எடுக்கக் கூடிய வழிவகைகள் காட்டப்படல் |
| நீதிமன்றங்கள் | • நீதியை நிலைநாட்டுதல்<br>• சட்டத்தை வியாக்கியானப்படுத்தலும் விளக்க மளித்தலும். |
| இணக்க சபைகள் | • சிறு பிணக்குகளை இணக்கத்துக்கு உள்ளாக்கல் |
| காவல் துறை | • பொதுமக்கள் பாதுகாப்பையும் சமாதானத்தை யும் மேற்கொள்ளல்.<br>• குற்றவாளிகளைச் சட்டத்திற்கு முன் கொண்டுவரல். |
| பாதுகாப்புப் படையினர் | • தேசிய பாதுகாப்பை உறுதி செய்து அதனைக் கொண்டு செல்லல்.<br>• அரச எதிர்ப்புச் செயல்களை அடக்குதல் (பயங்கரவாத இயக்கம், சிவில் போராட்டம்) |
| குறைகேள் அதிகாரி | • அரச சேவையாளரின் உரிமைகளைப் பாதுகாத்தல். |
| அரசினால் பிறப்பிக்கப்படும் சட்டப் பிரமாணங்கள். | • பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற் காக சிவில் சட்டங்களையும் குற்றவியல் சட்டத் தொகுப்பையும் செயற்படுத்தல். |

(சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காக காவல்துறை முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கு மாணவரை ஈடுபடுத்தவும்)

### 9.1.3 கூட்டுறவு இயக்கத்தை அறிமுகஞ் செய்தல்

- தனிநபர் குழுவொன்றினால் சகவாழ்வு அடிப்படையில் சமூக நல்வாழ்வை ஏற்படுத்துவதற்காக சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு சுய விருப்புடன் கட்டியெழுப்பப்டும் அமைப்பு, கூட்டுறவு என்று அழைக்கப்படலாம்.

- கூட்டுறவின் நோக்கங்கள்
  - உறுப்பினரின் தேவைகளை நிறைவேற்றல்.
  - மக்களுக்கு மிகச் சிறப்பாக வாழும் வழியை ஏற்படுத்தல்.
  - அபிவிருத்தியடைந்துவரும் நாட்டுமக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவுதல்.

- இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டுறவுச் சங்க வகைகள்
  - பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
  - கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம்
  - விவசாய உற்பத்தியாளரின் கூட்டுறவுச் சங்கம்
  - பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம்

- பாடசாலைக் கூட்டுறவுச் சங்கத்தினால் மாணவர் பெறக்கூடிய சேவைகள்
  - பாடசாலைக் காகிதாதிப் பொருட்களை மலிவான விலையில் பெற்றுக்கொள்ளல்.
  - உணவுப் பொருட்களை மலிவாகப் பெறக்கூடியதாயிருத்தல்.
  - விளையாட்டு உபகரணங்களை மலிவான விலையில் பெறக்கூடியதாயிருத்தல்.
  - மாணவரின் ஏனைய தேவைகளை நிறைவேற்றல்.
  - தலைமைத்துவப் பயிற்சி
  - கூட்டுறவு வாழ்க்கைப் பாணிக்குப் பழகுதல்

- பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்படும் சேவைகள்
  - கிராமிய மட்டத்தில் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக "கூட்டுறவு, பிரதேச சங்கங்களை" நடாத்துதல்.
  - கடன் வழங்கும் சங்கங்களை நடாத்துதல்.
  - வைத்தியசாலைகளை நிறுவி சுகாதார சேவைகளை நடாத்துதல்.
  - மரணாதார சேவைகளை வழங்குவதற்காகப் பங்களித்தல்.
  - போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காகப் பங்களித்தல்

## 9.1.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- சமூக பாதுகாப்புக்கான தனியாளின் பொறுப்புக் களையும் கடமைகளை யும் நிறைவேற்றுவார்.

**செயற்பாடு** :- "சமூகக் காப்பைக் கட்டியெழுப்புவோம்"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- 9.1.1.1. இணைப்புக்கான பாடங்கள்
- 9.1.1.2 க்கு உரிய செயற்பாட்டுப் பத்திரம்
- A4 கடதாசி
- மாக்கர் பேனை (Marker Pen)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.1.1**

- 9.1.1.1 இணைப்புக்கான படத்தை முன்வைக்கவும்.
- படத்தை அவதானிப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- படத்தில் காட்டப்பட்டுள்ளவற்றைப் பற்றி பகுப்பாய்வு செய்ய சில மாணவருக்கு வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

> ☞ பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்து வயதுவந்தோர் அக்கறையாக இருத்தல்.
> ☞ பாதுகாப்பானது அனைவருக்கும் முக்கிய தேவையாகும்.
> ☞ தனிநபர் ஒருவருக்குச் சமூகத்திலிருந்து கிடைக்கும் காப்பும், பாதுகாப்பும் சமூகக் காப்பாகும்.

(05 நிமிடங்கள்)

**படி 9.1.1.2**

- மாணவரை பொருத்தமான வகையில் குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.1.1.2 இற்கான செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கவும்.
- குழுக்களுக்குக் கடதாசி, மாக்கர் பேனைகளை வழங்கவும்.
- குழுக்களிடையே நடமாடியவாறு மாணவருக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கவும்.

(20 நிமிடங்கள்)

**படி 9.1.1.3**

- குழுக்களுக்குச் செயற்பாட்டை முன்வைக்க வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடாத்தவும்.

- ☞ சகலருக்கும் சமூகக் காப்பு தேவை.
- ☞ சமூகக் காப்பில் குடும்பம், பாடசாலை, சமூக நிறுவனங்களும் சமூக அமைப்புகளும் பங்களிப்புச் செய்கின்றன.
- ☞ அடிப்படைத் தேவைகளை வழங்கியவாறு நற்பிரசை சமூகத்துக்குப் பங்களிப்புச் செய்தல் சமூகக் காப்புக்கு என செய்யப்படும் ஒரு பணியாகும்.
- ☞ பாடசாலை சமூகக் காப்புக்குப் பங்களிப்புச் செய்வது சிறந்த அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் முழுமையாக மாணவரை சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்வதன் மூலமாகும்.
- ☞ நல்லொழுக்கத்தினாலும் நற்பண்புகளாலும் முழுமையடைந்த மாணவரை சமூகத்துக்குப் பங்களிப்புச் செய்வதன் மூலம் சமூக காப்பினுக்கு சமயத் தாபனங்கள் பங்களிப்புச் செய்கின்றன.
- ☞ நீதியை நிலை நாட்டல் மற்றும் சட்டத்தை மீறுவோருக்கு தண்டனை வழங்குவதன் மூலம் நீதிமன்றங்களும் மனித உரிமைகளைக் காப்பதற்குப் பங்களிப்பதால் சமூகக் காப்புக்குப் பங்களிப்புச் செய்கின்றன.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- சமூகக் காப்புக்காகப் பல்வேறு நிறுவனங்கள் பங்களிப்புச் செய்கின்றதெனக் கூறுவார்.
- சமூகக் காப்பைக் கட்டியெழுப்புவதற்காக இந்த நிறுவனங்களினால் ஆற்றப்படும் பணிகளை மதிப்பார்.
- பிரசை என்றவகையில் சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்கு தமது கடமைகளை நிறைவேற்றுவார்.
- ஆக்கப்பூர்வமாகச் செயற்படுவார்.
- குழுச் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.

**இணைப்பு 9.1.1.1**

- தனியாள் பாதுகாப்பு தொடர்பில் பின்வரும் சந்தர்ப்பங்கள், செயற்பாடுகளை பொருத்தமான வகையில் தொகுத்து சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளவும்.
- வீட்டினுள் சிறு பிள்ளைகளுட்கு ஏற்படக்கூடிய அனர்த்தம் தொடர்பில் உபகரணமொன்றைத் தயாரித்துக் கொள்ளவும்.
- வீட்டிற்கு வெளியே அயற்சூழலில் சிறு பிள்ளைகளுக்கு மட்டுமன்றி வயதுவந்தோருக்கும் ஏற்படக்கூடிய அனர்த்தம் தொடர்பிலான விடயம்.

**இணைப்பு 9.1.1.2**

## செயற்பாட்டுப் பத்திரம்

**குழு 1**

சமூகப் பாதுகாப்பின் மீது பாதிப்புச் செலுத்தும் குடும்பத்தின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.

**குழு 2**

சமூகப் பாதுகாப்பின் மீது பாதிப்புச் செலுத்தும் பாடசாலையின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.

**குழு 3**

சமூகப் பாதுகாப்பின் மீது பாதிப்புச் செலுத்தும் சமய நிறுவனங்களின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.

**குழு 4**

சமூகப் பாதுகாப்பின் மீது பாதிப்புச் செலுத்தும் நீதிமன்றத்தின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.

**குழு 5**

சமூகப் பாதுகாப்பின் மீது பாதிப்புச் செலுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையின் பங்களிப்பு தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.

## 9.1.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்க ளிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- சமூக பாதுகாப்பின்மீது பங்களிப்புச் செய்யும் பல்வேறு நிறுவனங்களை அறிந்து பெருமிதங் கொண்ட பிரசை என்ற வகையில் ஒத்துழைப்புடன் கருமமாற்றுவார்.

**செயற்பாடு** :- "சமூகக்காப்பு தொடர்பில் தனியாள் பங்களிப்புச் செய்யும் விதத்தைத் தேடியறிவோம்"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.2.1 கல்லாயுதங்களைக் காட்டும் உருக்கள்.
- இணைப்பு 9.1.2.2 உரிய செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.2.1**

- இணைப்பு 9.1.2.1. இற்குரிய செயற்பாட்டுப் பத்திரத்தை வகுப்பில் சமர்ப்பிக்கவும்.
- பின்வரும் வினாக்களை மாணவருக்கு முன்வைத்தவாறே அதனைக்கொண்டு உரையாடலை நடத்தவும்.

1. சமூகக்காப்பை ஏற்படுத்துவதற்காகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் யாவை?
2. அந்நிறுவனங்களால் ஆற்றப்படும் பணிகள் யாவை?
3. இதன்மூலம் சமூகக் காப்புக்காக ஆற்றப்படும் பணிகள் யாவை?

- ☞ சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காகப் பல்வேறு நிறுவனங்கள் பங்களிப்புச் செய்கின்றன.
- ☞ அந்நிறுவனங்களின் மூலம் சமூகக் காப்பினுள் பெரும் பணிகள் ஆற்றப்படுகின்றன.
- ☞ சமூகக்காப்பு கைவிட்டுப்போவதால் சமூகத்தின் நிலைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாகின்றது.
- ☞ பரஸ்பர தொடர்புகளை விருத்தி செய்தவாறு பாதுகாப்பான வாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்வதில் சமூகக் காப்பு பெரும் உந்து சக்தியாக அமைகின்றது.

(10 நிமிடங்கள்)

**இணைப்பு 9.1.2.2**

- ஏற்றவாறாக மாணவரைக் குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் இணைப்பு 9.1.2.2. இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கவும்.
- தம் குழுவினருக்குக் கிடைத்த செயற்பாட்டுப் பத்திரத்துக்குரிய தலைப்புக்கு அமைய சிறு பாத்திரமேற்று நடித்தலொன்றை ஆயத்தம் செய்யவும். (3 நிமிடம் அளவு)
- தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டலையும் வழங்கியவாறு பாத்திரமேற்று நடித்தலை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்கவும்.

(20 நிமிடங்கள்)

**பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.**

- ☞ சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்காக குடும்பத்தின்மூலம் ஊட்டம், பாதுகாப்பு, அன்பு, கருணை, பரிவு, நேயம், கல்வி என்பன கிடைக்கின்றன.
- ☞ குடும்பத்தின் ஊடாக சமூகக் காப்புக்குரிய அடிப்படை கிடைக்கின்றது.
- ☞ சமய நிறுவனம், காவற்றுறை, பாதுகாப்புப்படை, பாடசாலை, நீதிமன்றம் போன்ற நிறுவனங்கள் சமூகக் காப்பை ஏற்படுத்து வதற்காக பெரும் பணியை ஆற்றுகின்றன.
- ☞ சமூகக் காப்பு இல்லாதபோது சமூகத்தின் நிலைபேறுக்கு ஊறு விளைகின்றது.
- ☞ சமூகக் காப்புக்காக தனிநபரினாலும் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும், பொறுப்புகளும் இடையறாது நிறைவேற்றப்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்**

- சமூகக் காப்புக்காகப் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்களைப் பெயரிடுவார்.
- அந்நிறுவனங்களினால் ஆற்றப்படும் சேவைகளை மதித்தவாறு உரையாற்றுவார்.
- பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் சமூகக்காப்புக்குப் பங்களிப்புச் செய்வார்.
- குழுவாகச் செயற்பாட்டில் நிலைத்திருப்பார்.
- சமூகக் காப்பை ஏற்படுத்த பங்களிப்புச் செய்வார்.

**இணைப்பு 9.1.2.1**

**சமூகக் காப்பில் பங்களிப்புச் செய்வன**

- ☞ குடும்பம்
- ☞ பாடசாலை
- ☞ சமய நிறுவனங்கள்
- ☞ காவல்துறையும் பாதுகாப்புப்படையும்
- ☞ நீதிமன்றம்

**இணைப்பு 9.1.2.2**
**செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு 1**

சமூகக் காப்புக்குக் குடும்பங்கள் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்கள் தொடர்பான பாத்திரமேற்று நடித்தலை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 2**

சமூகக் காப்பில் பாடசாலைகள் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்கள் தொடர்பாகப் பாத்திரமேற்று நடித்தலை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 3**

சமூகக் காப்புக்குச் சமயத் தலங்கள் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்கள் தொடர்பாகப் பாத்திரமேற்று நடித்தலை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 4**

சமூகக் காப்புக்கு நீதிமன்றங்கள் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்கள் தொடர்பாகப் பாத்திரமேற்று நடித்தலை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 5**

சமூகக் காப்புக்குக் காவல்துறையும் முப்படையும் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்கள் தொடர்பாகப் பாத்திரமேற்று நடித்தலை முன்வைத்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

### 9.1.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சக வாழ்வு வாழும் பிரஜையாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- “சமூகக்காப்பை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள பொறிமுறைகள்”

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.3.1 இற்குரிய படம்
- இணைப்பு 9.1.3.2 இற்குரிய செயற்பாட்டுப் பத்திரம்
- A 4 கடதாசி
- மாக்கர் பேனைகள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.3.1**
- இணைப்பு 9.1.3.1. இற்குரிய படத்தை வகுப்பில் சமர்ப்பிக்கவும்.
- படத்தை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- படத்தினால் காட்டப்படுவன பற்றிய பகுப்பாய்வைச் செய்ய மாணவர் சிலருக்குச் சந்தர்ப்பம் வழங்கவும். பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடவும்.

> ☞ தேசியப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகச் செயற்படுதல் முப்படையினரின் பணியாகும்.
> ☞ முப்படையினரால் நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக பல்வேறு வழிவகைகள் எடுக்கப்படுகின்றன.
> ☞ நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்து நடத்திச் செல்லுதல் காவல்துறையின் பணியாகும்.
> ☞ காவல் துறையினரும் முப்படையினரும் வீதித்தடைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி வாகனங்களையும் பொதுமக்களையும் பரிசோதிப்பது பொதுமக்களின் பாதுகாப்புக் காகவாகும்.
> ☞ அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரசைகள் என்றவிதத்தில் நாம் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

(10 நிமிட்கள்)

**படி 9.1.3.2**

- ஏற்றவாறாக மாணவரைக் குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.1.3.2. இற்குரிய செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கவும்.
- குழுக்களுக்காக ஏ 4 கடதாசி, மாக்கர் பேனை என்பவற்றை வழங்கவும்.
- மாணவரைக் குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.
- குழுக்களிடையே நடமாடியவாறு மாணவருக்குத் தேவையான வழிகாட்டலை வழங்கவும்.

(15 நிமிட்கள்)

**படி 9.1.3.3**

- குழுக்களுக்குச் செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலோங்கும் விதமாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

| |
|---|
| ☞ இராணுவம், கடற்படை, விமானப்படை எனும் முப்படையினரால் நாட்டின் பாதுகாப்புக்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br>☞ அவ்வாறான சேவைகளை ஆற்றுவதற்காக முப்படையினரால் பெருமளவு அர்ப்பணிப்புகள் செய்யப்படுகின்றன.<br>☞ அவ்வாறான அர்ப்பணிப்புக்காகப் பொதுமக்கள் அவர்களுக்கு ஆதரவு நல்குகின்றனர்.<br>☞ பொதுமக்களுக்குச் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கும்போது காவல்துறையினரால் பெரும்பணி ஆற்றப்படுகின்றது.<br>☞ முப்படையினரும் உள்ளடங்கிய பாதுகாப்புப் பிரிவுகளின் செயல்வழிகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- சமூகக் காப்பினை உறுதி செய்வதற்காக முப்படையினர், காவல்துறை, சிவில் பாதுகாப்புப் படையணி போன்ற நிறுவனங்கள் பங்களிப்புச் செய்கின்றன என்று கூறுவார்.
- சமூகக் காப்பைக் கட்டியெழுப்புவதற்காக இந்நிறுவனங்கள் பணிகள் உரியவாறாக இடம்பெற வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வார்.
- பிரசையென்றவகையில் அந்நிறுவனங்கள் பொதுமக்களின் காப்பை ஏற்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்வதை ஏற்றுக்கொள்வார்.
- அவ்வாறான நிறுவனங்களால் சமூகக் காப்புக்காக மேற்கொள்ளப்படும் வழிவகைகளுக்கு ஒத்துழைப்புக் காட்டுவார்.
- குழுச் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகத் தயாரித்து முன்வைப்பார்.

**இணைப்பு 9.1.3.1**

காவல்துறை, முப்படையினரால் வீதித்தடைகளின்போது வாகனமொன்றை, பயணிகளைப் பரிசோதிக்கும் படம் ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**இணைப்பு 9.1.3.2**
**செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு 1**

சமூகக்காப்புக்கு இராணுவப்படையினர் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 2**

சமூகக்காப்புக்கு விமானப்படையினர் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 3**

சமூகக்காப்புக்கு கடற்படையினர் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 4**

சமூகக்காப்புக்குக் காவல்துறையினர் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 5**

சமூகக்காப்புக்கு சிவில் பாதுகாப்புப்படையினர் பங்களிப்புச் செய்யும் விதத்தைப் பற்றிய விடயங்களைச் சேகரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

## 9.1.4 செயற்பாடு

**தேர்ச்சி** :- கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சக வாழ்வு வாழும் பிரசையாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- "கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளை இனங்காண்போம்"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.4.1. இற்குரிய கூட்டுறவு இலச்சினை (தருவித்துக்கொள்க)
- இணைப்பு 9.1.4.2. இற்குரிய செயற்பாட்டுப்பத்திரம்
- ஏ 4 கடதாசி
- மாக்கர் பேனைகள்
- பிறிஸ்டல் அட்டை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.4.1**

- இணைப்பு 9.1.4.1 இல் குறிப்பிடப்பட்ட கூட்டுறவு இலச்சினையை முன்வைக்கவும்.
- மேற்படி படத்தினால் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடவும்.
- இது எதனை வெளிப்படுத்தும் இலச்சினை என்பதை மாணவரிடம் விசாரிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதமாகக் கலந்துரையாடலை நடத்தவும்.

> ☞ தனிநபர்களுக்கு தமது தேவைகளை ஆற்றிக்கொள்ளும் போது பல்வேறு முரண்பாடுகள் உள்ளன.
> ☞ அதனைத் தீர்ப்பதற்கு ஆதி காலத்திலிருந்து மனிதன் குழுவாகச் செயற்பட்டான்.
> ☞ நிகழ்காலத்தில் மனிதனின் தேவைகளை நிறைவேற்றும் போதும் முரண்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றான்.
> ☞ இவ்வாறான பலவித முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றல் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கிடைக்கிறது.

(10 நிமிடங்கள்)

**படி 9.1.4.2**

- இணைப்பு 9.1.4.1. இல் குறிப்பிடப்படும் செயற்பாட்டுப் பத்திரத்தை அவ்வந்த குழுக்களுக்கு வழங்கவும்.
- குழுச் செயற்பாட்டுக்காகப் போதுமான நேரத்தை வழங்கவும்.
- தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொடுக்கவும்.

(15 நிமிடங்கள்)

படி 9.1.4.3

- குழுக்களினால் சேகரிக்கப்படும் தகவல்களை வகுப்பில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பற்றிய கருத்துக்களை எடுத்துக்காட்டுவதற்கு குழுவின் ஏனைய மாணவருக்கு வாய்ப்பளிக்கவும்.
- அவ்வந்த குழுவினால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஏனைய குழுக்களுக்கு சந்தர்ப்பமளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடத்தவும்.

| |
|---|
| ☞ பாடசாலைக் கூட்டுறவு இயக்கங்களை நிறுவுவதால் பாடசாலை மாணவருக்குத் தேவையான காகிதாதிகளை மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.<br>☞ கூட்டுறவு இயக்கத்தினர் என்ற வகையில் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள பாடசாலைக் கூட்டுறவு இயக்கம் பங்களிப்புச் செய்கின்றது.<br>☞ அதனை விருத்தி செய்வதனால் பாடசாலைக் கூட்டுறவின் மூலம் மேலும் நலன்புரிச் சேவைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.<br>☞ தமது பகுதியில் "பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்' சமூக நலனுக்குரிய பல்வேறு சேவைகளை மேற்கொள்கின்றன.<br>☞ உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் கூட்டுறவு இயக்கத்தை நடத்திச் செல்லுதல் அதன் ஒரு சேவையாகும்.<br>☞ கடன் வழங்கும் சங்கங்களினால் உடன் பணத்தேவைகளுக்காக மிகக் குறைந்த வட்டிக்கு கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.<br>☞ கூட்டுறவு கிராம வங்கிகள் மூலம் சேமிப்பை நடத்திச் செல்லல், கடன் பெற்றுக் கொள்ளல், மின்சாரப் பட்டியல், நீர்ப்பட்டியல் போன்றவற்றைச் செலுத்தவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.<br>☞ அன்றாட வாழ்க்கையின் தேவைகளை ஆற்றுவதற்கு கூட்டுறவின் மூலம் பாரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளை விபரிப்பார்.
- கூட்டுறவு இயக்கம், சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு நிறுவனம் என்பதை மதித்தவாறு கருத்துக்களை வெளிப்படுத்துவார்.
- தனது தேவைகளை ஆற்றுவதற்காக கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகளை அட்டவணைப்படுத்துவார்.
- ஒற்றுமையாக குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- கூட்டுறவு இயக்கத்தின் பெறுமானத்தைப் பற்றி ஏனையோருக்கும் அறியச்செய்வார்.

**இணைப்பு 9.1.4.1**

**கூட்டுறவு இயக்க இலச்சினை**

உங்களுக்கு அயலிலுள்ள கூட்டுறவு இயக்க நிறுவனத்திற்குச் சென்று அதன் இலச்சினையை வரைந்து கொண்டு வரவும்.

**இணைப்பு 9.1.4.2**
**செயற்பாட்டுப் பத்திரம்**

| |
|---|
| குழு 1<br><br>உங்கள் பிரதேசத்தில் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றிய சிறு விளக்கமொன்றை முன்வைக்கவும். |
| குழு 2<br><br>உங்கள் பிரதேசத்தில் கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றிச் சுருக்கமாக விளக்கவும். |
| குழு 3<br><br>உங்கள் பிரதேசத்தில் கூட்டுறவு கிராமிய வங்கியினால் ஆற்றப்படும் சேவைகளைச் சுருக்கமாக விளக்கவும். |
| குழு 4<br><br>உங்கள் பிரதேசத்தின் விவசாய உற்பத்திகளுக்காக நிறுவப்பட்டுள்ள கூட்டுறவு சங்கத்தினால் ஆற்றப்படும் சேவைகள் பறறிய விபரங்களை முன்வைக்கவும். |
| குழு 5<br><br>உங்கள் பாடசாலையில்/ அயலில் உள்ள பாடசாலைக் கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றிய விபரங்களை முன்வைக்கவும். |

## 9.1.5 செயற்பாடு

**தேர்ச்சி** :- கூட்டான செயற்பாடுகளின் ஊடாக சமூகப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு செயல்ரீதியில் பங்களிப்புச் செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சக வாழ்வு வாழும் பிரஜையாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- "கூட்டுறவு இயக்கத்தினால் ஆற்றப்படும் சேவையை இனங்காண்போம்"

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.1.5.1 இற்குரிய கூட்டுறவு இயக்கப்பாடல்
- இணைப்பு 9.1.5.2. இற்குரிய செயற்பாட்டுப் பத்திரம்
- ஏ 4 கடதாசி, மாக்கர் பேனைகள்
- பிறிஸ்டல் அட்டை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.1.5.1**

- இணைப்பு 9.1.5.1 இற்குரிய கூட்டுறவு இயக்கப் பாடலை வகுப்பிலுள்ள அனைவரும் ஒன்றுசேர்ந்து இசைக்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாக கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும்.

> ☞ கூட்டுறவு இயக்கமானது "ஒருவர் பலருக்கும் - பலர் ஒருவருக்கும் " எனும் மகுடவாசகத்தை அடிப்படையாகக்கொண்டு செயற்படுகின்றது.
> ☞ தனிநபர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒற்றுமையாக தொழிற்படும் பெறுமானத்தை விளங்கிக் கொண்டுள்ளனர்.
> ☞ ஒற்றுமையாகத் தொழிற்படுவதன் மூலம் கூட்டுறவு எனப்படும் எண்ணக்கரு உருவாக்கதிற்கு தேவையான அடிப்படை கட்டியெழுப்பப்படுகின்றது.
> ☞ சமத்துவ எண்ணக்கருவைக் காப்பதன் மூலம் கூட்டுறவை முன்னெடுத்துச் செல்லலாம்.

(10 நிமிடங்கள்)

**படி 9.1.5.2**

- வகுப்பிலுள்ள மாணவரை ஏற்றவாறு குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.1.5.2 இற்குரிய செயற்பாட்டுப் பத்திரத்தை குழுக்களிடையே பகிரவும்.
- குழுவிலுள்ள மாணவர்க்குத் தேவையான அறிவுரைகளை வழங்கியவாறு செயற்பாட்டுக்குத் தேவையான விடயங்களைத் திரட்ட வழிகாட்டவும்.
- குழுவினுள் சுயவிருப்பத்துடன் தலைவர் ஒருவர் முன்வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கி, அவரைக் கொண்டு 03 நிமிடங்கள் தந்து குழுவினால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை பேச்சுப்போட்டியின் தோரணையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் அளிக்கவும்.
- பின்வரும் விடயங்களை மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடத்தவும்.

(15 நிமிடங்கள்)

- ☞ கூட்டுறவு இயக்கமானது தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் முக்கிய ஊடகமாகும்.
- ☞ கூட்டுறவு இயக்கமானது மனிதவாழ்வின் இன்றியமையாத அங்கமாக மாறியுள்ளது.
- ☞ அன்றாடத் தேவைகளை நிறைவேற்றும்போது இலாபமீட்டும் நோக்கத்தை விடுத்து கூட்டுறவு இயக்கம் செயற்படுவதால் இது பொதுமக்கள் நேய அமைப்பாக உள்ளது.
- ☞ கூட்டுறவுடன் மிகவும் ஒன்றிணைந்து எமது வாழ்வை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- கூட்டுறவு இயக்கத்தின் தோற்றத்தையும் நோக்கங்களையும் விளக்குவார்.
- தனிநபர் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு கூட்டுறவு இயக்கத்தினால் பெரும் பங்களிப்பு வழங்கப்படுவதைக் கூறுவார்.
- கூட்டுறவு இயக்கத்தின் பெறுமானத்தை விளக்கியவாறு அதனால் ஆற்றப்படும் சேவைகளை மதிப்பார்.
- குழு உணர்வுடன் உரியவாறு நேரத்தை முகாமைத்துவம் செய்ய முயற்சிப்பார்.
- தனது வாழ்வை கூட்டுறவு இயக்கத்துடன் இணைத்துக்கொள்ள முயலுவார்.

**இணைப்பு 9.1.5.1**

**கூட்டுறவு இயக்கப்பாடல்**

**(பாடலைத்தருவித்துக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.)**

**இணைப்பு 9.1.5.2**

**செயற்பாட்டுப் பத்திரம்**

**குழு 1**

கூட்டுறவு இயக்கத்தின் தோற்றமும் அதன் குறிக்கோள்களும் பற்றிய உரையொன்றை முன்வைப்பதே உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 2**

கூட்டுறவு இயக்கத்தின் தோற்றமும் அதன் குறிக்கோள்களும் பற்றிய உரையொன்றை ஆற்றல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 3**

'கூட்டுறவுச் சங்கவகைகளும் அவற்றை அமைத்துக்கொள்ளும் விதமும் " என்பது பற்றிய உரையொன்றை ஆற்றல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 4**

'பாடசாலைக் கூட்டுறவு இயக்கத்திலிருந்து பெறப்படும் சேவைகள்' என்பது பற்றிய உரையொன்றை ஆற்றல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

**குழு 5**

கூட்டுறவு சங்கத்தினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றிய உரையொன்றை ஆற்றல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

## 9.2 சமகால சமூகமாற்றம் பாடவேளை - 08

## அறிமுகம்

இன்றைய நவீன தொழினுட்பப் பொருளாதாரத்தில் உற்பத்தி, விநியோகம், வர்த்தகம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. தொழினுட்ப செல்வாக்கினால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இம்மாற்றம் தொழில்துறையிலும் பல்வேறு விதத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

தொழினுட்பத்தில் ஏற்பட்ட துரித முன்னேற்றம் சமூக மாற்றத்திலும் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இத்துரித தொழினுட்ப முன்னேற்றம் சமூகத்தில் நன்மைகளைப்போலவே தீமைகளையும் ஏற்படுத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்நவீன தொழினுட்பமானது சமூகத்தில் நன்மைகள் ஏற்படுவதற்குத் தடையான விடயங்களில் ஈர்க்கப்படும் சமூகத்தை உருவாக்குவதில் வெற்றி கொண்டுள்ளது.

தொழினுட்ப முன்னேற்றம் பெரும் சமூக மாற்றத்துக்கும் காரணமாக உள்ளது. ஆக்கத் திறனுள்ள பிரஜைகள் என்றவகையில் தொழினுட்பத்தை சமூக பொருளாதார முன்னேற்றத்தக்குப் பயன்படுத்துவதற்கும் தொழினுட்பம் மூலம் சமூக முன்னேற்றத்துக்குத் தடையான பாதகமான செல்வாக்குகளை இழிவளவாக்குவதற்கும் தேவையான அறிவு, மனப்பாங்கு, திறன் விருத்திக்கு உரிய சந்தர்ப்பங்களை வழங்குதலே இந்த அலகைக் கற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி :**

சமூக நன்மை மீது, பங்களிக்கும் தொழினுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்:**

- சமகால மாற்றங்களுக் கூடாக தனியாள், சமூக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மாற்றங்களை நுணுகியாய்வார்.
- பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.
- புதிய தொழிற்சந்தைக்குப் பொருத்தமான வகையில் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அறிந்து அவற்றை விருத்தி செய்து கொள்வார்.

## பாட உள்ளடக்கம்

### 9.2.1 தொழினுட்ப மாற்றங்களும் அவற்றினால் வெளிப்படும் துலங்கல்களின் முக்கியத்துவமும் தொழினுட்பம் அறிமுகம்

- மனிதன் தனது நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்காகப் பின்பற்றும் முறையியல்.
- இம்முறையியல்கள் சமகாலத்தில் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதுடன் மேலும் மாற்றங்களுக்கு உட்படக்கூடியவை.

*உதாரணம்:*

வேட்டையாடும் காலத்தில் கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மனிதன் பிற்காலத்தில் முன்னேற்றமடைந்த நவீன கருவிகளைப் பயன்படுத்தல்.
மீன்பிடித்தொழிலில் தூண்டில் போட்டு மீன்பிடித்தவர்கள் அண்மைக் காலங்களில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தல்.

**தொழினுட்ப மாற்றங்கள்**

- நவீன விஞ்ஞான முன்னேற்றம், மனிதனின் புதிய கண்டுபிடிப்புகள் என்பவற்றின் அடிப்படையில் தொழினுட்பம் வளம் பெற்றுள்ளது. உதாரணம்: விண்வெளி ஆய்வுகள், கணனிப்பயன்பாடு, இணையத்தள வசதிகள்.
- சனத்தொகை அதிகரிப்புடன் அதிகரித்த தேவைகளை நிறைவேற்றுவதற்கு வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தும்போது தொழினுட்பம் புதிய போக்கினைப் பெறுதல். இது விவசாயம், கைத்தொழில், சேவை ஆகிய அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

*உதாரணம்:*

| | | |
|---|---|---|
| விவசாயம் | - | மனித உழைப்பு, விலங்குகள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தல். |
| கைத்தொழில் | - | மனித உழைப்பைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயந்திரப் பொறிகள் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| சேவை | - | செய்திப் பரிமாற்றத்துக்கு மின்னஞ்சல் பயன்படுத்தல். |

**தேடியறிதல், ஆய்வு என்பவற்றின் வரைவிலக்கணங்கள்**

**தேடியறிதல்** - நிகழ்நிலைச் செயன்முறை அல்லது கோட்பாடுகளைத் தேடியறிதல்.

**ஆய்வு** - விஞ்ஞான முறையியலைப் பின்பற்றி விருத்தி செய்யப்படும் பரிசோதனை.

*உதாரணம்:*

இலங்கையில் பாடசாலை மாணவர் ஒருவர் துணி உலர வைப்பதற்கான புதிய பொறி ஒன்றினை உற்பத்தி செய்தல். நீரினால் கழுவப்பட்ட துணியை சூரிய வெளிச்சம் உள்ள நேரத்தில் உலரவைப்பதற்கும் மழைபெய்யும் நேரத்தில் மூடுகையுள்ள இடத்திற்குத் தானாகவே பயணிக்கக் கூடியதுமான தயாரிப்பு ஆய்வு செய்தலின் விளைவாகும். பொறியைத் தற்காலத்துக்குப் பொருத்தமான விதத்தில் நவீனமயப்படுத்திப் பயன்படுத்தல் தேடியறிதலின் விளைவாகும். தேடியறிதல் மூலம் கண்டறியப்பட்ட தகவல்கள் சமகாலத்துக்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துதல்.

உதாரணம்: நோயைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் வைத்திய முறைகளை சமகாலத்துக்குப் பொருந்தும் விதத்தில் ஒழுங்குபடுத்தல்.

**தொழினுட்ப மாற்றத்துடன் ஏற்படும் சமூக மாற்றங்கள்:**

பல்வேறு துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தியது.

- வாழ்க்கைமுறை மாற்றம்
- நுகர்வுக்கோலம் மீதான வாழ்க்கைநிலை மாற்றம்
- புதிய தொழில் துறைகளின் தோற்றம்
- போக்குவரத்து முறைகள்
- தொடர்பாடல்
- ஆடை அணிகள்
- எண்ணங்கள்
- உணவுப் பானங்கள் தயாரிக்கும் முறை
- மருத்துவ சிகிச்சை முறை
- சமூகத் தொடர்புகளை ஏற்படுத்தல்

**உதாரணம்**

- உணவு தயாரிப்பதில் பல்வேறு தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல்.
- பழைய பாரம்பரிய முறைகள் அற்றுப்போதல்.
- மேலைத்தேய மருத்துவ முறை வருகையினால் அம்முறையில் பெருமளவு சார்ந்திருத்தல்.
- பொழுதுபோக்குகளில் புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.
- வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம்.
- சமூகத் தொடர்புகள் துரிதமாதலும் விரிவடைதலும்.
- போக்குவரத்துக்காகப் பல்வேறுமுறைகள், கையடக்கத் தொலைபேசிப் பாவனை

**ஆக்கத்திறனுடைய பிரஜை என்ற ரீதியில் தொழினுட்ப மாற்றங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.**

- அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்க தொழிநுட்பத்தைப் பொருத்தமானவாறு பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.

  *உதாரணம் :* வீடுகள்
  போக்குவரத்து
  தொடர்பாடல் அறிவைப் பெறுதல்

- புதிய உற்பத்திகளை ஆக்குவதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்.
- சமூக நன்மைக்குத் தேவையான உற்பத்திகளை ஆக்குவதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- உற்பத்தியின் விளைதிறனையும் வினைத்திறனையும் மேலும் உயர்த்துவதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்ததல்.
- சமூகத் தொடர்புகளை இலகுவாகவும் விரைவாகவும் ஏற்படுத்துவதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- தொழினுட்பங்களைப் பயன்படுத்தும்போது நுணுகி ஆராய்ந்து, அவற்றைத் தமக்கும் பிறருக்கும் நன்மைகளை அளிக்கும் விதத்தில் ஒழுங்குபடுத்துதல்.

**தொழினுட்பம் மக்கள் வாழ்க்கைக்குச் சாதகமான மற்றும் பாதகமான விதத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதம்.**

தினந்தோறும் இடம்பெறும் தொழினுட்ப முன்னேற்றத்தினால் பல்வேறு துறைகளும் முன்னேறிச் செல்லும்போது மக்கள் வாழ்க்கையும் பல்வேறு விதங்களிலும் செல்வாக்குக்கு உட்படுத்தப்படுகின்றது. இதனால் சமூகத்துக்கு சாதகமானவை போலவே பாதகமான விளைவுகளும் ஏற்பட்டுள்ளன. தொழினுட்ப மாற்றத்தை உரிய விதத்தில் இனங்கண்டு தமது வாழ்க்கையைச் சிறப்புடன் நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நல்ல பிரஜை ஒருவரின் கடமையாகும்.

**தொழினுட்ப மாற்றங்கள் சாதகமான விதத்தில் செல்வாக்குச் செலுத்தும் சந்தர்ப்பங்கள்.**

- அன்றாடப் பணிகளை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக இருத்தல்.
- தனிநபர்களுக்கிடையிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்புகள் விருத்தியடைதல்.
- நேரத்தை மீதப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
- பல்வேறு தொழில் வாய்ப்புகள் ஏற்படுதல்.
- நாளாந்தம் வளரும் புத்தறிவைப் பெறும் திறந்த வழிகள் ஏற்படுதல்.
- உற்பத்தியும் விநியோகமும் இலகுவாதல்.
- முழுஉலகமும் உலகக் கிராமமாக மாறுதல்.

**பாதகமான செல்வாக்கைச் செலுத்திய சந்தர்ப்பங்கள்**

- வாழ்க்கைக் கோலங்கள் மாற்றமடைதலினால் உடனலத்துக்கு அச்சறுத்தல் ஏற்படுதல்.
- பயங்கரவாதம், போர்க்கருவிகள் உற்பத்தி, குற்றங்கள் திட்டமிடப்படல், ஊழல், துஷ்பிரயோகம், என்பன நாளுக்கு நாள் அதிகரித்தல்.
- தொழினுட்பக் கருவிகளோடு பொழுதுபோக்குவதற்குத் தூண்டப்படுவதால் தனியாள்களுக்கு இடையிலான தொடர்பு, குடும்பத்துக்கிடையிலான பிணைப்பு நலிவடைதல்.
- சூழல் மாசடைதல் அதிகரித்தல், நிலைத்திருக்கும் அபிவிருத்திக்குத் தடை ஏற்படல்.
- ஓய்வு, பொழுபோக்கு என்பவற்றுக்காகத் தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதால் சமூகப்பிரச்சினைகள் ஏற்படுதல்.

### 9.2.2 பொருளாதார மாற்றங்கள்

மனித தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. பல்வேறு வளங்களைக் கொண்டு தொழினுட்பத்தைப் பயன்படுத்தி, உற்பத்தியாக்கப்படுவன வினைத்திறனுடன் நுகர்வாளரிடம் விநியோகிக்கப்படுதல் வேண்டும். விநியோகிக்கப்பட்ட பின் சந்தைகளின் மூலம் விற்பனை செய்யப்படுவது வியாபாரம் எனப்படும். இதற்கேற்ப பொருளாதாரத்தில் உற்பத்தி விநியோகம், வியாபாரம் ஆகிய அனைத்துப் பிரிவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன் மேலும் மாற்றத்துக்குள்ளாகியும் வருகின்றன.

**உற்பத்தி**

விவசாயம், கைத்தொழில் சேவை அனைத்துப் பிரிவுகளிலும் உற்பத்தி இடம் பெறுகின்றது.

**விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

- விருத்தி செய்யப்பட்ட புதிய விதைவகைகளை அறிமுகம் செய்தல்.
- மரபணு தொழினுட்பம் பயன்படுத்துதல்.
- புதிய பயிர்ச்செய்கைமுறையைப் பயன்படுத்தல்.
- இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்தல்.
- நுகர்வுக்கான தயாரிக்கப்பட்ட உணவுவகைகளின் உற்பத்தி.
- உடன் உணவு.
- உற்பத்திகளைப் பல்வகைப்படுத்தல்.

  *உதாரணம்:*
  தேயிலை உற்பத்தியில் உடன் தேயிலை, சுவையூட்டிய தேயிலை,
  பசுந்தேயிலை (Green Tea)
  மீன்பிடித் தொழிலில் வசதிகள் நிறைந்த பாரிய படகுகள் பயன்படுத்துதல், மீன்பிடிக்கும் முறைகள், கருவிகள், நீண்ட காலம் பேணும் முறைகள் என்பனவற்றிலான மாற்றங்கள்.
- பழைய காலந்தொட்டு வீட்டில் வளர்க்கும் பிராணிகளில் மாற்றமில்லாதிருப்பினும் தொழினுட்பப் பயன்பாட்டினால் விலங்குகளிலிருந்து பெறும் பயன்பாடுகள் மாற்றமடைதல்.

  *உதாரணம்:*
  இறைச்சிக்காக புறொயிலர் கோழி வளர்த்தல், அதிக பாலைப் பெறுவதற்காக விருத்தி செய்யப்பட்ட பசுக்கள்.

**கைத்தொழில் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

- மனிதர்களின் கைகளால் செய்யப்பட்டவற்றுக்கு இயந்திரங்கள், ரோபோ தொழினுட்பம் என்பன பயன்படுத்தப்படல். உதாரணம்: துணி உற்பத்தி, வாகன உற்பத்தி.
- வேலைப்பகிர்வும் சிறப்புத் தேர்ச்சியும் (நிபுணத்துவம்)
  *உதாரணம்:* பிரதேச சிறப்புத் தேர்ச்சி (நிபுணத்துவம்), சர்வதேச சிறப்புத் தேர்ச்சி
- பொருத்தும் கைத்தொழில்கள் தோன்றுதல்.
- கைத்தொழில் உற்பத்தியில் புதிய துணைப்பாகங்கள் உற்பத்தி செய்தல்.
  *உதாரணம்:* அளவு, வடிவம், இலகுதன்மை என்பவற்றுக்கேற்ப மாற்றங்களுடன் இயந்திரங்கள், வாகனங்கள், இலத்திரனியல் கருவிகள் என்பன.
- பல்வேறு தேடியறிதல், ஆய்வு என்பனவற்றுக்காக தேவையான இயந்திரங்கள், துணைப்பாகங்கள் உற்பத்தி செய்தல்.
  *உதாரணம்*: செய்மதி, விண்வெளி கலங்கள், நீர்முழ்கிக் கப்பல்கள் ஆகியன.

- விவசாயம், சேவை ஆகியவற்றின் முன்னேற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் இயந்திரங்கள், கருவிகள் என்பனவற்றின் உற்பத்தி.
  *உதாரணம்:* அறுவடை செய்யும் இயந்திரம்
  கணினி மருத்துவ உபகரணங்கள்

**சேவைத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

- கல்வித்துறையில் இணையத்தளம் மூலம் கல்வி வசதிகளைப் பெறுதல்.
  (E - Learning) (M – Learning)
- சுகாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.
  *உதாரணம் :* மருத்துவ நிபுணர்கள் சேவை பெறுவதற்கு இணையத்தள வசதிகள்
  (E – Medicine_)
- வங்கி நடவடிக்கைகளுக்கு அட்டைகள் பயன்படுத்துதல்.
  *உதாரணம் :* பணம் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 'ரொலர்' பொறி மூலம் அட்டைகளைப் பயன்படுத்தி பணத்தைப் பெறுதல்.
- விநியோகம் தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள்.
- பொருட்களை வாங்குதல், கண்ணால் நேராகப் பார்ப்பதின்றி இணையத்தளம் ஊடாக நிகழ்தல்.
- கொடுக்கல் வாங்கல்களுக்காக அட்டைகளைப் பயன்படுத்துதல்.
  *உதாரணம் :* கடன் அட்டை (Credit Card)
- பொருள்களுக்கு அனுப்பாணை அனுப்புதல், இணையத்தளம், தொலைநகல் (Fax) (Talex) முறைகளைப் பயன்படுத்தல்.
- வினைத்திறனுடைய பாதுகாப்பான முறையைப் பயன்படுத்தல்.
  *உதாரணம் :* கொள்கலன் பயன்படுத்தல், குளிரூட்டி வசதிகளுடனான போக்குவரத்து பெருமளவு பொருள்களைக் கொண்டு செல்லக்கூடிய வாகனங்களைப் பயன்படுத்தல்.
- குடல், வான், இரயில் போக்குவரத்து முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் (Sea Plane)
  *உதாரணம் :* விமானக்கப்பலும் பஸ்ஸும் அனைத்து வசதிகளும் கொண்ட கப்பல், மின்ரயில்கள், கொள்கலன் துறைமுகங்கள், கம்பிகள் ஊடான பகிர்வு.
  *உதாரணம் :* தொலைபேசி, மின்சாரம்.
- ஊள்ளகக் குழாய்கள் மூலம் விநியோகம்.
  *உதாரணம் :* நீர், எண்ணெய், வாயு.
- விநியோகத்துக்காக கட்புல, செவிப்புல ஊடகங்களின் பிரசார நடவடிக்கைகளின் செல்வாக்கு.
- பல்தேசிய கம்பனிகளின், பிரதிநிதித்துவ நிறுவனங்களின் தலையீடு.

**வியாபாரம் தொடர்பான மாற்றங்கள்**

- மீயுயர் சந்தைகள் மூலம் பொருள் விற்பனை. (Super Market)
- வர்த்தக நிறுவனங்கள் சந்தைகளுக்கு பொருள் இருப்பினை ஒப்படைத்தல்.
- பொருள்களின் அனுப்பாணைக்குப் புதிய முறைகளைப் பயன்படுத்தி நுகர்வாளரிடம் ஒப்படைத்தல்.
  *உதாரணம் :* இணையத்தளம், தொலைபேசி, மின்னஞ்சல்.
- கொடுப்பனவுகளுக்கு அட்டைகளைப் பயன்படுத்தல்.
  *உதாரணம் :* கடன் அட்டை (Creadit Card) பற்று அட்டைகள் (Debit Card)
- போட்டி பிரசார முறைகளைப் பயன்படுத்தல் அதற்காக வேறு நிறுவகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- கொள்வனவு செய்வதற்கு இலகுவான அளவில் மனங்கவரும் விதத்திலான நடத்தை.

### 9.2.3 தொழிற்சந்தைகளும் அதனோடு இணைந்த புதிய போக்குகளும்

பொருள்கள், சேவைகள் என்பவற்றின் உற்பத்தியை விரிவாக்குதல். இதனோடு விநியோகம், வியாபாரம் ஆகிய துறைகளை விருத்தி செய்தல், பாரம்பரிய துறைகளில் தொழினுட்பம் காரணமாக வேலை வாய்ப்புகள் ஏற்படுதல் துரிதமடைந்தன. இதுபோல திறந்த பொருளாதாரம் காரணமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன. விவசாயம், கைத்தொழில் சேவை ஆகிய சகல துறைகளிலும் இப்போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது.

விவசாயத்துறையிலும் அதனோடு இணைந்த தொழில்களிலும் புதிய போக்கு வாழ்க்கை மட்டத்தில் நிலவிய விவசாயக் கோலத்திலிருந்து விலகி கைத்தொழில் துறைக்கு மூலப்பொருட்களை வழங்குவதாக உள்ளது.

*உதாரணம் :* - உணவை நீண்ட காலத்துக்குப் பேணுதல்.
- பால்சார்ந்த பல்வேறு உற்பத்திகள்
- பால் பைக்கற்று, யோகட், சுவையூட்டப்பட்ட பால் ஆகியன.
- விவசாய ஏற்றுமதியின் பல்வகைமை
- சுயதொழில் சந்தர்ப்பங்கள்.

*உதாரணம் :* - விலங்கு வேளாண்மை நடவடிக்கை, நாற்று மேடை
- உணவு பானங்கள் தயாரித்தல்.
- பூஞ்செடி வளர்ப்பு.
- விவசாய ஆய்வு தொடர்பிலான வேலை வாய்ப்புகள்.

கைத்தொழில் துறையிலும் அதனோடு இணைந்த தொழில்களிலும் புதிய போக்குகள்.
கைத்தொழில்துறையில் கணனிப் பயன்பாடு விரிவடைந்ததால் அது தொடர்பான வேலை வாய்ப்புகள் விரிவடைதல்.
*உதாரணம் :* கணனித் தரவுகள் பதிதல்.

வெளிநாட்டு சந்தைகளை முதன்மையாகக் கொண்ட தனியார்துறை வேலைவாய்ப்புகள் தோன்றுதல். சுதந்திர வர்த்தக வலயம், ஏற்றுமதிக் கிராமங்கள், கைத்தொழில் பேட்டைகள், கைத்தொழில் குடியிருப்புகள், கைத்தொழில் பூங்காக்கள் ஆகியன.

*உதாரணம் :* - ஆளணி முகாமையாளர்
- விலங்கு வேளாண்மை அலுவலர்
- தொழில் மேற்பார்வையாளர், ஜுகி இயந்திரம், இயக்குநர் ஆகிய தொழில் வாய்ப்புகள்.

**சேவைத்துறையிலும் அதனோடு இணைந்தவற்றிலுமான புதியபோக்கு.**

*உதாரணம் :* - தனியார் வங்கி முறைகள் பரம்பல்
- காப்புறுதி நிறுவனங்கள் விரிவடைதல்.
- துறைமுகம், விமான நிலையங்கள் வசதிகள் விரிவாக்கம்.
- மருத்துவ சேவையில் ஏற்பட்ட விரிவு.

தொடர்பாடலும் விளம்பரங்களும் கல்வித்துறையில் ஏற்பட்ட மாற்றங்களும் சர்வதேச பாடசாலைகள் தோன்றுதலும். உல்லாசப் பயணத்துறை விரிவாக்கம் தனியார் போக்குவரத்து சேவைகள் விரிவடைதல் ஆகிய சகல துறைகளிலும் வேலை சந்தைகள் பரவலுடன் வேலைவாய்ப்புகள் தோன்றும் போக்குகள்.

### 9.2.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- சமூக நன்மை மீது, பங்களிக்கும் தொழினுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- சமகால மாற்றங்களுக் கூடாக தனியாள், சமூக அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மாற்றங்களை விசாரணை நுணுகியாய்வார்.

**செயற்பாடு** :- அன்றைய மற்றும் இன்றைய தொழினுட்பத்தை இனங்காண்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.2.1.1 கல்லாயுதங்களைக் காட்டும் உருக்கள்.
- இணைப்பு 9.2.1.2 உரிய செயற்பாட்டுப்பத்திரம்
- டிமை கடதாசி
- மாக்கர் பேனை (Marker Pen)
- பென்சில்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.1.1**

- இணைப்பு 9.2.1.1 இற்குரிய உருக்களை வகுப்பறையில் முன்வைக்குக.
- வகுப்பு மாணவர்களுக்கு உருக்களை அவதானிக்கப் போதிய நேர அளவினை வழங்குக.
- உருக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆயுத வகைகள் அவற்றினால் பெறும் பயன்கள், மனிதர்களின் கண்டுபிடிப்புகள், பரீட்சித்துப் பார்த்தல் மூலம் புதியவற்றைக் கண்டுபிடித்தல் என்பன பற்றி மாணவர்கள் அனைவரும் பங்குபற்றும் விதத்தில் குறுகிய கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்துக.

> ☞ மிகப் பழைய காலந்தொட்டு மனிதன் தனது தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக்கொள்வதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
> ☞ இலகுவில் தற்போது பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
> ☞ கைத்தொழில், விஞ்ஞானம் என்பவற்றின் விளைவாக புதிய தொழினுட்பக் கண்டுபிடிப்புகள் தோன்றுதல்.
> ☞ பல்வேறு தேடியறிதல் ஆய்வு என்பவற்றின் விவைாக புதிய தொழினுட்பக் கண்டுபிடிப்புகள் தோன்றுதல்.
> ☞ தொழினுட்ப மாற்றங்களுடன் வாழ்க்கை முறை நுகர்வுக்கோலம் மாற்றங்கள், புதிய தொழில்கள் தோன்றுதல், நகராக்கம் ஆகிய துறைகளின் மாற்றங்களினால் சமூக மாற்றங்கள் ஏற்படுதல்.

(10 நிமிடங்கள்)

**படி 9.2.1.2**

- வகுப்பினைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 9.2.1.2 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்குக.
- செயற்பாட்டுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பணியில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குக.
- அறிக்கை தயாரிப்பதற்குப் போதுமான கால எல்லையை வழங்குக.

(40 நிமிடம்)

**படி 9.2.1.3**

- ஒவ்வொரு குழுவும் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குக.
- ஒவ்வோர் குழுவும் முன்வைத்த தகவல்கள் பற்றிக் கருத்துக்களை கூறுவதற்கு ஏனைய குழுக்களுக்கும் வாய்ப்புகள் வழங்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

> ☞ முற்காலத்தில் நாளாந்த நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்தியமை.
> ☞ தற்போது பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல்.
> ☞ ஆய்வு, தேடியறிதல் என்பவற்றின் விளைவாக நவீன தொழினுட்பக் கருவிகள் உருவாக்கப்படுதல்.
> ☞ தொழினுட்பத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தனியாள் மற்றும் சமூக வாழ்வின் பல்வேறு பிரிவுகளிலும் மாற்றமேற்படக் காரணமாதல்.
> உதாரணம் : வாழ்க்கை முறை மாறுதல்
> நுகர்வுக் கோலம் மாறுதல்
> நகராக்கம்
> புதிய தொழில் வாய்ப்புகள் தோன்றுதல்.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தொழினுட்ப மாற்றம் பற்றி விவரிப்பார்.
- தொழினுட்பத்தைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தி அன்றாட நடவடிக்கைகளை இலகுவாக்கலாம் என்ற கருத்தை வெளியிடுவார்.
- அன்றாட நடவக்கைகள் தொடர்பில் பொருத்தமான விதத்தில் தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவார்.
- குழுவினுள்ளே ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- குழுவிலே தலைமைத்துவத்துக்கு மதிப்பு அளிப்பார்.

**பின்தொடர் வேலை**

- வீட்டுக் கருமங்களை இலகுபடுத்துவதற்காகக் கையாளப்படும் கருவிகளின் படங்களை சேகரிக்குக.
- ஒவ்வோர் கருவியையும் பயன்படுத்துவதனால் பெறும் பயன்கள் பற்றிப் பட்டிற்படுத்துக.
- நவீன ஆய்வுகளின் விளைவுகளினால் ஏற்பட்ட ஆக்கங்கள் சிலவற்றின் தகவல்களைத் திரட்டுக.

**இணைப்பு 9.2.1.1**





**இணைப்பு 9.2.1.2**

**குழு 01**

- ☞ வீட்டு கருமங்களை நிறைவேற்றுவதற்காக முற்காலத்தில் பயன்படுத்திய கருவிகளையும் தற்போது பயன்படுத்தப்படும் கருவிகளையும் வெவ்வேறாக அட்டவணைப்படுத்திக் காட்டுக.
- ☞ தற்போது பயன்படுத்தப்படும் கருவிகளினால் பெறக்கூடிய நன்மைகள் அல்லது சாதகமான பலன்களை முன்வைக்குக.

**குழு 02**

- ☞ நெற்பயிர்ச் செய்கைக்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட முறைகள், கருவிகள் என்பன பற்றியும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகள், கருவிகள் என்பன பற்றியும் ஆக்கபூர்வமாக தகவல்களை முன்வைக்குக.
- ☞ நவீன தொழினுட்ப முறைகள், கருவிகள் என்பனவற்றை நெற்பயிர்ச்செய்கையில் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மையான பலன்களை முன்வைக்குக.

**குழு 03**

- ☞ முற்காலத்தில் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளையும் கருவிகளையும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் கருவிகளையும் உபகரணங்களையும் ஆக்கபூர்வமாக முன்வைக்குக.
- ☞ நவீன முறைகள், கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், சாதகமான பலன்களை முன்வைக்குக.

**குழு 04**

- ☞ முற்காலத்தில் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட்ட முறைகள், உபகரணங்கள் என்பன பற்றியும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகள், கருவிகள் என்பன பற்றியும் ஆக்கபூர்வமாக முன்வைக்குக.
- ☞ நவீன முறைகள், உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள், சாதகமான விளைவுகள் பற்றிக் குறிப்பிடுக.

## 9.2.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- சமூக நன்மை மீது, பங்களிக்கும் தொழினுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.

**செயற்பாடு** :- தொழினுட்பத்தினால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தேடி அறிவோம்

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.2.2.1 தொழினுட்பக் கருவிகள், உற்பத்திகள் அடங்கிய படங்கள்
- இணைப்பு 9.2.2.2 இற்கு உரிய செயற்பாட்டுப்பத்திரம்
- டிமை கடதாசி
- மாக்கர் பேனை (Marker Pen)
- பென்சில்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.2.1**
- இணைப்பு 9.2.2.1 இற்குரிய உருக்களை வகுப்பறையில் முன்வைக்குக.
- வகுப்பு மாணவர்களுக்கு உருக்களை அவதானிக்கப் போதிய நேர அளவினை வழங்குக.
- அதில் காட்டப்படுவன யாவை? அந்த கருவிகள் அல்லது உற்பத்திகள் எந்த துறை பிரிவுகளுக்கு உரியன? அவற்றினால் பெறும் பயன்கள் யாவை? என்னும் வினாக்களுக்கு விடைகளைப் பெற்றுக்கொள்க.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடுக.

☞ மனிதர்களின் விருப்புகள், தேவைகள் என்பனவற்றுக்காக விவசாயம், கைத்தொழில் சேவை என்னும் துறைகளில் உற்பத்தி நடைபெறுகின்றமை.
☞ உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விநியோகம் செய்வதிலும் மாற்றங்கள் நிகழ்ந்தமை.
☞ வியாபாரத்தில் ஏற்பட்ட தொழினுட்ப மாற்றங்கள் மக்கள் வாழ்க்கையிலும் செல்வாக்கு ஏற்படுத்தியமை.

(10 நிமிடங்கள்)

**படி 9.2.2.2**

- மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப சிறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 9.2.2.2 இற்கு உரிய செயற்பாட்டுப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்குகள.
- குழுக்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குக.
- உரிய செயற்பாட்டைப் பூரணப்படுத்துவதற்குப் போதுமான கால எல்லையை வழங்குக.
- குழுக்களில் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்கத் தயார்ப்படுத்துக.

(30 நிமிடங்கள்)

**படி 9.2.2.3**

- குழுக்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- குழுக்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கு இடமளிக்குக.
- மாணவர்களின் இயலுமைகளுக்கு (Strength) மதிப்பளிக்குக. அபிவிருத்தி ஏற்பட வேண்டிய இடங்களை எடுத்துக் காட்டுக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுக.

☞ தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதால் விவசாயத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை.
☞ குறுகிய காலத்தில் அதிக அறுவடை பெறக்கூடிய விதை வகைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை.
☞ நுகர்வுக்காக தயாரிக்கப்பட்ட உணவுகள், உடன் உணவுகள் என்பன அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை.
☞ மீன்பிடித் தொழிலில் நவீன படகுகள், மீன்பிடித்தலில் புதிய முறைகள், நீண்டகாலம் பேணுதலில் புதிய முறைகள் பயன்படுத்தல் ஆகியன.
☞ கூடுதல் வினைத்திறன் மிக்க எளிமைப் பண்புடைய பல்வேறு கைத்தொழில் உற்பத்திகள் உருவாக்கப்பட்டுள்ளமை.
☞ இணையத்தளம், தொலைபேசி ஆகிய நவீன முறைகளினால் கல்வி, சுகாதாரம், வங்கிச் சேவைகள் என்பவற்றின் நடவடிக்கைகள் இலகுவாக்கப்பட்டுள்ளமை.
☞ விநியோகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மக்கள் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தியுள்ளமை.
உதாரணம் :
- இணையத்தளம் ஊடாகக் கொடுக்கல் வாங்கல்.
- கொள்கலன்களினூடாக பெருந்தொகையிலான பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு கப்பல்களையும் தரைப்போக்குவரத்து வாகனங்களையும் பயன்படுத்தல். குழாய்கள் மூலமான விநியோக நடவடிக்கைகள்.

☞ மீயுயர் சந்தைகள் நடைமுறைப்படுத்துதல்.
☞ வீடுகளுக்குப் பொருட்களை எடுத்துச் செல்லுதல் என்பன மூலம் நுகர்வுத் தேவைகள் இலகுவாக நிறைவேற்றப்படுகின்றமை.
☞ பொருட்களுக்கான அனுப்பாணை, பணம் அனுப்புதல் என்பவற்றில் புதிய முறைகளைப் பயன்படுத்துதல்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் தொழினுட்பம் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்னும் கருத்தை எடுத்துக்காட்டுவார்.
- நுகர்வுத் தேவைகள் இலகுவாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றப்படுவதற்கு புதிய முறைகளும் கருவிகளும் காரணமாயுள்ளதை ஏற்றுக்கொண்டு பேசுவார்.
- தொழினுட்ப உற்பத்திகளிடையே தேவையானவற்றை மட்டும் தெரிவுசெய்வதில் ஈடுபடுவார்.
- குழுவில் ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- முன்வைக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**இணைப்பு 9.2.2.1**

பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான ஒளிப்படங்களை முன்வைக்குக.

**தொழினுட்ப உபகரணம்**



கணினி



செய்மதி



டெடார் கருவி



கதிரியக்க இயந்திரம்



றோலா

**இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றம்**



இன்றைய வானொலி



தொலைபேசி



புகையிரதம்



கல்குலேட்டர்





பொருட்களை ஏற்றி இறக்கும் இயந்திரம்

**இணைப்பு 9.2.2.2**

**குழு 01**

- விவசாயத்துறை - பயிர்ச்செய்கையில் தொழினுட்பம் செல்வாக்கு செலுத்திய விதம், சந்தர்ப்பம் என்பன பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்தி ஆக்கபூர்வமாக முன்வைக்குக.

**குழு 02**

- விவசாயத்துறையின் கீழே விலங்கு வேளாண்மை மீன்பிடி என்பவற்றில் தொழினுட்பம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை முன்வைக்குக.

**குழு 03**

- கைத்தொழில் பொருள்கள் உற்பத்தித்துறையில் தொழினுட்பம் பயன்படுத்தப்படுவதால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய அறிக்கை ஒன்றினை ஆக்கபூர்வமாக முன்வைக்குக.

**குழு 04**

- உற்பத்திப் பொருள்கள், சேவைகள் என்பவற்றின் விநியோகத்தில் துரித மாற்றங்கள் அண்மைக் காலங்களில் துரித மாற்றங்கள் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ளன. இதுபற்றிய தகவல்களை ஆக்கபூர்வமாக முன்வைக்குக.

**குழு 05**

- வியாபாரத்துறையில் தொழினுட்பம், கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்துவதால் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை பற்றிய தகவல்களைக் கோவைப்படுத்தி மனங்கவர் விதத்தில் முன்வைக்குக.

### 9.2.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- சமூக நன்மை மீது, பங்களிக்கும் தொழினுட்ப, சமூக பொருளாதார மாற்றங்களுக்கு இசைவாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- புதிய தொழிற்சந்தைக்குப் பொருத்தமான வகையில் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அறிந்து அவற்றை விருத்தி செய்து கொள்வார்.

**செயற்பாடு** :- தொழில்துறையின் புதிய போக்குகளை இனங்காண்போம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-

- இணைப்பு 9.2.3.2 செயற்பாட்டுப்பத்திரம்
- செய்திப்பத்திரிகைகளில் வெளியாகிய பல்வேறு தொழில்வாய்ப்புகளுக்கு உரிய விளம்பரங்கள் (பாடத்திற்கு முன்னரே தயார்ப்படுத்துக.)
- டிமை கடதாசி
- மாக்கர் பேனை (Marker Pen)
- பென்சில்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.2.3.1**

- எதிர்காலத்தில் வகுப்பிலுள்ள மாணவர்கள் எத்தகைய தொழிலில் ஈடுபட உத்தேசித்துள்ளனர் எனக் கேட்டு அதனைக் கரும்பலகையில் காட்சிப்படுத்துக.
- அறிவுபூர்வமாகக் கிடைக்கும் விடைகளைக் கரும்பகையில் எழுதுக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலை நடத்துக.

> ☞ உற்பத்தி விநியோகம், வியாபாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மீதான தற்காலத்தைய புதிய தொழில்துறைகள் பல தோன்றியுள்ளமை.
> ☞ இவற்றை விவசாயம், கைத்தொழில், சேவை ஆகிய துறைகளில் காணக்கூடியதாய் உள்ளமை.
> ☞ விவசாயம், கைத்தொழில், சேவை ஆகிய துறைகளில் புதிய போக்குகள் ஏற்பட்டுள்ளமை.
> ☞ சேவைத்துறையின் தொழில்கள், விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளின் தொழில்களின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை.

(10 நிமிடங்கள்)

**படி 9.2.3.2**

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.2.3.1 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தைப் பகிர்ந்தளிக்குக.
- டிமை கடதாசி, மாக்கர் பேனை ஆகியவற்றை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குக.
- குழுக்களால் கொண்டுவரப்பட்ட வேலைவாய்ப்புகள் பற்றிய விளம்பரங்களை அவதானித்து குழுவுக்குக் கிடைத்த துறைகளின் கீழே கோவைப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.

(30 நிமிடங்கள்)

**படி 9.2.3.3**

- குழுக்களின் வெளிப்படுத்தல்கள வகுப்பில் முன்வைக்க இடமளிக்குக.
- ஏனைய குழுக்களுக்கு விருத்திக்கான கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர்களின் இயலுமைக்கு மதிப்பளித்து விருத்திக்கான ஆலோசனைகளை முன்வைத்து பின்வரும் விடயங்கள் வெளிப்படும் விதத்தில் கலந்துரையாடலில் ஈடுபடுக.

☞ தொழினுட்ப மாற்றங்களுடன் விவசாயம், வர்த்தகம், சேவை ஆகிய துறைகளின் தொழில்துறையில் புதிய வேலைவாய்ப்புகள் ஏற்பட்டமை.
☞ விவசாயத்துறையில் சில துறைகள் வாழ்க்கைத் தேவை மட்டத்திலிருந்து கைத்தொழில் துறைகளுக்கு மூலப்பொருள்களை வழங்கும் நிலைவரை விருத்தியடைந்துள்ளமை.
☞ ஏற்றுமதி பண்முகப்படுத்தலின் கீழ் சுயதொழில் வாய்ப்புகள் ஏற்பட்டமை.
☞ கைத்தொழில் துறையில் புதிய தொழில்கள் தோன்றியமை.
☞ விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளுக்கு பொருத்தமாகச் சேவைத்துறையில் புதிய தொழில் வாய்ப்புகள் பாரிய அளவில் தோன்றியுள்ளமை.
☞ ஏனைய துறைகளை விட சேவைத்துறையில் தொழில் வாய்ப்புகள் அதிகரித்தமை.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- பல்வேறு துறைகளின் கீழ் உருவான புதிய தொழில்களின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- பல்வேறு தொழில்கள் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பதை ஏற்றுக்கொள்வார்.
- பொருளாதாரத்தில் உள்ள பல்வேறு துறைகளின் கீழ் தொழில்களை அட்டவணைப்படுத்துவார்.
- குழுக் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவார்.
- அனைத்துத் தொழில்கள் மூலமும் சமூகம், பொருளாதாரம் என்பவற்றுக்குப் பாரிய சேவைகளைச் செய்ய முடியும் என்ற கருத்தை வெளிப்படுத்துவார்.

உங்கள் பிரதேசத்தில் விவசாயம், கைத்தொழில், சேவை ஆகிய மூன்று துறைகளிலும் தோன்றியுள்ள தொழில்களின் பட்டியலைத் தயாரிக்குக.

அத்தொழில் வாய்ப்புகள் உமது பிரதேசத்தின் பொருளாதார, சமூக முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய பங்களிப்பு செய்த முறை பற்றி பாடசாலைச் சஞ்சிகைக்குக் கட்டுரை தயாரிக்குக.

நீங்கள் எதிர்காலத்தில் தெரிவுசெய்ய உத்தேசித்துள்ள தொழிலின் பெயர் குறிப்பிட்டு,
- அதனைத் தெரிவுசெய்ததற்கான காரணங்கள்
- அதன் மூலம் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆற்றக்கூடிய சேவைகள் பற்றிய விவரங்களை முன்வைக்குக.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**இணைப்பு 9.2.3.1**

**குழு 01**

- ☞ ஞாயிற்றுக்கிழமைக்குரிய செய்தித்தாள்கள் சிலவற்றை வழங்குக.
- ☞ அதிலுள்ள வேலை, வெற்றிடம் பற்றிய விளம்பரங்களை வாசிக்குக.
- ☞ அவற்றிடையே விவசாயத்துறைக்குரிய வேலை விளம்பரங்களை வெட்டிப் பிரித்தெடுக்குக.
- ☞ உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள டிமை கடதாசியில் நீங்கள் தீர்மானித்த ஒழுங்குமுறைப்படி ஆக்கபூர்வமான விதத்தில் ஒட்டுக.
- ☞ ஒவ்வோர் தொழிலினாலும் சமூகத்துக்குக் கிடைக்கும் சேவைகளை விடயங்களாகக் குறிப்பிடுக. (டிமை கடதாசியின் கீழே)

**குழு 02**

- ☞ ஞாயிற்றுக்கிழமைக்குரிய செய்தித்தாள் சிலவற்றை வழங்குக.
- ☞ அவற்றிலுள்ள வேலை வெற்றிடம் பற்றிய விளம்பரங்களை நன்கு அவதானிக்குக.
- ☞ அவற்றிடையே கைத்தொழில்துறைக்குரிய வேலை விளம்பரங்களை வெட்டி வேறாகப் பிரித்தெடுக்குக.
- ☞ டிமை கடதாசியில் அவற்றை நீங்கள் தீர்மானித்த ஒழுங்கு முறைப்படி ஆக்கபூர்வமான விதத்தில் ஒட்டுக.
- ☞ டிமை கடதாசியின் அடிப்பகுதியில் ஒவ்வோர் தொழிலினாலும் சமூகத்துக்குக் கிடைக்கும் சேவைகளைக் குறிப்பிடுக.

**குழு 03**

- ☞ ஞாயிற்றுக்கிழமைக்குரிய செய்தித்தாள்கள் சிலவற்றை வழங்குக.
- ☞ அவற்றிலுள்ள வேலை வெற்றிடம் பற்றிய விளம்பரங்களை நன்கு அவதானிக்குக.
- ☞ சேவைத்துறைக்குரிய வேலை விளம்பரங்களை வெட்டி வேறாகப் பிரித்தெடுக்குக.
- ☞ டிமை கடதாசியில் நீங்கள் விரும்பிய ஒழுங்குமுறையில் ஆக்கபூர்வமான விதத்தில் ஒட்டுக.
- ☞ டிமை கடதாசியின் அடியில் அத்தொழில்களினால் சமூகம் பெறும் சேவைகளைக் குறிப்பிடுக.

**இணைப்பு 9.2.3.2**
**செயற்பாட்டுப்பத்திரம்**

**பொது அறிவுறுத்தல்**

- ஞாயிற்றுக்கிழமைக்குரிய செய்தித்தாள்கள் சிலவற்றை வழங்குக.
- அவற்றில் வேலை வெற்றிடங்கள் பற்றிய விளம்பரங்களை நன்கு அவதானிக்குக.
- உங்கள் குழுவுக்குக் கிடைத்த தொழில்துறை சார்பான வேலை விளம்பரங்களை வெட்டி வேறாகப் பிரித்தெடுக்குக.
- வழங்கப்பட்ட டிமை கடதாசியில் நீங்கள் விரும்பிய ஒழுங்கு முறைப்படி ஆக்கபூர்வமாக அவற்றை ஒட்டுக.
- டிமை கடதாசியின் கீழ்ப்பகுதியில் அவ் வேலைவாய்ப்புகள் மூலம் சமூகம் பெறும் நன்மைகள் பற்றிக் குறிப்பிடுக.

**செயற்பாட்டுக்குப் பொருத்தமான தொழில்துறைகள்**

குழு 01 - விவசாயத்துறைசார் தொழில்துறைகள்
குழு 02 - கைத்தொழில்துறைசார் தொழில்கள்
குழு 03 - சேவைத்துறைசார் கைத்தொழில்கள்

## 9.3 ஆட்சியில் மக்களின் பங்குபற்றுகை

**(பாடவேளைகள் 08)**

## அறிமுகம்

உலகின் பண்டைய நாகரிகங்களில் கிரேக்கத்தில் ஏதன்ஸ் நகரில் நேரடி ஜனநாயக நிர்வாக முறை நிலவியமைக்கான சான்றுகள் பெறப்பட்டுள்ளன. இன்றைய உலகின் பெரும்பாலான நாடுகள் ஆள்வதற்காகப் பயன்படுத்தும் ஆட்சி முறையொன்றாக பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி முறைமையை அறிமுகப்படுத்தலாம்.

மக்களை ஆட்சி செய்வதற்காக மக்களின் பங்களிப்புடன் செயற்படுகின்ற ஆட்சிமுறைமையாக ஜனநாயக ஆட்சிமுறைமை முக்கியத்துவம் பெறுவதனால் அதன் வெற்றிக்காக மக்களின் உயிரோட்டமான பங்களிப்பு அவசியமாகின்றது.

இவ்வலகின் மூலம் ஜனநாயக ரீதியிலான ஆட்சி முறைமையை வெற்றிகரமாக செயற்படுத்தத் தேவையான தேர்ச்சிகளை மாணவர் மத்தியில் விருத்தி செய்தல் இவ்வலகின் எதிர்பார்ப்பாகும்.

**தேர்ச்சி :-**

சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்:-**

- சனநாயக ஆட்சிமுறை யொன்றின் அடிப்படைப் பண்புகளை பகுப்பாய்வு செய்வார்.
- மக்கள் சமூகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஆற்றக் கூடிய கடமைகளையும் பொறுப்புக்களையும் மதிப்பிடுவார்.
- சனநாயக சமூமொன்றில் ஒரு நற்பிரஜை என்ற வகையில் தமது பொறுப் புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**பாட உள்ளடக்கம்**

- ஜனநாயக ஆட்சி முறைமையின் அடிப்படை இயல்புகள்.
- ஜனநாயகத்தை அறிமுகஞ் செய்தல்.
- ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சி முறைமையாகும். இது மக்களினால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களின் ஆட்சி முறைமையாக அழைக்கப்படுகின்றது.

  ஜனநாயக ஆட்சி முறைமையின் அடிப்படை இயல்புகளும் ஜனநாயக ஆட்சி முறைமைகள் காணப்படும் நாடுகளுக்கான உதாரணங்களும் :

  - அரசியலமைப்புக்கேற்ப ஆட்சி செய்தல்.
  - மக்களினால் வாக்குரிமை மூலம் உருவான அரசுகள் நிலவுதல்.
  - சர்வ ஜன வாக்குரிமை.
  - சட்டத்தின் ஆட்சி
  - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்.
  - பெரும்பாலானோரின் விருப்பிற்கேற்ப தீர்வெடுத்தல்.
  - போட்டிக் கட்சி முறை.
  - நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படல்.
  - பிரதிநிதித்துவ முறை நிலவுதல்.
  - நாட்டை தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தெடுத்தல்.
  - ஆளுங் கட்சியும் எதிர்க்கட்சியும் இருத்தல்.
  - அதிகாரங்கள் பகிரப்படல்
  - சுதந்திரம், சமத்துவம் மற்றும் உரிமைகளைப் பாதுகாத்தல்.
  - சுதந்திர ஊடகங்களின் செயற்பாடு.

ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் நாடுகளுக்கு உதாரணங்கள் :

- பெரிய பிரித்தானியா
- அமெரிக்க ஐக்கிய நாடுகள்
- கனடா
- சிங்கப்பூர்
- மலேசியா
- இந்தியா
- இலங்கை

ஜனநாயக நிர்வாக முறையொன்றின் வெற்றிக்குத் தேவையான அம்சங்கள் :

- அரசியல் விழிப்புணர்வுடனான மக்கள் இருத்தல்.
- அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் செயற்படும் தலைவர்கள் இருத்தல்.
- சுதந்திர ஊடக முறையொன்று நிலவுதல்.
- பொருளாதார நிலைமை திருப்திகரமான முறையில் நிலவுதல்.
- சட்டத்தின் ஆதிபத்தியம் செயற்படுதல்.
- அரசாங்கத்தின் பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருத்தல்.
- செயற்றிறனுள்ள எதிர்க்கட்சியொன்று இருத்தல்.

### 9.3.2 அரசியல் கட்சிகள்

**அரசியல் கட்சிகளை அறிமுகஞ் செய்தல் :**

- அரசியல் அதிகாரத்தைப் பெறும் நோக்கத்துடன் பொதுவான கொள்கையொன்றின் அடிப்படையில் செயற்பட்டு மக்கள் நலனை நோக்கமாகக் கொண்டு ஒன்றாகச் சேர்ந்த நபர்களின் கூட்டத்தினரை அரசியல் கட்சி என்பர். (எட்மன்ட் பேக்)

- நாட்டின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்களின் கருத்துக்களையும் அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் ஒன்றாகச் சேர்த்து அரசியல் கட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- அரசியல் கட்சியின் நோக்கங்கள் பிரதேசம், இனம், சமயம் போன்ற குறுகிய காரணிகளை அடிப்படையாகக் கொள்ளாது தேசிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயகத்தை செயற்படுத்தலாகும்.

**சமுதாயத்தின் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அரசியல் கட்சிகள் மூலம் ஆற்றப்பட வேண்டிய பணிகள் :**

- பரந்துபட்டுள்ள மக்கள் கருத்தை ஒன்றாகச் சேர்த்தல்.
- மக்கள் தேவையை இனங்கண்டு அதற்கேற்ப கட்சிக் கொள்கைகளை தீர்மானித்தலும் செயற்படுத்தலும்.
- மக்களை அறிவுறுத்துதல்.
- எதிர்காலத் தலைவர்களை உருவாக்கல்.
- சமுதாயத்தில் ஒற்றுமையைப் பேணல்.
- தமது கட்சிக் கொள்கைக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டுள்ள அரசியல் அங்கத்தவர்களின் ஜனநாயக அரசியல் கருத்துக்களை மதித்தல்.

**வாக்குரிமையும் தேர்தலும்**

- மக்கள் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்தலும் மக்கள் கருத்துக்களை அறிவதற்காக நடாத்தப்படும் தேர்தலொன்றின்போது தமது கருத்தை வெளிப்படுத்த உள்ள வாய்ப்பு வாக்குரிமையாகும்.
- ஆட்சி மன்றங்களுக்கு மக்கள் அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் மக்கள் கருத்துக் கணிப்பு தேர்தலாகும்.

**மக்கள் ஆட்சியில் பங்குகொள்ளும் சந்தர்ப்பங்கள்**

- பாராளுமன்றத் தேர்தல்
- ஜனாதிபதி தேர்தல்
- உள்ளூராட்சி தேர்தல் (பிரதேச, நகர, மாநகர சபைகள்)
- மாகாண சபைத் தேர்தல்
- மக்கள் கருத்துக் கணிப்பு

**சர்வஜன வாக்குரிமையும் அதன் முக்கியத்துவமும்**

எந்த வேறுபாடுகளுமின்றி தேவையான தகைமைகளைப் பெற்றுள்ள எல்லா பிரஜைகளும் தமது அரசியல் கருத்துக்களை வெளியிடுவதற்குள்ள உரிமை. (வாக்கின் மூலம்)

**இலங்கை மக்களுக்கு வாக்குரிமை கிடைத்தல்**

- 1910 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சீர்த்திருத்தங்களின் மூலம் 21 வயதுக்கு மேற்பட்ட கல்வி கற்ற செல்வந்த ஆண்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டது.

- 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் அமைப்பு சீர்த்திருத்தத்தின் மூலம் 21 வயதைத் கடந்த ஆண் பெண் இருபாலாருக்கும் (சர்வஜன) வாக்குரிமை வழங்கப்படல்.

- 1958 ஆம் ஆண்டில், 18 வயதைக் கடந்த எல்லாப் பிரஜைகளுக்கும் வாக்குரிமை உரிமையாதல்.

**வாக்குரிமை பெறத் தேவையான தகைமைகள்**

- இலங்கை பிரஜையாகவிருத்தல்.
- வயது 18 ஐத் தாண்டியிருத்தல்.
- பதிவுசெய்யப்பட்ட வாக்காளராக இருத்தல்.
- வாக்குரிமை உரிமையற்றதாகாதிருத்தல். (வாக்குரிமை அற்றுப் போவதற்கான காரணங்களை விளக்குக.)

**சர்வஜன வாக்குரிமையின் முக்கியத்துவம்**

- தமது ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு பொதுமக்களுக்கும் கிடைக்கும்.
- தகைமையற்ற ஆட்சியாளர்களை நீக்குவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.
- அரசியல் ஒத்துழைப்பு பரவுதல்.
- அரசியல் அறிவு வளர்ச்சியடைதல்.
- நபர்கள் முனைப்புடன் அரசியலில் பங்கேற்றல்.
- மக்கள் பிரதிநிதிகள் தாம் நியமிக்கப்பட்ட தேர்தல் தொகுதியிலேயே சேவையாற்றத் தூண்டும் வழியாக அமைதல்.
- நாட்டின் மக்களின் நலனையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தும் உத்தியாக அமைதல்.

**தேர்தலும், தேர்தல் தொடர்பான மக்கள் உரிமைகளும் கடமைகளும்**

ஆட்சிக்குப் பொருத்தமான பிரதிநிதிகளை நியமிக்கும் செயற்பாடு தேர்தலாகும். தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதித்துவ முறைகள் சில நடைமுறையில் உள்ளன.

- எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை

**எளிய பெரும்பான்மை முறை**

- தேர்தலின்போது எந்தவொரு தேர்தல் தொகுதிக்காகவும் போட்டியிடும் அபேட்சகர்களுள் அதிக வாக்குகளைப் பெறும் அபேட்சகரை வெற்றி பெற்ற அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை**

தேர்தலின்போது தேர்தல் தொகுதியொன்றுக்காகப் போட்டியிடும் அரசியல் கட்சிகள் அல்லது குழுக்களினால் பெறப்படும் வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கேற்ப ஆசனங்களைப் பெறும் முறையாகும்.

**தேர்தல் தொடர்பான மக்களின் உரிமைகள்**

- வாக்களித்தல்
  (ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை)
- அரசியல் கட்சியொன்றில் அங்கத்துவம் பெறல்.
- அரசியல் கட்சிகளை அமைத்தல்.
- வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெயர் பதிதல்.
- அபேட்சகராகப் போட்டியிடல்.
- தேர்தல் பிரச்சார உரிமை.
- ஒழுங்கமைத்தல்.
- நியாயமான காரணங்களின் அடிப்படையில் விமர்சித்தல்.

**தேர்தல் தொடர்பான மக்களின் கடமைகள்**

- தேர்தலில் வாக்களித்தல்.
- தேர்தல் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடந்துகொள்ளல்.
- வன்செயல்களில் ஈடுபடாமல் இருத்தலும் ஈடுபடாதிருக்க உதவுதலும்.
- அறிவுள்ள பொருத்தமான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தல்.
- வெற்றி தோல்வியை தன்னடக்கத்துடன் ஏற்றுக்கொள்ளல்.
- தேர்தல் சட்டத்தை செயற்படுத்த உதவுதல்.

## 9.3.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- சனநாயக ஆட்சிமுறையொன்றின் அடிப்படைப் பண்புகளை பகுப்பாய்வு செய்வார்.

**செயற்பாடு** :- ஜனநாயக ஆட்சி முறையொன்றின் இயல்புகளை இனங்காண்போம்

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.1.1 இன் படம்
- இணைப்பு 9.3.1.2 இன் வேலைப்படிவம்
- A4 தாள்
- டிமை கடதாசி

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.1.1**

- இணைப்பு 9.3.1.1 தொடர்பான படங்களை வகுப்பில் சமர்ப்பித்தல்.
- படத்தை ஆராய்வதில் மாணவரை ஈடுபடுத்துங்கள். அதில் குறிப்பிடப்படும் சிறப்பான ஜனநாயக பண்புகளைத் தேடியறிய மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ☞ மக்களை நாட்டின் ஆட்சியில் பங்கேற்கச் செய்வதற்காக வாக்குரிமை அவசியமாகும். |
| ☞ சர்வஜன வாக்குரிமை முக்கிய ஒரு ஜனநாயக பண்பாகும். |
| ☞ சர்வஜன வாக்குரிமையை வழங்கும்போது பல்வேறு தகைமைகளை கவனத்தில் கொள்ளப்படும். |
| ☞ ஜனநாயக அரசியல் முறையில் அரசியல் கட்சிகள் முக்கியத்துவம் பெறும். |
| ☞ இலங்கையில் அரசியல் கட்சிகள் பல உள்ளன. |
| ☞ ஜனநாயக ஆட்சி முறையில் தேர்தல்கள் முக்கியத்துவம் பெறும். |
| ☞ சட்டத்தின் முன் யாவரும் சமமாக கருதப்படுவர். |
| ☞ நீதித்துறை சுயாதீனம் ஜனநாயக மக்கள் சமூகத்தின் வெற்றிக்குக் காரணமாகும். |

(10 நிமிடங்கள்)

**படி 9.3.1.2**

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.4.3.2 இல் தரப்பட்டுள்ள வேலைப்படிவம் ஒன்று வீதம் குழுக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- வேலைப்படிவங்களுக்கேற்ப மாணவரை வேலையில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்கள் மத்தியில் சென்று தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 9.3.1.3**

- தேவையான விடயங்களை அறிக்கை செய்ததன் பின்னர், அவற்றைச் சமர்ப்பிக்க மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களுடன் கலந்துரையாட மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- முக்கிய விடயங்களை குறித்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்.

> ☞ ஜனநாயக ஆட்சிமுறையின் வெற்றிக்கு அரசியல் கட்சிகள் பங்களிக்கின்றன.
> ☞ ஜனநாயக ஆட்சி முறையின் வெற்றிக்கு சுயாதீன தேர்தல்கள் காரணமாகும்.
> ☞ நாட்டில் ஜனநாயகம் வெற்றிகமாக நடைமுறைப்படுத்தப்பட சுதந்திரமான நீதிமுறை நிலவ வேண்டும்.
> ☞ சட்டத்தின் முன் யாவருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- ஜனநாயக ஆட்சிமுறையின் அடிப்படை இயல்புகளைப் பெயரிடுவர்.
- ஜனநாயக ஆட்சிமுறை வெற்றிகரமான ஆட்சிமுறை என ஏற்றுக்கொண்டு கருத்தறிவிப்பர்.
- ஜனநாயக வாழ்க்கைக்குத் தயாராவர்.
- அறிக்கையை ஆக்கபூர்வமாக சமர்ப்பிப்பார்.
- ஜனநாயக பண்புகளைத் தமது வாழ்க்கைப் பண்புகளினூடாக காட்சிப்படுத்துவர்.

இணைப்பு 9.3.1.1

பின்வரும் படத்தைத் தயார்ப்படுத்துங்கள்.

ஜனநாயகப் பண்பை வெளிப்படுத்தும் படம்
கருத்துவெளிப்பாடு/ வாக்குரிமை/ அரசியல் கட்சி

**இணைப்பு 9.3.1.3**

**வேலைப்படிவம்**

**குழு 01**

உங்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்**

தற்கால ஜனநாயகம் நடைமுறையிலுள்ள நாடுகளின் ஆட்சி நடைபெறுவதற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தும் முறை தேர்தல் என அழைக்கப்படும். ஆட்சியாளர்களாக மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் பல உள. எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையும் அவற்றுள் பிரதானமானவையாகும்.

- மக்களை ஆட்சியில் பங்குபற்றச் செய்ய நடாத்தும் பல்வகைத் தேர்தல்கள்

- பாராளுமன்றத் தேர்தல்
- ஜனாதிபதித் தேர்தல்
- மக்கள் கருத்துக் கணிப்பு
- மாகாண சபைத் தேர்தல்
- உள்ளூராட்சித் தேர்தல்
  (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை)

தேர்தல் தொடர்பாக மக்களின் கடமைகளும் பொறுப்புகளும் பின்வருமாறு தேர்தல்களில் பிழையின்றி வாக்களித்தல், வெற்றி தோல்வியை அடக்கத்துடன் ஏற்றுக்கொள்ளல், அறிவுபூர்வமாக பொருத்தமான ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், வன்செயல்களைத் தவிர்த்துக்கொள்ளல், வன்செயல்களில் ஈடுபடுவதற்கு உதவாதிருத்தல் ஆகியனவாகும்.

1. ஜனநாயக ஆட்சிமுறையின்போது மக்கள் பிரதிகளைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?
2. ஆட்சிக்காக மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது பின்பற்றும் பிரதிநிதித்துவ முறைகளைப் பெயரிடுக.
3. இலங்கை மக்கள் வாக்குகளைப் பயன்படுத்தும் பல்வேறு தேர்தல் முறைகளைப் பெயரிடுக.
4. நியாயமான தேர்தல் முறைக்குத் தடையாக அமையும் சந்தர்ப்பங்களைப் பெயரிடுக.

**குழு 02**

தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**சர்வஜன வாக்குரிமை**

1931 ஆம் ஆண்டுவரை சொத்துக்கள், கல்வி மட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஒரு சிலருக்கே வாக்குரிமை இருந்தது. 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்த்திருத்தங்களின் அடிப்படையில் 21 வயதைத் தாண்டிய ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

ஏந்த வேறுபாடுகளும் இன்றி தேவையான தகைமைகளைப் பெற்ற எல்லாப் பிரஜைகளுக்கும் வாக்குரிமை உண்டு.

இலங்கை மக்களுக்கு வாக்குரிமை பெறுவதற்கு இருக்க வேண்டிய தகைமைகள்

- இலங்கை பிரஜையாகவிருத்தல்.
- 18 வயதை அடைந்திருத்தல்.
- வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல்.
- வாக்குரிமை இழந்தவராகாதிருத்தல்.

சர்வஜன வாக்குரிமையின் முக்கியத்துவம்

- மக்களுக்கு விருப்பமான ஆட்சியைத் தேர்ந்தெடுக்கவும் விருப்பமற்ற ஆட்சியை நீக்கவும் முடிதல்.
- அரசியலில் பங்குபற்றுவதை பரவலாக்குதல்.
- அரசியல் அறிவை வளர்த்தல்.

நற்பிரஜையாக வாக்கைப் பயன்படுத்தும்போது பின்பற்றவேண்டிய விடயங்கள் சிலவாகும்.

- வஞ்சகமாக வாக்கைப் பயன்படுத்தாதிருத்தல்.
- வேறோருவரின் வாக்கைப் பயன்படுத்த முயற்சி செய்யாதிருத்தல்.
- மக்களைப் பயமுறுத்தல், அச்சுறுத்தல் போன்ற விடயங்களைத் தவிர்த்தல்.
- தேர்தல் குற்றங்களைத் தவிர்த்தலும் சரியாக வாக்களித்தலும்

1. சர்வ ஜன வாக்குரிமை என்றால் என்ன?
2. இலங்கை மக்களுக்கு எவ்வாண்டில் சர்வ ஜன வாக்குரிமை வழங்கப்பட்டது?
3. சர்வ ஜன வாக்குரிமை ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?
4. ஒரு நற்பிரஜை வாக்களிக்கும்போது செய்யக்கூடாதவைகள் யாவை?

### குழு 03

உங்களுக்குத் தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.

ஜனநாயக நாடொன்றில் அரசியல் கட்சிகளிலிருத்தல் முக்கியமானதாகும். மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்படும் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவது அரசியல் கட்சிகள் மூலமாகும். அரசியல் கட்சியென்பது நாட்டில் அரசாங்கத்தை நிறுவுவதற்காக திட்டவட்டமான கொள்கைகளுடன் செயற்படும் குழுவாகும். ஜனநாயக நாடொன்றில் இவ்வாறான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான கட்சிகள் காணப்படும்.

பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கத்தை அமைக்கும்போது மக்களின் வெறுப்புக்கு ஆளான அரசாங்கத்தை பதவி நீக்கும் போதும் மக்களுக்கு அரசியல் ரீதியாக ஒன்று சேரும் உரிமை சுதந்திரம், ஆற்றல் இருத்தல் வேண்டும். இவ்வுரிமையை வலியுறுத்தி ஜனநாயக தேசத்தின் எந்தவொரு ஒத்த கருத்தைக் கொண்டதும் குழுவினருக்கு ஒழுங்கமையும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி போட்டி அடிப்படையிலான அரசியல் கட்சி முறையைக் கொண்டிருத்தல் ஜனநாயக நாட்டின் அடிப்படை இயல்பாகும். மக்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக அரசியல் கட்சி மூலம் ஆற்றப்படும் பணிகள் பல உள. அதாவது சமூகத்தில் பரந்து காணப்படுகின்ற மக்கள் கருத்தை ஒன்றாகக்குதல், தேர்தல்களில் போட்டியிடல், ஜனநாயகத்தைப் பலமுள்ளதாக்க பங்களித்தல் ஆகியனவாகும்.

மேலும் பல்வேறு இனங்களையும் சமயங்களையும் மக்கள் பகுதியினரையும் கொண்ட சமூகத்தால் எல்லா மக்கள் குழுவினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமாக தேசிய ஒற்றுமையை உருவாக்குதல் கட்சி முறையினூடாகவாகும்.

1. அரசியல் கட்சியென்றால் என்ன?
2. ஜனநாயகம் வெற்றியடைய கட்சிகளினால் ஆற்றப்படும் பணிகள் யாவை?
3. இலங்கை அரசியல் கட்சிகள் சிலவற்றைப் பெயரிடுக.

**குழு 04**

பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**சட்டத்தின் முன்னிலையில் சமத்துவமும் நீதித்துறையின் சுதந்திரமும்**

ஜனநாயக நாட்டில் காணக்கூடிய மற்றொரு அடிப்படைப் பண்பு சட்டத்தின் முன்னிலையில் சமத்துவமும் நீதித்துறை சுயாதீனமுமாகும். சட்டம் மிகச் சிரேட்டமானதும் உயர்ந்ததுமாகும். சட்டத்தின் முன்னிலையில் எல்லா மனிதர்களும் சமமானவர்களே. பொதுவாக சட்டம் யாவருக்கும் நியாயமானதாக இருப்பதால் யாவரினதும் வாழ்வும் சுதந்திரமும் உரிமைகளும் ஒரே விதமாக பாதுகாக்க முயற்சி எடுக்கப்படும்.

இதற்காக சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான சட்டத்துறை அவசியமாகும். அதன்மூலம் சமாதானத்தைப் பாதுகாத்தலும் சட்டத்தைச் செயற்படுத்தலும் நியாயமான முறையில் நடைபெறும். நீதித்துறை சுதந்திரமான நிறுவனமாகும். பக்கச் சார்பின்றி நீதியை நிலைநிறுத்த இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்கால சிக்கலான சமூகத்தினுள் அறிந்தோ அறியாமலோ உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்கள் பலவாகும். உயிரிழப்புகள், சொத்திழப்புகள், வேலையிழப்புகள் முறையற்ற செல்வாக்குச் செலுத்தல்கள், கொள்ளையடித்தல், வழிப்பறி, ஏமாற்றுதல், மோசடி, ஊழல்கள் என்றவாறு இவை மிகப் பலவாகும். இவை தொடர்பாக நீதிமன்றத்தின் மூலம் நியாயாதிக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதிமன்ற உத்தரவின்றி எவரது வீட்டைச் சோதிக்கும் அதிகாரம் இல்லை. எழுத்து மூல குற்றச்சாட்டின்றி எந்த ஒருவரையும் கைதுசெய்து தடுத்துவைக்க முடியாது. குற்றவாளிகளுக்கோ சந்தேக நபர்களுக்கோ குரூரமான சித்திரவதைகளைச் செய்ய முடியாது. குற்றவாளியாக நிரூபிக்கப்படும் வரை யாவரும் சந்தேக நபர்களே.

1. பந்தியில் கூறப்பட்டுள்ளவாறு மனித உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களைப் பெயரிடுக.
2. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பின்பற்றக்கூடிய நடைமுறைகளைப் பெயரிடுக.

## 9.3.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- மக்கள் சமூகத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஆற்றக் கூடிய கடமைகளையும் பொறுப்புக்களையும் மதிப்பிடுவார்.

**செயற்பாடு** :- அரசியல் கட்சியின் பணிகளை இனங்காண்போம்

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.2.1 இன் அவதானிப்புப் படிவம்
- இணைப்பு 9.3.2.2 இன் செயலட்டை
- பிரிஸ்டல் அட்டை
- நிறப் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.2.1**

- இணைப்பு 9.3.2.1 இல் தரப்பட்டுள்ள இலட்சனைகளை வகுப்பில் சமர்ப்பியுங்கள். அவற்றுக்குரிய அரசியல் கட்சிகளை இனங்காணுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

> ☞ பொதுவான கொள்கையை நோக்காகக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஒன்றுசேர்ந்துள்ள குழு அரசியல் கட்சியாகும்.
> ☞ ஜனாதிபதி, பாராளுமன்ற அங்கத்தவர்கள், மாகாணசபை, உள்ளுராட்சி சபை ஆகியவற்றின் அங்கத்தவர்கள் ஆகியோர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.
> ☞ தேர்தல்களின்போது வேட்பாளர்கள் அரசியல் கட்சி அடிப்படையிலும் சுயாதீன குழுக்களாகவும் போட்டியிடுவர்.
> ☞ அரசியல் கட்சிகள் மூலம் நாட்டை ஆளும் பணிகளின் போது பாரிய பணியொன்று நிறைவேற்றப்படுகின்றது.

(05 நிமிடங்கள்)

**படி 9.3.2.2**

- இணைப்பு 9.3.1.1 தொடர்பான படங்களை வகுப்பில் சமர்ப்பித்தல்.
- படத்தை ஆராய்வதில் மாணவரை ஈடுபடுத்துங்கள். அதில் குறிப்பிடப்படும் சிறப்பான ஜனநாயக பண்புகளைத் தேடியறிய மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

**படி 9.3.2.3**

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.4.3.2 இல் தரப்பட்டுள்ள வேலைப்படிவம் ஒன்று வீதம் குழுக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- வேலைப்படிவங்களுக்குக்கேற்ப மாணவரை வேலையில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்கள் மத்தியில் சென்று தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

**படி 9.3.2.3**

- தேவையான விடயங்களை அறிக்கை செய்ததன் பின்னர், அவற்றைச் சமர்ப்பிக்க மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களுடன் கலந்துரையாட மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடலை நடாத்துங்கள்.
- முக்கிய விடயங்களை குறித்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குங்கள்.

> ☞ மக்கள் கருத்தை ஒன்று சேர்ப்பதற்காக, அரசியல் கட்சிகளினால் பாரிய பணிகள் ஆற்றப்படுகின்றன என.
> ☞ அரசியல் கட்சிகள் மூலம் தலைவர்கள் உருவாக்குவதில் பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது என.
> ☞ மக்கள் சமூகத்தின் ஐக்கியத்தைப் பேண அரசியல் கட்சிகளினால் பங்களிப்பு நல்கமுடியும் என.
> ☞ அரசயில் கட்சிகளினால் நாட்டின் அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பை நல்க முடியும் என.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- அரசியல் கட்சியின் பணிகளை விவரிப்பார்.
- மக்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அரசியல் கட்சியினால் பாரிய பணியை நிறைவேற்ற முடியும் என ஏற்றுக்கொண்டு கருத்து கூறுவார்.
- குழு உணர்வுடன் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதில் பங்களிப்பார்.
- குழு அறிக்கைகளை ஆக்கபூர்வமாகச் சமர்ப்பிப்பார்.

**இணைப்பு 9.3.2.1**

**குழு 01**

மக்கள் கருத்தை ஒன்றுசேர்க்க அரசியல் கட்சியினால் ஆற்றக்கூடிய பணிகள் யாவை?

**குழு 02**

தலைவர்கள் உருவாக அரசியல் கட்சிகளினால் ஆற்றக்கூடிய பணிகள்.

**குழு 03**

மக்கள் சமுதாயத்தின் ஐக்கியத்தை ஏற்படுத்த அரசியல் கட்சியினால் ஆற்றக்கூடிய பணிகள்.

**குழு 04**

நாட்டின் அபிவிருத்திக்காக அரசியல் கட்சியினால் ஆற்றக்கூடிய பணிகள்.

## 9.3.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- சனநாயக சமூகமொன்றில் ஒரு நற்பிரஜை என்ற வகையில் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**செயற்பாடு** :- தலைவரைத் தெரிவோம்

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.3.1 இன் அவதானிப்புப் படிவம்
- மாதிரி வாக்குச்சீட்டு
- மாதிரி வாக்குப்பெட்டி
- வாக்குச் சாவடி அதிகாரிகள், பதவி இலச்சினை
- வாக்களிப்பு நிலைய அதிகாரி
- உதவி வாக்கு நிலைய அதிகாரி
- எழுதுவினைஞர்கள்
- அலுவலக உதவியாளர்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

- பாத்திரமேற்று நடிப்பது மூலம் வகுப்புத் தலைவர்கள் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தகைமைகள் பற்றி வகுப்பில் எடுத்துக்கூறுமாறு கூறுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடலை நடத்துங்கள்.

> ☞ புத்திசாலித்தனமாகச் சிந்தித்துப் பார்த்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
> ☞ சமூகத்தின் நலனுக்காகச் செயற்படும் தலைவரிடம் நல்ல பண்புகள் இருக்க வேண்டும்.
> ☞ மக்கள் சரியாக வாக்களிக்க வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**இணைப்பு 9.3.3.1**

**படக்குறிப்பு மாதிரி வாக்குத்தாளின் வடிவம்**

| | | |
|---|---|---|
| “அ” கட்சி | * | |
| “ஆ” கட்சி | * | |
| “இ” கட்சி | * | |
| “ஈ” கட்சி | * | |
| “உ” கட்சி | * | |
| “ஊ” கட்சி | * | |
| சுயாதீனக்குழு I | * | |
| சுயாதீனக்குழு II | * | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 12 | 14 | 15 | | | | | | | | | |

### 9.3.4 செயற்பாடு

**தேர்ச்சி** :- சனநாயக ஆட்சி முறையினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு செயல்ரீதியில் பங்களிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- சனநாயக சமூமொன்றில் ஒரு நற்பிரசை என்ற வகையில் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார்.

**செயற்பாடு** :- ஆட்சியாளர்களை நியமிப்பதற்காக வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்.

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.3.4.1 இன் மாதிரி சாவடியின் படம்
- இணைப்பு 9.3.4.2 தேர்தல் பெறுபேறின் தலைப்புகள் அடங்கும் செயலட்டை.
- டிமை தாள் - பேனாக்கள்
- வாக்குச் சாவடி அதிகாரிகள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.3.4.1**

- இணைப்பு 9.3.4.1 குறித்த வாக்குச் சாவடியொன்றின் படத்தை வகுப்பில் காட்டுங்கள்.
- அங்கு என்ன நடைபெறும்?
- மேற்படி வினாக்களை மாணவரிடம் வினவி பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

| |
|---|
| ☞ இன்று இலங்கை மக்கள், மக்கள் பிரதிநிதிகளை நியமிப்பது மூலம் ஆட்சியில் பங்குகொள்கின்றனர் என. |
| ☞ தேவையான தகைமைகளை நிறைவேற்றியுள்ளவர்களுக்கு வாக்குரிமை உரித்தாகுமேன. |
| ☞ மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நியமிப்பது பெரும்பான்மை மக்கள் விருப்பின் மூலம் என. |
| ☞ சரியாகவும் புத்திசாதூரியமாகவும் வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என. |

(10 நிமிடங்கள்)

**படி 9.3.4.2**

- இணைப்பு 9.3.1.1 தொடர்பான படங்களை வகுப்பில் சமர்ப்பித்தல்.
- படத்தை ஆராய்வதில் மாணவரை ஈடுபடுத்துங்கள். அதில் குறிப்பிடப்படும் சிறப்பான ஜனநாயக பண்புகளைத் தேடியறிய மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியவாறு கலந்துரையாடுங்கள்.

**படி 9.3.4.3**

- மாணவர்களைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.
- இணைப்பு 9.4.3.2 இல் தரப்பட்டுள்ள வேலைப்படிவம் ஒன்று வீதம் குழுக்களுக்கு பகிர்ந்தளியுங்கள்.
- வேலைப்படிவங்களுக்குக்கேற்ப மாணவரை வேலையில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்கள் மத்தியில் சென்று தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

(20 நிமிடங்கள்)

- ☞ மக்கள் ஆட்சியில் தொடர்புபடுத்துவதற்காக பிரதான முறையில் சர்வஜன வாக்குரிமை என.
- ☞ ஜனநாயக ஆட்சி காணப்படும் நாட்டு பிரஜைகளுக்கு இவ்வுரிமை உரிததாகும் என.
- ☞ வாக்கைப் பிழையின்றிப் பயன்படுத:துவதால் ஜனநாயக, சமூகத்தின் பிரஜைகளின் கடமையும் பொறுப்பும் என.
- ☞ புத்திசாதுரியமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- வாக்கை பிழையின்றி உபயோகிக்கும் விதத்தைப் பற்றிய விடயங்களை முன்வைப்பர்.
- வாக்காளர் ஒருவரின் பொறுப்புக்கள், கடமைகள் பற்றிஇ விவரிப்பார்.
- வாக்கைப் பிழையின்றி பயன்படுத:துவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- குழு அறிக்கையை பிழையின்றி சமர்ப்பிப்பார்.
- குழுவினுள் ஒற்றுமையாகச் செயற்படுவார்.

**இணைப்பு 9.3.4.1**

**வாக்கெடுப்பு நிலையம்**



**இணைப்பு 9.3.4.2**

**வேலைப்படிவம்**

**குழு 01**

தேர்தல் பெறுபேறின் மாதிரி கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை நுணுகி ஆராயுங்கள்.

**தேர்தல் மாவட்டம்**

| | |
|---|---|
| பதிவுசெய்துள்ள வாக்களார் தொகை | 4,452250 |
| வாக்களித்த தொகையின் | 268220 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் தொகை | 47620 |

மேற்படி பெறுபேறுகளின்படி வாக்காளர்கள் கைவிடப்பட்டுள்ள கடமைகளை காரணங்கூறி விளக்குக.

**குழு 02**

இங்கு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் தொடர்பான வாக்குப்பத்திரம் காட்டப்பட்டுள்ளது. இதனை வகுப்பில் காட்சிப்படுத்தி பிழையின்றி வாக்களிக்கும் முறையையும் விளக்குக.

**குழு 03**

ஒரு வாக்காளர் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையுயும் பட்டியற்படுத்துங்கள். அதுபற்றிய விபரத்தை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

## 9.4 உள்ளூராட்சி நிறுவனங்களும் மக்கள் பங்கேற்பும் (பாடவேளைகள் 06)

## அறிமுகம்

மக்களாட்சி அரசியல் முறை தோன்றிய காலத்திலிருந்தே மக்களை நாட்டின் ஆட்சி முறையுடன் இணைத்துக்கொள்வதற்காக பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மக்கட் தொகை அதிகரிப்பு, மக்களின் பிரச்சினைகள் சிக்கலடைதல் போன்றவற்றினால் அரசுகளுக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அதுவரைக்கும் செயற்படுத்தப்பட்ட பணிகள் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் உருவாகிய அப்பிரச்சினைகள் நியாயமாகவும் வினைத்திறனுடனும் தீர்த்துக்கொள்வதற்காகவும் நாட்டின் நிர்வாகத்துக்கும் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டுக்கும் மக்களை நேரடியாக இணைத்துக்கொள்ளவும் மத்திய அரசின் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் பரவலாக்கும் பணிகளில் கவனஞ் செலுத்தப்பட்டது. தற்போது நடைமுறைப்படுத்தப் படும் உள்ளூராட்சி முறை இம்முயற்சியின் விளைவாகும். இந்நிறுவனங்கள் நவீன ஜனநாயக ஆட்சிமுறை நிலவும் எல்லா அரசுகளிலும் காணக்கூடியதாகும். இந்நிறுவனங்கள் ஆரம்பத்தில் மிகவும் எளிமையாக ஆரம்பமாகிய போதிலும் பின்னர் மக்களின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களாகமாறின.

**தேர்ச்சி :-**

பொது நன்மையின் பொருட்டான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம் :-**

- தமது பிரதேசத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக ஆற்றப்படும் சேவைகள் தொடர்பில் நுணுகியாய்வார்.
- உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பிலான பொது மக்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்.
- உள்ளராட்சி மன்றங் களின் சேவைகளை வினைத்திறனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு மக்களது பங்குபற்றலின் உள்ள முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.

**பாட உள்ளடக்கம்**

### 9.4.1 உள்ளூராட்சி அறிமுகம்

- மத்திய அரசினால் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படும் சட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசின் அல்லது மேற்பார்வையின் கீழ் மக்களின் சேவையைள இலகுவாக்குவதற்காக நகர மற்றும் பிராந்திய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள நிறுவனவகை உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன.

**உள்ளூராட்சி நிறுவனங்களின் தோற்றம்**

பிரித்தானியர் ஆட்சிக்காலம் வரை நீண்டு செல்கிறது.

- கி.பி. 1865 இல் கொழும்பு, கண்டி, காலி நகரங்களுக்காக மாநகர சபைகள் நிறுவப்படுதல்.
- கி.பி. 1871 இல் கிராம சபைகள் நிறுவுதல்.
- கி.பி. 1940 இல் நகர சபைகள் நிறுவுதல்.
- கி.பி. 1946 இல் பட்டின சபைகள் நிறுவுதல்.

**பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின்போது உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக விதிக்கப்பட்ட சட்டங்களும் ஆணைகளும்**

(ஆசிரியர் அறிந்துகொள்வதற்காக)

- கி.பி. 1865 இல் மாநகரசபை ஆணைச்சட்டம்.
- கி.பி. 1871 இல் கிராம சபை ஆணைச்சட்டம்.
- கி.பி. 1920 இன் 1 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணைச்சட்டம்.
- கி.பி. 1924 இன் கிராம சபை ஆணைச்சட்டம்.
- கி.பி. 1932 இன் 9 ஆம் இலக்க ஆணைச்சட்டம்.
- கி.பி. 1933 இன் 37 ஆம் இலக்க ஆணைச்சட்டம்.
- கி.பி. 1938 இன் 60 ஆம் இலக்க கிராம சபை ஆணைச்சட்டம்.
- கி.பி. 1945 இன் 43 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைச்சட்டம்.
- கி.பி. 1946 இன் 3 ஆம் இலக்க பட்டின சபைகள் சட்டம்.
- கி.பி. 1946 இன் 57 ஆம் இலக்க சட்டம்.

### 9.4.2 உள்ளூராட்சியின் தேவை

- மத்திய அரசின் நடவடிக்கைகள் பன்முகப்படுத்தல்.
- மத்திய அரசின் பொதுமக்கள் சேவை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படல்.
- பொதுமக்கள் சேவைகள் மக்களுக்கு இலகுவாகக் கிடைத்தல்.
- ஆட்சியலகுக்குள் வாழும் மக்களின் தேவைக்கேற்ப ஆட்சி செய்யக்கூடியதாயிருத்தல்.
- எதிர்கால அரசியல் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாதல்.
- இளைஞர்களுக்கு நாட்டின் ஆட்சியில் பங்கேற்பதற்கு வாய்ப்பு கிட்டுதல்.
- நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்களின் பங்கேற்பு அதிகரித்தல்.
- தேசிய கொள்கையைத் திட்டமிடுதல் இலகுவாதல்.
- தேசிய கொள்கையைத் திட்டமிடும்போது மக்களின் பங்கேற்பை பெற்றுக்கொள்ளுதல்.
- திடீர் தேவைகளின்போது பிராந்திய மட்டத்தில் உடனடியாகச் செயற்படுவது இலகுவாதல்.

### 9.4.3 உள்ளூராட்சியுடன் தொடர்பான நிறுவனங்கள்

- சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு கி.பி. 1980 வரை.

  - கிராம சபைகள் (579)
  - பட்டின சபைகள் (83)
  - நகர சபைகள் (37)
  - மாநகர சபைகள் (14)

- 1980 இல் நிறைவேற்றப்பட்ட 35 ஆம் இலக்க மாவட்ட சபைச் சட்டம்.

  - கிராமசபைகளையும் பட்டின சபைகளையும் இல்லாமல் செய்து மாவட்ட அபிவிருத்தி சபைகள் நிறுவுதல்.
  - மாவட்ட அபிவிருத்தி சபைகளின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு கிராமோதயச் சபைகளும் பிரதேசச் சபைகளும் நிறுவப்படல்.
  - 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை இல்லாமற் செய்து பிரதேசச் சபைகள் நிறுவப்படல்.

- 1987 இன் பின்னர் நடைமுறையில் உள்ள நிறுவனங்கள்.

  - பிரதேசச் சபைகள் (270)
  - நகர சபைகள் (42)
  - மாநகர சபைகள் (18)

**மாநகர சபைகள்**

01. கொழும்பு
02. ஸ்ரீ ஜயவர்த்தனபுரம்
03. தெகிவளை - கல்கிசை
04. மொரட்டுவை
05. கண்டி
06. குருணாகல்
07. மாத்தளை
08. அநுராதபுரம்
09. இரத்தினபுரி
10. நுவரெலியா
11. நீர்கொழும்பு
12. கம்பஹா
13. காலி
14. மாத்தறை
15. பதுளை
16. கல்முனை
17. மட்டக்களப்பு
18. யாழ்ப்பாணம்

**9.4.4**

- உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பிரதிநிதிகளை நியமித்தல்.
- விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் திறந்த பட்டியல் முறையைப் பயன்படுத்துதல்.
- உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லைகளைத் தீர்மானித்தலையும் பெயரிடுதலையும் மத்திய அரசினால் (உள்ளூராட்சி அமைச்சு) மேற்கொள்ளப்படல்.
- அந்தந்த நிறுவனங்களுக்கென நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் தொகையை தேர்தல் ஆணையாளரால் தீர்மானிக்கப்படல்.

**உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளை நியமிக்கும் செயல்முறை**

**படி 01 வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தல்.**

- நிறுவனமொன்றுக்கு நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள் தொகைக்கு மேலதிகமாக மேலும் வேட்பாளர்கள் சிலரின் பெயர்களை அட்டவணையில் சேர்த்துக்கொள்ளுதல். (மொத்தத் தொகையின் 1/3 பங்கு அல்லது 6 பேர் ஆகிய இரண்டில் குறைந்த தொகை.)
- எல்லா வேட்பு மனுக்களையும் அட்டவணையாகத் தயாரித்தல்.
- சமர்ப்பிக்கப்படும் வேட்பாளரில் 40% வீதமானோர் 18-35 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல்.
- எல்லா வேட்பாளர்களும் பதிவுசெய்யப்பட்ட வாக்களராக இருத்தல்.

- வேட்பு மனுக்கள் உரியவாறு பூரணப்படுத்தப்பட்டிருத்தல்.
- சிங்கள அகரவரிசையில் ஒழுங்கில் பெயர்கள் சேர்க்கப்பட்டிருத்தல்.

**படி 02 வாக்களிப்பு**

- ஒவ்வொரு வேட்பாளருக்கும் விருப்பு எண் வழங்கப்படல்.
- வாக்காளர் தாம் விரும்பிய கட்சிக்கு வாக்களித்தல்.
- ஒவ்வொரு வாக்காளருக்கும் உரிய மூன்று விருப்பு வாக்குகளையும் ஒரு வேட்பாளருக்கோ அல்லது வேட்பாளர் இருவருக்கோ அல்லது மூவருக்கோ அளிக்கக்கூடியதாக இருத்தல்.

**படி 03 வெற்றியடைந்தோரை பிரகடனப்படுத்தல்.**

- ஒவ்வொரு குழு அல்லது கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகளை வெவ்வேறாகக் கணக்கிடல்.
- கூடிய வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு அல்லது குழுவுக்கு போனஸ் ஆசனங்கள் இரண்டு வழங்கப்படல்.
- வழங்கப்பட்ட முழு வாக்குத் தொகையின் 1/8 (12.5%) ஐபெறத் தவறும் கட்சி/ குழு போட்டியிலிருந்து நீக்கப்படலும் அவர்கள் பெற்ற வாக்குகளை செல்லுபடியான மொத்த வாக்குகளிலிருந்து அகற்றலும்.
- மேற்படி செயல்முறையின் பின் கிடைக்கும் வாக்கு எண்ணிக்கை சம்பந்தப்பட்ட வாக்குகளாகக் கணிக்கப்படல்.
- சம்பந்தப்பட்ட வாக்குகளை, அச்சபைக்கு தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர் தொகைக்கு 2 க்கு குறைந்த எண்ணிக்கையால் வகுத்தல். அவ்வாறு வகுப்பதால் கிடைக்கும் மொத்த வாக்குகள் தகுதியான வாக்குகளாகக் கொள்ளப்படல்.
- தகுதியான வாக்குகளிலிருந்து அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் பெற்ற வாக்குத் தொகையை வெவ்வேறாக வகுத்தல் மூலம் அந்தந்த கட்சிக் குழுக்களுக்கு உரிய பிரதிநிதிகளைக் கணக்கிடல்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தொகை மொத்த பிரதிநிதிகளின் தொகையில் இருந்து குறையும்போது கூடிய மீதிக்கு எஞ்சிய பிரதிநிதிகள் பதவிகளை வழங்குதல். அந்தந்த கட்சிகளின் குழுக்களின் வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளைக் கணக்கிடல்.
- விருப்பு வாக்குகள் பெற்ற ஒழுங்கு வரிசையின்படி பிரதிநிதிப் பதவிக்காக தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர்களை நியமித்தல்.

**படி 04 வெற்றிடங்களை நிரப்புதல்.**

- வெற்றிடங்கள் ஏற்படும்போது கட்சிக் குழுக்கள், தலைவரின் விருப்பின்படி அவ்வாறான வெற்றிடத்துக்குப் பொருத்தமாவரை நியமித்தல்.

### 9.4.5 உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு

- உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம், பொதுமக்கள் பிரதிநிதிகளினதும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பினாலும் நிகழ்கின்றது.
- பொதுமக்களின் பிரதிநிதிகள் வாக்குகளினால் தெரிந்தெடுக்கப்படுவதுடன் அவர்கள் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.
- அரச அதிகாரிகளினால் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தினதும் அதிகாரங்களும் பணிகளும் பெரும்பாலும் சமமானவை. ஆயினும் அந்தந்த நிறுவனங்களின் கட்டமைப்புக்கு அமைய சிறு வித்தியாசங்களைக் காணலாம்.

**பிரதேச சபையொன்றின் கட்டமைப்பு**



**நகர சபையொன்றின் கட்டமைப்பு**



**நகர சபையொன்றின் கட்டமைப்பு**




(மேலதிகத் தகவல்களை அறிவதற்காக இப்புத்தகத்திள் இறுதிப் பக்கங்களில் காட்டப்படும் X,Y வரைபுகள் இரண்டையும் பார்க்கவும்.)

**உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய அதிகாரங்கள்**

**மாநகர சபை**

- சேற்றுநிலங்கள், குளங்கள், சிறிய அளவுகள், நீர்த்தேக்கங்கள், கற்கள் மற்றும் காணிகள் தொடர்பான உரிமைகள்.
- பிரதான வீதிகள், பாதைகள், கால்வாய்கள், பாலங்கள், பொதுச் சந்தைகள், நினைவுத் தூபிகள், நகர வைத்தியசாலைகள், நூல் நிலையங்கள், பூங்காக்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றின் உரித்து.
- சொத்துக்களை கொள்வனவு செய்தலும் விற்றலும்.
- துணைச்சட்ட விதிகளை விதித்தலும் திருத்தலும்.
- குடிசைகள் மற்றும் குறைந்த வருமான வீட்டு நிர்வாகம்.

**நகர சபை / பிரதேச சபை**

- வழிகளும் தெருக்களும் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளும்.
- வேலிகள், சிறுபற்றை வேலிகள், கிடங்குகள் என்பவற்றின் உரித்து.
- இயற்கை நீர் ஊற்றுக்கள் மற்றும் நீரத்தேக்கங்களின் உரித்து.
- பாதைகள், கால்வாய்கள், திறந்த காணிகள், மருத்துவசாலைகள், நூல்நிலையங்கள், பொதுச்சந்தை என்பவற்றின் உரித்து.

**உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பணிகள்**

**மாநகர சபைக்குரிய பணிகள்**

- பிரதான வீதிகள், கால்வாய்கள், பாலங்கள், தோட்டங்கள், பூங்காக்கள், மைதானங்கள், நூல்நிலையங்கள், மருத்துவசாலைகளைப் பேணுதலும் நடாத்தலும்.
- பொதுச்சந்தைகளைத் தொடங்குதலும் நடத்துதலும், குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுதல், சுகாதார மற்றும் ஆரோக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- நிரந்தர கட்டிடங்களைக் கட்டுவித்தல், கட்டுவதற்கான அனுமதி வழங்குதலும் சட்டவிரோதமான கட்டிடங்களை அகற்றுதலும்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தலும்.
- பொது நீராடல் கிணறுகள், பொது மலசலகூடங்களை ஏற்படுத்துதலும்.
- மத்திய அரசினாலும் மாகாண சபைகளினாலும் கையளிக்கப்படும் வேறு பணிகளையும் ஆற்றுதல்.
- சுகாதாரத்துக்கு கேடான பொருட்கள் விற்பனையைத் தடுத்தல்.

**நகர சபைகள்/ பிரதேச சபைகளுக்குரிய பணிகள்**

- அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள நிறுவனத்துக்குரிய பாதைகள், கால்வாய்கள், பாலங்களைப் பேணுதல்.
- நூல் நிலையங்கள், முன்பள்ளிகள், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தலும் நடத்துதலும்.
- குறைந்த வருமானமுள்ளோருக்காக வீட்டு வசதிகளை ஏற்படுத்தல்.
- அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தித் தேவைகளைத் தேடிப்பார்த்தல். தேவையான திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றை செயற்படுத்தலும்.
- சந்தைகள், வாகன நிறுத்துமிடங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், தகனம் செய்யுமிடங்கள் என்பவற்றை தொடக்கிவைத்தலும் நடாத்துதலும்.

**உள்ளூராட்சி மன்றங்களின் நிதி**

- உள்ளூராட்சி மன்றமொன்றுக்குரிய நிதி.
- நிதியத்துக்கான நிதியை பல்வேறு வழிகளில் பெற்றுக்கொள்ளல்.

உதாரணம் :
- மாகாண சபையிலிருந்து / அரசிடமிருந்து பெறப்படும் நிதி.
- வரி / அபராத, முத்திரைக் கட்டணங்கள்.
- சேவைகள் வழங்குவதன் மூலம்
- விற்றலும் குத்தகைக்கு விடுதலும் வாடகைக்கு விடுதலும்.
- பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிதி ஒதுக்கீடுகள்.

### 9.4.6 உள்ளூராட்சி மன்றங்களின் சேவை தொடர்பான பொதுமக்களின் பொறுப்புக்களும் கடமையும்

- உள்ளூராட்சி மன்றங்களால் பொதுமக்களின் வசதிக்காக ஆற்றப்படும் பணிகள், சேவைகள் என்றவாறு கூறலாம்.
- இப்பணிகளை ஆற்றுவதுடன் தொடர்புபட்ட நபர்கள் இருவகையினர்.
  1. பொதுமக்களின் பிரதிநிதிகள்
  2. அதிகாரிகள்

இந்த மக்கள் பிரதிநிதிகளினதும் அதிகாரிகளினதும் சேவையைப் பெறுவோமாயின் பொதுமக்களின் பொறுப்புக்களும் கடமையும் உள்ளன.

**மக்கட் பிரதிநிதிகள் / அதிகாரிகளின் பொறுப்புக்களும் கடமைகளும்**

| பொறுப்புகள் | கடமைகள் |
|---|---|
| • பிரதேசத்தின் வளங்களை இனங்காணுதல்.<br>• மக்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் இனங்காணல்.<br>• தேவைகளுக்கமைய தீர்மானித்தல்.<br>• தீர்மானங்களை செயற்படுத்தும்போது தேடிப்பார்த்தல்.<br>• அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.<br>• திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உதவி வழங்கல்.<br>• பொதுமக்கள் தேவைகளை உரிய காலத்துக்குள் நிறைவேற்றுதல்.<br>• சட்டப் பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கையெடுத்தல்.<br>• தமக்குரிய உத்தியோகபூர்வ கடமைகளை உரியவாறு நிறைவேற்றல். | • மக்களின் குறைபாடுகளுக்குச் செவிமடுத்தல்.<br>• மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருத்தல்.<br>• கூட்டங்களில் பங்கேற்றல்.<br>• மோசடி, ஊழல் என்பவற்றைத் தடுத்தல்.<br>• அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தலைத் தவிர்த்தல்.<br>• அர்ப்பணிப்புடன் பொதுமக்களின் நலனுக்காக நடவடிக்கை எடுத்தல்.<br>• நேர்மையாகவிருத்தல்.<br>• நிறுவனத்தை மக்கள் கவரக்கூடிய இடமாக அமைத்தல்.<br>• மோசடியையும் ஊழலையும் அழித்தல்.<br>• பொதுமக்களின் தேவைகளை வினைத்திறனுடனும் முறையாகவும் நிறைவேற்றல். |

**மக்கட் பிரதிநிதிகள் / அதிகாரிகளின் பொறுப்புக்களும் கடமைகளும்**

| பொறுப்புக்கள் | கடமைகள் |
|---|---|
| • அநீதியாக வசதிகளை அனுபவிப்போர் பற்றிய தகவல்களை உரியோருக்கு அறிவித்தல்.<br>• வளங்கள் வீணாவதைத் தடுத்தல்.<br>• சட்ட விதிகளை மதித்தல்.<br>• சட்ட விதிகளை மதித்தல்.<br>• பொதுச் சொத்துக்களையும் பொது இடங்களையும் பாதுகாத்தல்.<br>• சட்டவிரோத கட்டுமானங்கள் செய்யாதிருத்தல்.<br>• நிர்மானங்களுக்கான அனுமதி வழங்குதல் | • பொதுச்சேவைகளுக்காக உரிய அதிகாரிகளுக்கு உதவுதல்.<br>• உரிய காலத்துக்கு வரிகளைச் செலுத்துதல் மற்றும் பட்டியல்களைச் செலுத்துதல்.<br>• குப்பைகளையும் கழிவுகளையும் உரியவாறு அகற்றுதல்.<br>• பொதுச்சொத்துக்களை சிக்கனமாகக் கையாளுதல்.<br>• தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சட்ட ரீதியான வழிகளைப் பயன்படுத்தல். |

### 9.4.1 செயற்பாடு

**தேர்ச்சி** :- பொது நன்மையின் பொருட்டான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** :- தமது பிரதேசத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக ஆற்றப்படும் சேவைகள் தொடர்பில் நுணுகியாய்வார்.

**செயற்பாடு** :- உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் சேவைகளைத் தேடியறிவோம்

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சேவைகளைக் காட்டும் இணைப்பு 9.4.1.1 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரம்
- பிரதேச சபை/ நகர சபை/ மாநகர சபை போன்ற நிறுவனங்களினால் உங்களுக்குரிய நிறுவனமொன்றின் அதிகாரியொருவரின் உரையொன் றுக்காக (கலந்துரையாடப்பட வேண்டிய/ வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக நேரகாலத்துடன் அறிவுறுத்தவும்)
- எழுதுந்தாள்/ டிமைதாள்/ பெல்ட் பேனை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.4.1.1**
- உள்ளூராட்சி மன்றமொன்றின் சேவைகளை வெளிக்கொணரும் வகையில் சிந்தனைக் கிளறலை மேற்கொள்ளவும்.
- உள்ளூராட்சி மன்றமொன்றில் நிகழும் சேவைகளை இனங்காண்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடாத்தவும்.

☞ படத்தில் காட்டப்படும் சேவைகளை உள்ளூராட்சி மன்றங்கள் வழங்குகின்றன.
☞ இந்நிறுவனங்கள் மக்கட் சேவையை ஆற்றுகின்றன.
☞ பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன.
☞ மாநகர சபை, நகர சபை, பிரதேச சபைகள் தற்போது செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களாகும்.
☞ இவ்வாறான நிறுவனங்களுக்கு உறுப்பினர்கள் மக்கள் வாக்கெடுப்பின் னுமூலம் தெரிவுசெய்யப்படுகின்றனர்.
☞ பிராந்திய அபிவிருத்திக்காக இந்நிறுவனங்கள் செயற்படுகின்றன.
☞ அவசர அனர்த்தங்களின்போது இந்நிறுவனங்களும் பிரதேசவாரியாக செயற்படுகின்றன.

(10 நிமிடங்கள்)

**படி 9.4.1.2**
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும்.
- 9.4.1.1 செயற்பாட்டுப்பத்திரத்தை மாணவருக்கு வழங்கவும்.
- உரை வழங்குபவரின் உரைக்குச் செவிமடுத்து அதன் வாயிலாக செயற்பாட்டுப்பத்திரத்தைப் பூரணப்படுத்த அறிவுரை வழங்கவும்.

(40 நிமிடங்கள்)

படி 9.4.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டுப்பத்திரத்துக்குரியதாகவும் சேகரித்த விடயங்களை முன்வைக்க வாய்ப்பளிக்கவும்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களை விசாரிக்கவும்.
- திறமையானவற்றை மதித்தவாறு பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

> ☞ தாம் வாழும் பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றம் யாதென அறிந்து கொள்ளல் வேண்டும்.
> ☞ மக்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக சந்திக்க வேண்டிய அதிகாரிகளைச் சரியாக இனங்காணல் வேண்டும்.
> ☞ உள்ளூராட்சி மன்றமொன்றினால் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதினால் பெருமளவான மக்கள் சேவைகள் ஆற்றப்படுகின்றன.
> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் மக்கள் அபிவிருத்திக்காக வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
> ☞ மக்கள் பிரதிநிதிகள் மக்களின் நலனுக்காக சேவையாற்ற வேண்டும்.
> ☞ பொதுமக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் நிலவும் பரஸ்பர தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு பிரதேசம் அபிவிருத்தியடைகின்றது.

(30 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- தனது பாடசாலையின் ஆளுகைப் பிரதேசம் உரித்தாகும் உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாட்டை விபரிப்பார்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் சமூகத்துக்கு ஆற்றப்படும் சேவையைப் பற்றி பெருமிதத்துடன் உரையாடுவார்.
- உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பணிகளை பட்டியற்படுத்துவார்.
- உன்னிப்பாகவும் விளக்கமாகவும் செவிமடுப்பார்.
- ஒப்படைக்கப்பட்ட பணியை உரியவாறு நிறைவேற்ற உதவுவார்.

**இணைப்பு 9.4.1.1**

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 01**

நிகழ்த்தப்பட்ட உரையின் வாயிலாக பின்வரும் தகவல்களை சேகரிப்பது உங்களுக்கான ஒப்படையாகும்.

- உரையின் மூலம் கூறப்படும் உள்ளூராட்சி மன்றம் எது?
- உள்ளூராட்சி மன்றத் தலைவரின் பெயர் யாது?
- பிரதான நிர்வாக அதிகாரியின் பதவிப் பெயர் யாது?
- அந்நிறுவனத்தின் நிர்வாகத்துக்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் பதவிகள் சில.
- மக்கட் பிரதிநிதிகள் ஆளுந்தரப்பினர் எனவும் எதிர்தரப்பினர் எனவும் வேறுபடும் விதத்தை இனங்காணும் விதம்.

**குழு 02**

உரைக்கு நன்கு செவிமடுத்து பின்வரும் செயலை நிறைவேற்றவும்.

- சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தினால் ஆற்றப்படும் மக்கள் சேவைகளின் பட்டியலைத் தயாரிக்கவும்.
- அந்நிறுவனங்களினால் ஆற்றப்பட்டுள்ள மற்றும் உத்தேச மக்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை வெவ்வேறாக முன்வைக்கவும்.

**குழு 03**

ஆற்றப்படும் உரைக்கு நன்கு செவிமடுக்கவும். அரசியல் மட்டத்தில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளை வரிசைப்படுத்தவும்.

**குழு 04**

ஆற்றப்படும் உரைக்கு நன்கு செவிமடுக்கவும். உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பாக பொதுமக்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் வெவ்வேறாகக் குறித்துக்கொள்ளவும்.

## 9.4.2 செயற்பாடு

**தேர்ச்சி** :- பொது நன்மையின் பொருட்டான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** :- உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பிலான பொது மக்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்.

**செயற்பாடு** :- உள்ளூராட்சி மன்றங்களினால் பெற்றுத்தரப்படும் வசதிகளை வினைத் திறனுடன் உபயோகப்படுத்தியவாறு எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவோம்.

**நேரம்** :- 40 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- இணைப்பு 9.4.2.1 இற்கான தகவற்பத்திரம்
- இணைப்பு 9.4.2.2 இற்கான செயற்பாட்டுப்பத்திரம்
- டிமைதாள், பெல்ட் பேனாக்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.4.2.1**

- இணைப்பு 9.4.2.1 இற்கான தகவல் பத்திரத்தை முன்வைத்து கண்டறிந்த விடயங்கள் வாயிலாக சிந்தனைக் கிளர்வு கலந்துரையாடலில் ஈடுபடவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை வழிநடத்தவும்.

> ☞ அன்றாட வாழ்க்கையைச் சிறப்பாக்கிக் கொள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் பாரிய சேவைகள் ஆற்றப்படுகின்றன.
> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் சேவைகளின் முக்கியத்துவத்தை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.
> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் செயற்பாடுகள் வெற்றியடைய பிரஜைகள் தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்ற வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.4.2.2**

- வகுப்பை ஏற்றவாறு குழுக்களாக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 9.4.2.2 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கவும்.
- தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கவும்.

(20 நிமிடங்கள்)

**படி 9.4.2.3**

- செயலாற்றல் பத்திரத்துக்குரிய குழுவினால் திரட்டப்பட்ட தகவல்களை வகுப்பில் முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- ஒவ்வொரு குழுவினாலும் முன்வைக்கப்படும் தகவல்கள் பற்றிய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஏனைய குழுக்களுக்குச் சந்தர்ப்பமளிக்கவும்.

- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடாத்தவும்.

> ☞ மக்களின் நன்மை கருதி உள்ளூராட்சி மன்றங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றன.
> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் சேவைகள் பற்றி எப்போதும் மக்கள் அறிய வேண்டும்.
> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் சேவைகள் ஏதேனும் ஒரு நாளில் தடைபடுமாயின் மக்கள் வாழ்க்கைக்கு அதன் மூலம் பெருந்தாக்கங்கள் ஏற்படும்.
> ☞ அதனால் உள்ளூராட்சி மன்றங்களினால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக மக்களின் பொறுப்புக்களும் கடமைகளும் இடையறாது மேற்கொள்ளப்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான மக்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் பெயரிடுவார்.
- உள்ளூராட்சி மன்றங்களினால் அளப்பரிய சேவைகள் ஆற்றப்படுகின்றன என்பதை ஏற்று கருத்து வெளியிடுவார்.
- குழு செயற்பாடுகளை ஒற்றுமையாக மேற்கொள்வார்.
- உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பான பொறுப்புக்களையும் கடமைகளையும் ஆற்ற தூண்டப்படுவார்.
- உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற ஏனையோருக்கு உதவுவார்.

**9.4.2.1 இற்குரிய தகவல் பத்திரம்**

மக்களுக்கான சேவையை இலகுவாக்குவதற்காக நகர மற்றும் பிரதேச மட்டங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. மத்திய அரசின் நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்படுவதற்கும் மக்கள் சேவைகளை முறையாக மேற்கொள்ளவும் நாட்டில் நிர்வாகப் பணிகள் ஜனநாயக ரீதியாக அமைவதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தேவைப்படுகின்றன. அதுமட்டுமன்றி மக்கள் சேவைகளை மக்களுக்கு இலகுவாக அண்மிக்கச் செய்யவும் உள்ளூராட்சி மன்றங்கள் இருத்தல் அவசியமாகும். அவ்வாறே நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் அவசியமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களினால் பெரும் சேவைகள் ஆற்றப்படுகின்றன. பாதைகள், கால்வாய்கள், தோட்டந்துரவுகள், பூங்காக்கள், மைதானங்கள், நூல்நிலையங்கள், மருந்துசாலைகளைப் பேணுவதற்கும் நடத்திச் செல்லுதல்பொதுச்சந்தைகள் ஆரம்பித்து வைத்தலும் நடத்திச் செல்லுதல் போன்ற சேவைகள் அவற்றுள் முக்கியமானதாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள் வெற்றிகரமானதாக அமைவதற்கு பிரஜைகள் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்றுதல் வேண்டும்.

**இணைப்பு 9.4.2.2**

**குழு 01**

| |
|---|
| சுகாதார, ஆராக்கிய சேவைகள் மற்றும் குப்பை கூளங்களை அகற்றுதல் தொடர்பாக மக்களினால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புக்களும் கடமைகளும் |

**குழு 02**

| |
|---|
| நீர் வழங்கல், விநியோகம், வீதியோர விளக்குகளைப் பேணுதல் தொடர்பாக மக்களினால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புக்களும் கடமைகளும். |

**குழு 03**

| |
|---|
| வரிப்பணம், வரிசெலுத்தல் தொடர்பாக மக்களினால் ஆற்றப்பட வேண்டிய பொறுப்புக்களும் கடமைகளும் |

**குழு 04**

| |
|---|
| பொதுச்சந்தை, நூல் நிலையங்கள், இறங்குதுறைகள் போன்றவை தொடர்பாக மக்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும். |

**குழு 05**

| |
|---|
| பொது வீதிகள், கால்வாய்களைப் பேணுதல் தொடர்பாக மக்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும். |

### 9.4.3 செயற்பாடு

**தேர்ச்சி** :- பொது நன்மையின் பொருட்டான உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** :- உள்ளராட்சி மன்றங் களின் சேவைகளை வினைத்திறனுள்ள வகையில் மேற்கொள்வதற்கு மக்களது பங்குபற்றலின் உள்ள முக்கியத்துவத்தை மதிப்பிடுவார்.

**செயற்பாடு** :- உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை வினைத்திறனுடன் ஆற்ற உதவுவோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடு** :-
- உள்ளூராட்சி மன்றங்களால் ஆற்றப்படும் சேவைகளைக் காட்டும் சித்திரமொன்றைத் தருவித்துக் கொள்ளவும்.
- இணைப்பு 9.4.3.2 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரம்
- டிமைதாள் / பிரிஸ்டல் அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடு**

**படி 9.4.3.1**
- தருவித்த சித்திரத்தை வகுப்பில் சமர்ப்பிக்கவும்.
- அதனை அவதானிப்பதற்குப் போதுமான நேரத்தை வழங்கவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் விதமாகக் கலந்துரையாடலை நடத்தவும்.

> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் மக்களின் நலன் கருதி பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.
> ☞ அச்சேவைகளை நுகரும்போது பொதுமக்கள் அவற்றை உரியவாறு கையாண்டவாறு அவற்றைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.
> ☞ அந்தந்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்குரிய வசதிகளையும் சேவைகளையும் உரியவாறு வழங்கி மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட வேண்டும்.

(10 நிமிடங்கள்)

**படி 9.4.3.2**
- வகுப்பை உரியவாறு குழுக்களாக்கவும்.
- இணைப்பு 9.4.3.2 இற்குரிய செயற்பாட்டுப்பத்திரத்தை வகுப்பின் குழுக்களுக்கு வழங்கவும்.
- சம்பந்தப்பட்ட வளங்களை வழங்கியவாறு செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆசிரிய வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் வழங்கியவாறு அறிக்கையைத் தயாரிப்பதற்குப் போதுமான அளவு நேரத்தை வழங்கவும்.
- அறிக்கையை முன்வைப்பதற்கு ஆயத்தப்படுத்தவும்.

(30 நிமிடங்கள்)

**படி 9.4.3.3**
- மாணவர் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கவும்.
- குழுக்கள் முன்வைத்தல்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதற்கு ஏனையவர்களுக்கு சந்தர்ப்பமளிக்கவும்.

- மாணவர்களின் திறமைகளை மதித்தவாறு பின்வரும் விடயங்கள் மேலெழுந்தவாறு கலந்துரையாடவும்.

> ☞ உள்ளூராட்சி மன்றங்களினால் பொதுமக்களின் நன்மைக்காக பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன.
> ☞ அவற்றைப் பெறும் பயனாளிகளினால் அவை உரியவாறாகக் கையாளப்படல், வரிசெலுத்துதல், உரிய கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.
> ☞ சேவையை உரியவாறாக வழங்குவதற்காக ஆவன செய்தல் சேவை வழங்குவோரின் பொறுப்பாகும்.
> ☞ ஆளுகை பிரதேசத்தின் பரிசுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சேவை வழங்குவோர் மற்றும் பயனாளிகள் செயற்படுவதின் மூலம் தேகாரோக்கியமிக்க பரிசுத்தமான சூழல் உருவாகின்றது.
> ☞ நூல் நிலையங்கள், மருத்துவசாலைகள், விளையாட்டு மைதானங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், தகனச்சாலைகள், பொதுச்சந்தைகள் போன்ற சேவைகளை நடாத்திச் செல்லுவது உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பாகும்.
> ☞ அதற்காக தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் பயனாளிகளின் பணியாகும்.

(40 நிமிடங்கள்)

**கணிப்பீடும் மதிப்பீட்டு நியதிகளும்**

- உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்பான சேவை வழங்குவோர் அவற்றின் பயனாளிகள் தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்ற வேண்டுமென கருத்து வெளியிடுவார்.
- அந்தந்த சேவைகளை வழங்கும்போது சேவை வழங்குவோரினதும் பயனாளிகளின் பொறுப்புக்களைப் போலவே கடமைகளையும் பட்டியற்படுத்துவார்.
- சேவைகளை நுகரும்போது அவற்றை உரியவாறு நடாத்த பங்களிப்பு செய்வார்.
- குழுவில் ஒற்றுமையாகச் செயற்படுவார்.
- ஆசிரியர் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவார்.

**இணைப்பு 9.4.3.1**
**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு 01**

உங்கள் பிரதேசத்தின உள்ளூராட்சி மன்றத்தினால் நடாத்தப்படும் நூல் நிலையத்தின் பயனாளி என்ற வகையில் உங்கள் பொறுப்புக்களையும் நூல்நிலையத்தின் பயனாளி உட்பட அதிகாரியின் பொறுப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியவாறு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யவும்.

| **நூல் நிலையப் பயனாளிகளின் பொறுப்புக்கள்** | **நிறுவன அதிகாரிகளின் பொறுப்புக்கள் சம்பந்தப்பட்ட பணிகள்** |
|---|---|
| | |

**குழு 02**

நீங்கள் வாழும் பிரதேசத்தில் தொற்றும் நோய் பரவுதலைத் தவிர்ப்பதற்காகவும் அதற்கான பரிகாரத்துக்காகவும் உள்ளூராட்சி மன்றத்துக்குரிய பொறுப்புக்களையும் ஆளுகைப் பிரதேசத்தில் குடியிருப்பாளர் என்ற வகையில் உங்களுக்கரிய பொறுப்புக்களையும் வெவ்வேறாகக் குறிக்கவும்.

| **உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள்** | **பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களும் இணைந்த பணிகளும்** |
|---|---|
| | |

**குழு 03**

உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசத்தின் குப்பை கூளங்களை அகற்றுவதற்காக உள்ளூராட்சி நிறுவனத்துக்காக பொறுப்புக்களையும் ஆளுகைப் பிரதேசத்தில் வசிப்பவர் என்ற வகையில் உங்களுக்குரிய பொறுப்புக்களையும் அட்டவணையில் குறிக்கவும்.

| **உள்ளூராட்சி மன்றத்தின் பொறுப்பு** | **பயனாளியின் பொறுப்பு** |
|---|---|
| | |

## இணைப்பு X

**பிரதேச சபையொன்றின் கட்டமைப்பு**

1. தொழினுட்ப சேவைக்குழு
2. வீட்டு, சனசமூக அபிவிருத்திக்குழு
3. சுற்றாடல், வசதிகள் குழு
4. நிதிக் குழு

பிரதேச சபை



**இணைப்பு Y**

**உள்ளூராட்சி மன்றமொன்றின் கட்டமைப்பு**
**(உதா : மாநகர சபையொன்றின் கட்டமைப்பு**



## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவுப் பாண்டித்திய மட்டத்தையேனும் அடைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாகப் பின்னூட்டல் (Feed Back), முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் நலிவுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்து கொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்குப் பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்களையும் வலிவுகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல், இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர், ஆசிரியர் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும்.

இப்பாடநெறி மாணவர் மைய (Student centred) தேர்ச்சி அடிப்படையிலான Competency Based செயற்பாடு சார்ந்த (Activity Oriented) அணுகுமுறையைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் நிலைமாற்று வகிபங்கின் (Transformation Role) உள்ளார்த்தமுமாகும்.

ஏற்கனவே விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாடநெறியில் கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டு உள்ளது. அந்தந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவர் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலைச் சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்களை மதிப்பீடு செய்யவும் முடியும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே சஞ்சரித்தவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானிக்கலாம். வகுப்பறையில் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இங்கு கலந்துரையாடித் தீர்த்து வைக்கலாம்.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறனை அடிப்படையாகக்

கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்புடைய நடத்தை மாற்றங்கள் ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின் போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடத்தைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடரகத்தின் (ACTIVITY CONTINUM) ஊடாக மதிப்பீட்டு வாய்ப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை (EVALUATION POINT) இனங்காண்பதற்கு இலகுவான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்களாக (ACTIVITY CLUSTER) பிரிப்பதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். அந்தந்தச் செயற்பாட்டுத் தொகுப்பின் ஆரம்பத்தில் அச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

பாடநெறியின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டுப் புள்ளியாகளையும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளையும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டை இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கலாம். மாணவர்களுக்கு உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் அது வழிகோலும்.

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை விரிவாக்கும் கருவிகளைத் தயார் செய்வது அடுத்த படிமுறையாகும். ஒவ்வொரு செயற்பாட்டினதும் ஆரம்பத்தில் இக்கருவிகளை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தல் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படும் மற்றுமொரு பணியாகும். இதன்படி கற்றலையும் கற்பித்தலையும் விரிவுபடுத்துவதற்காக ஓர் ஆசிரியர் பயன்படுத்தக் கூடிய சில மதிப்பீட்டுப் பேதங்கள் பின்வருமாறு:-

- எண்ணக்கருப் படம் (Concept Maps)
- சுவர்ப் பத்திரிகை (Wall News Papers)
- வினா - விடை நிகழ்ச்சி (Quizzes)
- வினாவிடைப் புத்தகம் (Question and Answer Books)
- மாணவர் செயலடைவுக் கோவை (Portfolios)
- மாணவர் ஆக்கங்களின் கண்காட்சி (Exhibitions)
- விவாதம் (Debates)
- குழுக் கலந்துரையாடல் (Panel Discussions)
- கருத்தரங்கு (Seminars)
- உடன் பேச்சு (Impromptu speechers)
- வகிபாகமேற்றல் (Role Plays)
- இலக்கிய விமர்சனம் (Presentation of Literature Reviews)
- களநூல், இயற்கை நாளேடு, பயிற்சிப் புத்தகம் (FieldBooks/ Nature Diaries)
- செய்முறைப் பரீட்சை (Practical Tests)
- இணையத்தளம், கணினி மென்பொருள் பயன்பாடு

பாடத்திட்டத்தின் மூன்றாவது பகுதி கற்றல்-கற்பித்தல் விரிவுபடுத்தல் சந்தர்ப்பங்கள், அதற்காக தெரிவு செய்யக் கூடிய கருவிகள் என்பவற்றை அறிமுகம் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு செயற்பாட்டின் போதும், அவற்றுக்கிடையையும் கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இரண்டு வழிகளிலும் மேற்கொள்வதன் மூலம் கற்றல்-கற்பித்தல் செயன்முறை மேலும் விரிவடையும். மாணவர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் கற்றலில் ஈடுபடுவதற்கும் வழிகோலும்.

அத்தோடு, வகுப்பறையில் எழுத்துச்சோதனைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றிலும் ஆண்டிறுதியில் நடத்தப்படும் பாடசாலை மட்ட அல்லது வலயமட்ட எழுத்துப்பரீட்சையிலும் மாணவரை ஈடுபடுத்தவும்.

மேலும் தவணை இறுதியில் மதிப்பிட முன்னர் வழங்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளைப் பயன்படுத்துங்கள். தவணை இறுதியில் பரீட்சை வினாத்தாளுக்குரிய கட்டாயமான வினாவொன்று, கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகள் தொடர்புடையவகையில் உள்ளடக்கப்படுவதே அதற்கான காரணமாகும்.

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவி

| | | | |
|---|---|---|---|
| 1. | மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் | : | முதலாந்தவணை |
| 2. | உள்ளடங்கும் தேர்ச்சி | : | கூட்டு செயற்பாட்டின் மூலம் சமூகக் காப்பை உறுதிசெய்துகொள்ள சுறுசுறுப்பாகப் பங்களிப்பு செய்வார். |
| 3. | வலியுறுத்தப்படும் தேர்ச்சிமட்டம் | : | சமூகக் காப்பின்போது தனியாளின் பொறுப்புக்களையும் கடமைகளையும் ஆற்றுவார்.<br>சமூகக் காப்புக்குப் பங்களிப்பு செய்யும் பல்வேறு அமைப்புக்களை இனங்கண்டு அபிமானமிக்கப் பிரஜையாக ஒற்றுமையாக செயற்படுவார். |
| 4. | மதிப்பீட்டுக் கருவியின் தன்மை (மதிப்பீட்டு வேறுபாடு) | : | ஒப்படை (சிறு நூல் தயாரித்தல்) |
| 5. | தரவிருத்தி உள்ளீடு | : | செயற்பாட்டுப்பத்திரம் |
| 6. | மதிப்பீட்டுக் கருவியின் நோக்கங்கள் | : | சமூகக் காப்பை இனங்காண்பார்.<br>சமூகக் காப்புக்குப் பங்களிப்புச் செய்யும் அமைப்புக்களைப் பெயரிடுவார்.<br>சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொறிமுறைகள், சட்ட விதிகள் உடன் தொடர்புடைய நபர்களின் பொறுப்புக்களை இனங்கண்டு ஆவன செய்வார்.<br>கூட்டுறவு இயக்கத்துடன் இணைந்து சகவாழ்வுடன் கூடிய பிரஜையாக நடந்துகொள்வார். |
| 7. | மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்கான ஆசிரிய அறிவுறுத்தல்கள் | : | வகுப்பு மாணவரை ஏற்றவாறாக ஆறு குழுக்களாக வகுக்கவும்.<br>ஒவ்வொரு குழுவுக்குமான செயற்பாட்டுப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுக்கவும்.<br>மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடும் அதேநேரம் தேவையான வழிகாட்டலைச் செய்யவும்.<br>உரிய காலத்தில் மதிப்பீட்டை பூர்த்தி செய்யவும்.<br>மாணவரை மதிப்பீடு செய்தவாறு பிரமாணங்களின் அடிப்படையில் புள்ளிகளை வழங்கவும். |
| 8. | பிரமாணங்கள் | : | ஆசிரிய அறிவுறுத்தலுக்கமைய ஒப்படைக்கான தகவல்களை போதுமான விதத்தில் சேகரித்தல்.<br>தகவல்களின் பொருத்தப்பாடு.<br>பெற்ற தகவல்களை உரியவாறு அட்டவணைப்படுத்தல்.<br>உரிய செயற்பாடுகளில் செயற்பாட்டுடன் இணைதல்.<br>ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் செயற்படுதல். |

9. பின்னூட்டலும் முன்னூட்டலும் : மாணவர் சேகரித்த தகவல்களின் சிறப்புக்களையும் பலவீனங்களையும் எடுத்துக் காட்டுதல். மேலும் விருத்தி செய்ய வேண்டிய இடங்களை இனங்கண்டுகொள்ள இடமளித்தல்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

முதற்குழு

சிறுநூல் ஒன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான முதற்பக்கத்தை அமைப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

- ஏனைய குழுக்களுடன் கலந்துரையாடி பாட உள்ளடக்கம் பற்றிய விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ளவும்.
- ஆசிரியரின் வழிகாட்டலின் அடிப்படையில் சிறுநூலுக்கு ஏற்ற தலைப்பையும் முதற்பக்கத்துக்குப் பொருத்தமான படமொன்றை உருவாக்கவும்.

இரண்டாம் குழு

- சமூகக் காப்பை விளக்குதல்.
- சமூகத்துக்கும் தனியாளுக்கும் இடையிலான தொடர்பை விபரித்தல் என்பன உங்களுடைய குழுவுக்கான ஒப்படையாகும்.

அந்த விபரங்களுக:குச் சம்பந்தப்பட்ட தகவல்களை படங்களின் மூலமும் வெளிப்படுத்தவும்.

மூன்றாம் குழு

சமூகக் காப்புக்குப் பங்களிப்புச் செய்யும் அமைப்புக்களைப் பெயரிடுதல் உங்கள்குழுவுக்கான ஒப்படையாகும்.

- அந்நிறுவனங்களின் மூலம் சமூகக் காப்புக்காக வழங்கப்படும் பங்களிப்பு.
- அந்தந்த அமைப்புக்களின் மூலம் சமூகக் காப்பக்கு ஆற்றப்படும் பணிகளை வெற்றிகரமாக்கும் பொருட்டு நீங்கள் பங்களிப்பு செய்யக்கூடிய விதத்தை விளக்கவும்.

இந்த விபரங்களுக்கமைவான தகவல்களை படங்களின் மூலமும் வெளிப்படுத்தவும்.

நான்காம் குழு

- சமூகக் காப்பை ஏற்படுத்துவதற்காக பங்களிப்பு செய்யும் பொறிமுறைகள், சட்ட விதிகள் உடன் சம்பந்தப்பட்ட தனிநபர் பொறுப்புக்களைப் பெயரிடுதல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.
- அப்பொறிமுறைகள், சட்ட விதிகள், சமூகக் காப்புக்குப் பங்களிப்பு செய்யும் விதங்களையும் உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரித்தல்.

ஐந்தாம் குழு

கூட்டுறவு இயக்கத்தின்

- நோக்கங்கள்
- கூட்டுறவு சங்க வகைகளும் அவை மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பான தகவல்களை முன்வைத்தல்.

உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

இதற்கென படங்கள், படவரைபுகள், எண்ணக்கரு, சித்திரங்கள் என்பவறங்றைக் கொண்டு ஆக்கபூர்வமாக விடயங்களை முன்வைக்கவும்.

ஆறாம் குழு

பாடசாலை கூட்டுறவு சங்கம் தொடர்பாக பின்வருமாறு கூறப்படும் உபதலைப்புக்குரியதான விடயங்களைச் சேகரித்தல் உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும்.

- பாடசாலைக் கூட்டுறவு அமைப்பின் நோக்கங்கள்.
- இதன் மூலம் மாணவருக்கு வழங்கப்படும் சேவைகள்.
- அதன் வெற்றிகரத் தன்மைக்கு நீங்கள் பங்களிப்பு செய்ய வேண்டிய விதம்.

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவி

| | | | |
|---|---|---|---|
| 1. | மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் | : | இரண்டாந்தவணை |
| 2. | உள்ளடங்கும் தேர்ச்சி | : | 9.1.1 பல்வேறு தனியாள் திறமைகளை வெளிப்படுத்துவர்.<br>9.1.2 தேவையானபோது உறுதிப்பாட்டுடன் செயற்படுவர்.<br>9.1.3 போட்டிகரமான உலகினுள் சகவாழ்வை மேம்படுத்துவார்.<br>9.1.4 வாழ்க்கை சந்தர்ப்பங்களின் சவால்கள் மத்தியில் விளைதிறனான முடிவுகள் எடுப்பார். |
| 3. | உள்ளடக்கப்படும் விடயத்தொகுதி | : | சுயவிளக்கத்துடன் செயற்படுதல்.<br>சரியான முடிவுகளை எடுத்தல்.<br>இடர்களை முகாமைத்துவம் செய்தல். |
| 4. | மதிப்பீட்டுக் கருவியின் தன்மை (மதிப்பீட்டு வேறுபாடு) | : | களச் சுற்றுலா |
| 5. | மதிப்பீட்டுக் கருவியின் நோக்கங்கள் | : | விளைதிறனான முடிவுகள் எடுக்க வைத்தல்.<br>சகவாழ்வுப் பண்புகளை மேம்படுத்தல்.<br>தனது திறமைகள், ஆற்றல்கள் தாம் நடந்துகொள்ள வேண்டிய வீச்சின் அளவுகளை இனங்காண வைத்தல். |
| 6. | மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்கான ஆசிரிய அறிவுறுத்தல்கள் | : | இக்கருவியை செயற்படுத்தும் முழுப்பொறுப்பையும் ஆரம்பத்திலிருந்தே மாணவருக்கு வழங்கவும்.<br>களச் சுற்றுலாவினால் உள்ளடக்கப்படும் தேர்ச்சிகள் தொடர்பாகக் கரிசனை கொண்டவாறு சுற்றுலா செல்லும் தினம், இடம், நேரம், செயலொழுங்கு, கொண்டுசெல்லும் பொருட்கள் போன்றன உள்ளடங்கிய திடடமொன்றை மாணவரைக் கொண்டே செய்விக்கவும்.<br>இவ்வாறான நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள், மாணவர்கள் அவ்வாறான செயல்களினல் ஈடுபடுவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கவும்.<br>தேவையான அனைத்துப் பணிகளையும் ஆயத்தம் செய்யவும் செயற்படுத்தல்.<br>உத்தேச திட்டத்துக்கமைய சுற்றுலாவில் ஈடுபடவும்.<br>பணிகளைப் பாகங்களாக்கி அவற்றை நிறைவேற்று மாறு குழுக்களுக்கு ஒப்படைக்கவும். |

7. மதிப்பீட்டுப் பிரமாணங்கள் : அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
ஒற்றுமையாகச் செயற்படுதல்
எதிர்பாராத நிகழ்வுகள் குறித்துக் கவனமாக இருத்தல்.
முழுச் செயற்பாட்டினதும் நிறைவை எடுத்துக்காட்டும் சிறுநூல் (அறிக்கை) தயாரித்தல்.
களச் சுற்றுலாவை முன்னிட்டுக் கட்டியெழுப்பப்பட்ட சிறு வினாக்கொத்துக்கான விடைகளைப் பெறுதல்.

மாணவரால் தயாரிக்கப்பட வேண்டிய செயற்பாட்டுப்பத்திரத்துக்கு ஏற்ற பருமட்டான ஒரு குறிப்பு

சுற்றுலாவுக்கு முன்னர்

சுற்றுலா செல்லும் இடம்:
சுற்றுலா செல்லும் நாள்:
உங்களுக்கு விளங்கும் விதமாக
இச்சுற்றுலாவின் நோக்கங்கள்:
சுற்றுலாவினால் நீங்கள் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பவை:

சுற்றுலாவின் பின்னர்

உண்மையாகவே சுற்றுலாவின் மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்
சுற்றுலாவின் பின்னர் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை சுருக்கமாக விபரிக்கவும்.

## கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவி

1. மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் : மூன்றாந்தவணை

2. உள்ளடங்கும் தேர்ச்சி : பொது நன்மைக்குக் காரணமாக அமையும் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளுக்கு ஆதரவளிப்பார்.

3. வலியுறுத்தப்படும் தேர்ச்சி மட்டங்கள் : தமது பிரதேசத்துக்கு உள்ளூராட்சி மன்றங்களினால் நிகழ்த்தப்படும் சேவைகள் பற்றி விசாரிப்பார்.
உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பான பொதுமக்கள் பெறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவார்.
உள்ளூராட்சி மன்றமொன்றின் சேவைகனை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு மக்களின் பங்களிப்பில் உள்ள முக்கியத்துவத்தை மதிப்பார்.

4. மதிப்பீட்டுக் கருவியின் தன்மை (மதிப்பீட்டு வேறுபாடு) : தேர்ச்சி மட்டங்கள் உள்ளடங்கும் விதமாக வினாக்கொத்தொன்றைத் தயாரித்தல்.

5. மதிப்பீட்டுக் கருவியின் நோக்கங்கள் : உள்ளூராட்சி மன்றங்களின் ஆரம்பத்தையும் பரம்பலையும் பற்றித் தேடியறிதல்.
உள்ளூராட்சி மன்றங்களின் தேவைகள் பற்றி அறியச் செய்தல்.
உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும் விதத்தைத் தேடியறிதல்.
உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பு அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை விசாரித்தல்.
பொதுமக்கள் பிரதிநிதிகளினதும் பொதுமக்களினதும் பொறுப்புக்களையும் கடமைகளையும் விசாரித்தல்.

6. மதிப்பீட்டைச் செயற்படுத்துவதற்கான ஆசிரிய அறிவுறுத்தல்கள் : மாணவரை ஏற்றவாறு குழுக்களாக்கவும்.
வினாக்களை தயாரிப்பதற்காக தேர்ச்சி மட்டங்களுக்கு அமைய சம்பந்தப்பட்ட பாகங்களை மாணவர் குழுக்களுக்கு ஒப்படைக்கவும்.
வினாக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றுக்கான விடைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கவும்.
வினாக்களைத் தயாரிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கவும்.
தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கலந்துரையாடி ஏற்றவாறாக திருத்தியமைத்துக் கொள்ளவும்.
எல்லா வினாக்களையும் ஒன்றுசேர்த்து வினா - விடை நிகழ்ச்சித் திட்டம், அறிவுக்களஞ்சியம், போட்டி, எழுத்துப் பரீட்சைக்கான வினா - விடைக்கொத்துக்குத் தேவையான சந்தர்ப்பங்களை பயன்படுத்தவும்.

| | | | |
|---|---|---|---|
| 7. | மதிப்பீட்டுப் பிரமாணங்கள் | : | சம்பந்தப்பட்ட தேர்ச்சி மட்டங்களுக்கு அமைய வினா - விடைகளைத் தயாரித்தல்.<br>தயாரிக்கப்பட்ட வினாக்களின் போதுமான தன்மை<br>தயாரிக்கப்பட்ட வினாக்களின் தரம்.<br>சம்பந்தப்பட்ட பணிகளில் சுறுசுறுப்பான பங்கேற்பு.<br>நேரத்தை உரியவாறு பயன்படுத்தலும் நிறைவும். |